Registered as a Newspaper

பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர்

Tamilalai

அலை - 01 ஞாயிற்றுக்கிழமை, 21.12.2003 ஓசை -38



வாசகர்கள் அனைவருக்கும் கிறிஸ்த்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்

## மனோ + மலிக் = பூச்சியம்



## கிழக்கில் : படை-புலிகள் புரிந்துணர்வு





## சதாம் சரண் புரண்?

தமிழ்அலை வாரமலர் Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
21.12.2003

## சீர்குலைக்கும் விசமிகள்

கிழக்கு மாகாணத்தில் தமழ் முஸ்லிம் மக்களின் உறவைச் சீர்குலைத்து இரத்தக் களரியை ஏற்படுத்த முஸ்லிம் சமூகத்தில் சில அமைப்புக்கள் செயல்படுவது கவலை தரும் விடயம்.

கிண்ணியா மூதூர் பிரதேசங்களில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்களைக் கிளறி அரசியல் லாபம் தேடும் முயற்சியாகக் கடந்த வியாழனன்று ''முஸ்லிம் எழுச்சிக் குழு'' என்ற போர்வையில் விடுக்கப்பட்ட ஹர்த்தால் அழைப்பு முன்னறிவித்தலின்றி விடுக்கப்பட்ட ஒரு அறிவித்தலாகும்.

இதனை எதிர் பார்த்திராத தமிழ் மக்கள் வியாழனன்று போக்குவரத்துச் செய்தபோது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் முஸ்லிம் பிரதேசங்களில் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். பல பயணிகள் வாகனங்கள் கல் வீச்சினால் சேதமடைந்துள்ளன. காத்தான்குடியில் தனியார் பஸ் வண்டிகள் மீது முஸ்லிம் கும்பல்கள் நடத்திய தாக்குதலையடுத்து மட்டக்களப்பு நகரிலும் பதற்றமான ஒரு நிலை காணப்பட்டது. எனினும் விடுதலைப்புலிகளின் நகர அரசியல் பிரிவு தலையிட்டு இரு சமூகங்களுக்குமிடையில் எழ இருந்த மோதல் முறுகல் நிலையைத் தணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கும் ம்ஸ்லிம் பிரமுகர்களுக்கும் அல்லது முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிகையையடுத்து நடைபெற்ற பேச்சுக்களில் முஸ்லிம் சமூகத்துடன் இன ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவதற்கான தமது எண்ணத்தை ஒழிவு மறைவின்றி தெரிவித்ததுடன் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சமூகம் விவசாயம், வர்த்தகத் துறைகளில் எதிர் நோக்கிய பிரச்சினைகளும் சுமுகமாகத் தீர்வு காணப்பட்டது. எனினும் அன்னிய நாடுகளின் சதி வலையில் விழுந்துள்ள சில முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக விளங்கும் விடுதலைப்புலிகளுடனான முஸ்லிம்களின் உறவைச் சிதைத்து அதன் மூலம் சிலர் அரசியல் லாபம் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆதாரபூர்வமாகத் தெரியவந்துள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியாக வலியுறுத்தும் விடுதலைப்புலிகளின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்துக்கு முஸ்லிம் சமூகமும் முழுப்பலத்துடன் ஆதரவு வழங்க முன் வரவேண்டும். மாறாக சமூக ஒற்றுமைகளைச் சிதைத்து இரத்தக் களரியை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் சில முஸ்லிம் குழுக்களின் நடவ டிக்கைகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

# இரு சிங்களத் தலைமைகளுக்குமிடையில் இணக்கம் ஏற்படுவது சாத்தியமில்லை.

சிறிலங்காவின் இரண்டு சிங்களத் தலைமைகளுக்கு இடையே சமரசம் ஏற்படுவதற்குரிய சூழ்நிலை இன்னும் உருவாகாமலே உள்ளது. சரியாகச் சொல்லப் போனால் இந்த இரண்டு சக்திகளுக்குமிடையே உள்ள முறுகள் நிலை தினமும் அதிகரித்துக்கொண்டே போகின்றது என்றும் சொல்லலாம். ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்குமிடையே கருத்து ஒற்றுமைப்பாட்டை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளூடே சரியான தீர்வொன்றினைக் காண வேண்டும் என்பதற்காக முயற்சிகள் தினமும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. அந்த முயற்சிகள் தோல்வியடைந்து கொண்டிருப்பதாகத் தினமும் செய்திகளும் வெளி வந்தவண்ணமே உள்ளன.

தமிழர் தரப்பிற்கும் சிங்களவர் தரப்பிற்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்பதற்காக இப்போது சிங்களவர் தரப்பிற்கிடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுகின்ற கோலத்தை நாம் காண்கின்றோம். தமிழர் தரப்பு தன்னுடைய இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த ஆலோசனையை வழங்கிவிட்டு அடுத்த கட்ட நகர்வுக்காக காத்து நிற்கின்றது. இந்த நிலையில் இரண்டு சிங்களத் தலைமைகளும் தங்களுக்கிடையே ஆலோசனைகளை பரிமாறிக் கொண்டு வருகின்றன.


சிங்களத் தலைமைகள் பரிமாறிக் கொள்கின்ற ஆலோசனைகள் இனப்பிரச்சனை குறித்து அல்ல என்பதையும், தம்முள் எழுந்துள்ள அதிகாரப் போட்டி குறித்துத்தான் என்பதையும் இப்போது உலகமும் கண்டு நிற்கின்றது.

பாதுகாப்பு அமைச்சு குறித்து புதிய ஆலோசனைகளை ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பி வைக்கின்றார். அந்த ஆலோசனைகளை நிராகரித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய புதிய ஆலோசனைகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கின்றார். இதேவேளை ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரான மனோ தித்தவெலவும் பிரதமரின் ஆலோசகரான மலிக் சமரவிக்கிரமவும் தங்களுக்கிடையே ஆலோசனைக் கூட்டங்களை நடாத்துகின்றார்கள். இதுவரை எந்தவித முன்னேற்றமும் இல்லை.

இறுதிச் சந்தர்ப்பமாக இந்த வாரம் இந்த ஆலோசனைகளில் முன்னேற்றம் காணப்படலாம் என்றும் அதற்குரிய அரசியல் அழுத்தத்தை உலக நாடுகள் கொடுத்து வருகின்றன என்றும் ராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இந்தக் கடைசி நேர முயற்சி சரிவராமல் போகும் பட்சத்தில் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திப்பதற்கு சிங்களத்தின் இரண்டு தலைமைகளும் இப்போதே தயாராகி வருவதையும் நாம் காண்கின்றோம். தேர்தல் ஒன்றிற்குத் தயாராக இருக்கும்படி ஜனாதிபதி சந்திரிக்கா தனது கட்சியினருக்கு அறிவித்துள்ளார். அத்துடன் ஜனதா விமுக்தி பெரமுன ஜே.வி.பி யுடன் தேர்தல் ஒப்பந்தம் ஒன்றைத் தனது கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி விரைவில் செய்து கொள்ளும் என்றும் அம்மையார் அறிவித்துள்ளார்.

அதேபோன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கான அறிக்கைகளை விடுத்து வருகின்றார்.

மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்கு இரு தரப்பிலுமுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு இடம் இல்லை என்று 'கட்சி" ஒன்று சொல்கின்றது. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மட்டும்தான் அதிகார ஆசை இருக்க வேண்டுமா என்ன? இன்னும் சில ஆண்டுகளுக்குத் தங்கள் பாராளுமன்றப் பதவிகளைத் தக்க வைக்க வேண்டுமென்ற அதிகார ஆசை இவர்களுக்கு இருக்கக் கூடாதா என்ன?



பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டால் அதன் மூலம் தீர்க்கமான ஆணையை மக்களிடமிருந்து முக்கியமாக சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதனூடே சமாதானப் பேச்சுவார்த்தைகளை நகர்த்திச் செல்லலாம் என்றும் பல அரசியல் நோக்கர்கள் கருதுகின்றார்கள். ஆனால் நாம் அவர்களுடைய கருத்துக்களிலிருந்து வேறுபட வேண்டியவர்களாக உள்ளோம். அதற்கும் காரணங்கள் பல உண்டு.

**சபேசன்**

பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி அதன் மூலம் தனது கட்சியின் பலத்தை அறிந்து கொண்டு பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தலாம் என்று சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருதுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அது அப்படியாகும் பட்சத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான அடுத்த கட்ட நகர்வுகள் மேலும் தள்ளிப் போகக்கூடும். இல்லை பொதுத் தேர்தலை முதலில் நடாத்துவதாக இருந்தாலும் ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தைப் பிரயோகிப்பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தேர்தலை ஒத்திப் போடவும் கூடும். அந்த இடைப்பட்ட காலத்தில் தமிழ்மக்கள் மீது மீண்டும் ஒரு போரை அம்மையார் வலிந்து ஆரம்பிக்கவும் கூடும்.

தவிரவும் 'இந்தப் பொதுத் தேர்தல் உடனடியாக நடந்து முடிந்தாலும் அதனால் உருப்படியான பலன் ஏதும் கிடைக்க வாய்ப்புண்டா?" என்ற கேள்வியும் எம்முன் எழுகின்றது.

தமிழ் மக்களுக்குரிய உரிமையை சமாதானப் பேச்சுவார்த்தைகளூடே அளிப்பேன் என்று கூறி வருகின்ற ரணில் விக்கிரமசிங்க வரக்கூடிய பொதுத் தேர்தலில் பெருவெற்றி பெறுகின்றார் என்று வைத்துக்கொண்டாலும் அவர் மீண்டும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ்தான் செயலாற்ற வேண்டி வரும். மக்களின் ஆணை எப்படித்தான் இருந்தாலும் சிறிலங்காவின் அரசியல் யாப்பு சகல நிறைவேற்று அதிகாரங்களையும் ஜனாதிபதியிடமே அளித்துள்ளது. அவற்றை அந்த யாப்பை மாற்றுவதற்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையை சம்பந்தப்பட்ட கட்சி, அல்லது கட்சிகளின் கூட்டணிபெறவேண்டும். அப்படிப்பட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்க முடியாதவாறுதான் சிறிலங்காவின் தேர்தல் விதிகள் அமைந்துள்ளன.

சிறிலங்காவின் அரசியல் யாப்பானது சிங்கள-பௌத்த பேரினவாதத்தைச் செயல்ப்படுத்துவதற்காகவும், தமிழ் மக்களை ஒடுக்குவதற்காகவும் இயற்றப்பட்டதாகும். ஓர் அநீதியான யாப்பினூடாக நீதியான தீர்ப்பு ஒன்றைப் பெறமுடியாது என்பதை நாம் பலதடவைகள் வலியுறுத்திச் சொல்லி வந்துள்ளோம்.

இந்த வேளையில் இன்னுமொரு விடயத்தையும் நாம் இங்கே சேர்த்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும். இந்தச் சிங்கள-பௌத்த பேரினவாதமும் தமிழினத்தின் மீதான காழ்ப்புணர்ச்சியும் இன்று-நேற்று உருவானதல்ல! இதற்கு இன்றைய-நேற்றைய சிங்கள அரசியல்வாதிகள் மட்டும் காரணமல்ல. சரியாகச் சொல்லப்போனால் சிங்களத்து வரலாற்றைச் சொல்வதாகச் சொல்லப்படும் 'மகாவம்சம்" எழுதப்பட்ட காலத்திலிருந்தே தமிழினத்தின் மீதான காழ்ப்புணர்ச்சி இருந்து வந்திருக்கின்றது. இங்கு மகாவம்சம் எழுதப்பட்ட காலம் என்பதில் எழுதப்பட்ட என்ற சொல்லை நாம் அடிக்கோடிட்டே சொல்கின்றோம். மகாவம்சம் என்ற நூலின் வரலாற்றுப் புளுகுகள் குறித்து நாம் வலியுறுத்த விரும்புகின்ற கருத்து ஒன்றுண்டு. அதாவது மகாவம்சத்தைப் படித்தவர்களுக்கும், படிக்க முனைந்தவர்களுக்கும் ஒரு விடயம் தெளிவாகப் புரியும். மகாவம்சம் சிங்கள மக்களே மிகவும் மேன்மையான இனத்தைச் சேர்ந்த மக்கள் என்பதை மீண்டும்-மீண்டும் சொல்கின்றதோடு மட்டும் நிற்கவில்லை. தமிழினத்தின் மீதான விரோத-குரோத மனப்பான்மையை மகாவம்சம் வழி நெடுகிலும் சொல்லிச் செல்கின்றது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்.......)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகாரப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான டிசம்பர் 15 திகதி வரை நிர்ணயிக்கப்பட்டிருந்த காலக் கெடுமுடிவுக்கு வந்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசிடமிருந்த படைத்துறை,உள்துறை, மூன்று அமைச்சுக்களையும் மீள ஒப்படைக்கும் பட்சத்தில் மாத்திரமே விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் என பிரதமர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

படைத்துறை அமைச்சை மீள அரசாங்கத்திடம் கையளிக்க மறுப்பு தெரிவித்து வரும் ஜனாதிபதி நல்லிணக்க அரசு குறித்து தமது விடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எவ்வித பாதிப்புகளுமின்றி தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்து இரு பிரதான கட்சிகளும் அக்கறை கொண்டுள்ளன.

தற்போது சர்வதேசத்தின் பார்வை சதாம் பக்கம் திரும்பியுள்ள போதிலும் இலங்கையில் நிரந்தர வருகின்றது.

தொகுதி, மாவட்ட அமைப்பாளர்களை ஒன்று திரட்டி தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

# மனோ ~ மலிக் பூச்சியம்

ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் தன்வயப்படுத்தியதையடுத்து கொழும்பு அரசியல் நிலவரம் நெருக்கடிகளை எதிர் நோக்க





வேண்டி ஏற்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவில் முடிவடைந்த போதும் விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசிடம் சமர்ப்பித்திருந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபு தொடர்பாக அரசின் நிலைப்பாடு வெளியாவதற்கு இடையில் ஜனாதிபதி மேற்கொண்ட அதிகாரப் பறிப்பினால் நிலமை வெகுவாகப் பாதிப்படைந்தது.

இதனைகளையும் பொருட்டு ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சுக்களை நடத்திய போதும் இணக்கம் ஏற்படாததால் இருதரப்பு பிரச்சினைகளையும் பற்றி ஆராய குழு ஒன்றை நியமித்தனர்.

ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல. ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.கருணாரெத்தி பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக்சமரவீர ஆகியோர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டனர். இக் குழுவினரை சுருக்கமாக மனோ-மலிக் குழு என ஊடகங்கள் பயபடுத்தத் தொடங்கியது மனோ- மலிக்குழு ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான பிணக்குகளை ஆராய்ந்த போதும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. இதனையடுத்து டிசம்பர் மாதம் 15ம்திகதி என நிர்ணயிக்கப்பட்டிருந்த காலக் கெடு மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போது அது சாத்தியப்படவில்லை.

பிரதமரிடம் படைத்துறை, உள்துறை, ஊடகத்துறை ஆகிய

ஆலோசனைகளை பிரதமரிடம் முன்வைத்த போதும் பிரதமர் இணங்க மறுத்துவிட்டார். டிசம்பர் 15ம் திகதி மனோ- மலிக் குழுவினருக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்பு

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸ் கருத்து தெரிவிக்கையில் சமாதான முயற்சிகளுடன் கூடிய பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டிய தருணத்தில் அது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது குறித்து ஜனாதிபதி தரப்பில் யோசனை தெரிவிக்கப்பட்டதாகவும் அது குறித்து அடுத்த சந்திப்பில் ஆராயப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட ஊடகப்பணிப்பாளர் மனோ-மலிக் குழுவினர் இவ்விடயம் தொடர்பாக தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படும் என்றார்.

**அங்கதன்**

ஜனாதிபதி தரப்பு குழுவின் தலைவரான மனோதித்த வல்ல டிசம்பர் 16ம் திகதி வெளிநாடு சென்றிருந்தார். இவர் திரும்பிவர ஒருமாத காலம் தாமதமாகும் இந்நிலையில் மனோ மலிக் குழுவினர் பேச்சு அடுத்த ஆண்டும் தொடரப்படுமென ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்த போதும்.

இருதரப்பு பிரதிநிதிகளுக்குமிடையிலான பேச்சுக்கள் இணக்கப்பாடு இன்றி தோல்வியில் முடிவடைந்துள்ளதாக பிரதமர் அலுவலகத்தை மேற்கோள் காட்டி அதிகார தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக இரு தரப்பும் தேர்தல் ஒன்றுக்கு தங்களை தயார்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான சூழல் நெருங்கி

அரசியல் தீர்வு காணும் விடயத்தில் அனேக நாடுகளும் தொடர்ச்சியான அக்கறை கொண்டுள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை வருகிறார் இவர் விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கு மிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு வலியுறுத்துவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

இருப்பினும் நாடாளுமன்றம் கலைகப்படும் பட்சத்தில் இவரது வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையாது என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி ஜே.வி.பி யுடன் கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான இறுதிக் கட்டப்பணிகளை மேற்கொண்டிருப்பதுடன் சிறுபான்மை கட்சிகளையும் ஓர் அணியில் இணைக்கும் முயற்சியில்

ஈடுபட்டுள்ளன

ஈ.பி.டி.பி. புளொட் ஈ.பி.ஆர்.எல் வரதர் அணி மலையக





மக்கள் முன்னணி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிகளுடனும் பேரம் பேசுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நிற்கும் மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணக்க மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை மாவட்ட ரீதியாகக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டு

## நம்ம ஜனாதிபதியும் ஜனநாயகமும்

நம்ம ஜனாதிபதிக்கு
அரசியல் யாப்பில்
பல அதிகாரங்கள் இருக்கலாம்
ஆனால்–
அவர் இப்போது செய்வது
நீதியானதா, அநீதியானதா
என்பதே முக்கியம்
மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு
அரசாங்கத்தை தனி நபர்
ஒருவர் தன்னிஷ்டப் படி
பந்தாடலாமா?
ஒரு தனிநபர், மூன்று
அமைச்சுகளைத் தன்னிடமே
வைத்துக் கொள்ளலாமா?
அரசாங்கத்தின் தலைவர் பிரதமர்
அவர் வேறொரு கட்சியைச்
சேர்ந்தவர் என்பதால்
அவரது நடவடிக்கைகளைக்
கட்டுப்படுத்தலாமா?
தனது கட்சி ஆட்சியிலிருந்த போது
நாட்டில் ரத்த ஆறு ஓடவிட்டவர்
தலைமை ஜனாதிபதி அதிகாரத்தால்
அதைத் தடுத்து நிறுத்த முடியாதவர்
வேறு ஒரு அரசாங்கம்
அதைத் தடுத்து நிறுத்தி
சமாதானத்தை ஏற்படுத்தியதைப்
பொறுக்காது, அரசுக்கு எதிராக
அப்பட்டமான
ஜனநாயக விரோத
நடவடிக்கைகளை
மேற்கொள்ளலாமா?

ஜனாதிபதியின் மனச்சாட்சிக்கு
இவை சமர்ப்பணம்.

**அன்பன்**

## போடியார் பொறிவெடி

மீண்டும் போர் மூன
இந்தியா முழு அவ
உதவும்

- முப்பன

முந்தி பாதி
அளவில உதவ
வந்துதான் பாதி
பாதியா செத்தவ
இப்ப முழு அளவ
உதவ வந்து முழு
சாகப்
போறாங்கடோ....



# மணலாறு; தமிழர் தாயகத்தின் இதயபூமி!

தமிழர் தாயகத்தின் இதயபூமி மணலாறு என்பதை ஈழத்தமிழ்த் தேசிய விடுதலைப் போர்ாட்ட வரலாற்றின் இரு தசாப்த காலத்திற்கும் மேலான காலப் பகுதி வெளிப்படுத்தி நிற்கின்றது. முல்லைத்தீவு- வவுனியா மாவட்டங்களையும், திருகோணமலை மாவட்டத்தையும் இணைக்கும் பிரதேசமே ''மணலாறு'' ஆகும். இலங்கைத் தீவின் கிழக்குக் கடலோரத்தில் இது அமைந்தமை இதன் கேந்திர முக்கியத்துவத்தை அதிகரிக்கின்றது. மணலாறு ஈழத்தமிழ ர்களின் அடிப்படை விருப்புக்களில் ஒன்றான ஈழத்தமிழர் மரபு வழித்தாயகக் கோட்பாட்டின் இருப்பிற்கு எத்துணை முக்கியமானது என்பதை கீழ் வரும் இரு வேறுபட்ட மேற் கோள்கள் மூலம் விளங்கிக் கொள்ளுங்கள்.

''வணங்காமண்'' என்ற நூலுக்கு ஈழத்தமிழர் களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரும், தமிழீழத் தேசியத் தலைவருமான மேதகு.வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''மணலாறு மண்ணுக்கு ஒரு தனித்துவம் உண்டு. தனக்கே உரித்தான' வரலாறு உண்டு. புவியியல் ரீதியான முக்கியத்துவம் உண்டு. இது எமது தாயகத்தின் 'இதயபூமி'

ஈழத்தமிழ் மக்களின் அடிப்படை விருப்புக்களை வென்றெடுக்க பணியாற்றும் சக்தி மேற்கண்டவாறு கூறி நிற்க, தமிழர் தாயகத்தை ஏப்பம்விடத்துடிக்கும் சிங்களத் தேசத்தின் படைத்துறைத் தளபதிகளுள் ஒருவரான பிரிகேடியர் கிரன்

**சுதந்திரத்திற்கு முன்பிருந்தே சிங்கள ஆளும் வர்க்கம் தமிழர் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமித்து, தமிழர்களை அவர்களின் சொந்த பூமியிலேயே சிறு பான்மையினராக்கி முன்பு சிலாபம், நீர்கொழும்பு பகுதிகளில் சிங்களவர் மத்தியில் வாழ்ந்த தமிழர்கள் காலப்போக்கில் சிங்களவர்களாக மாற்றப்பட்டதைப் போல- அனைத்து தமிழர்களையும் சிங்களவராக்கி, இந்த நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கே உரியதாக்க வேண்டும். என்ற கேந்திர நோக்கை (Strategic obiective) அடைவதையே குறியாகக் கொண்டு பௌத்த சிங்கள பேரினவாதக் குடியேற்றச் சித்தாந்தம் செயற்பட்டதை அவதானிக்கலாம்.**

கலன்கொட பின்வருமாறு கூறுவது மணலாற்றின் தேவைப்பாட்டை மேலும் எமக்கு வலியுறுத்துவதைக் காணலாம்.

''.....இராணுவ ரீதியாக வெலிஓயா (மணலாறு) மிக முக்கியமானது. அங்கு எமது பிரசன்னம் இருப்பின் அது வடக்கு- கிழக்கை இணைக்க அனுமதியாது. நாங்கள் அங்கு இருக்கும் வரை பயங்கரவாதிகளால் (புலிகளால்) ஈழத்தை வெல்ல முடியாது. நாம் அங்கிருந்து வெளியேறினால் அது பதவியா கெப்பிட்டிகொடவா ,ஈற்றில் அனுராதபுரம் ஆகியவற்றை பாதிக்கும்'' (sunday observer 22-2-98)

தமிழர் தாயகத்தைத் துண்டாடி தமிழ்த் தேசியக் கட்டமைப்பைச் சிதைத்து விடும் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் போரியல், அரசியல், பொருண்மிய நகர்வை வெளிப்படுத்தி நிற்கும் கூற்றாகவே இதனைக்காண முடிகிறது.

வரலாற்று வாதத்தைச் சரிவர விளங்கிக் கொண்ட சிறிலங்காவின் பௌத்த சிங்களப பேரினவாத அரசாங்கங்கள் வடக்கு- கிழக்கு மாகாணத்தைப் பாரம்பரிய தாயக ஆள்புலமாகக் (Traditional-homeland-territory) கொண்ட ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தை வேரறுத்து, ஈழத்தமிழினத்தைத் தேசியமற்ற இனமாக்கும் நோக்கோடு தாபனயப்படுத்தப்பட்ட சிங்கள குடியேற்றங்களைக் காலத்துக்குக் காலம் மேற்கொண்டு வந்துள்ளதைக் கடந்த 54 ஆண்டு கால வரலாறு சுட்டி நிற்கின்றது. ''நாம் எல்லைகளில் குடியேறாவிடின் எல்லைகள் எம்மை நோக்கி நகரும்'' (If we do not occupy the border the border will come to us) என்று ஜே. ஆர் ஜெயவர்த்தனா முன்பொரு தடவை கூறியது சிங்களக் குடியேற்ற சிந்தனையைப் படம் போட்டுக் காட்டி விடுகிறது.

சுதந்திரத்திற்கு முன்பிருந்தே சிங்கள ஆளும் வர்க்கம் தமிழர் பாரம்பரிய நிலங்களை ஆக்கிரமித்து, தமிழர்களை அவர்களின் சொந்த பூமியிலேயே சிறு பான்மையினராக்கி முன்பு சிலாபம், நீர்கொழும்பு பகுதிகளில் சிங்களவர் மத்தியில் வாழ்ந்த தமிழர்கள் காலப்போக்கில் சிங்களவர்களாக மாற்றப்பட்டதைப் போல-அனைத்து தமிழர்களையும் சிங்களவராக்கி, இந்த நாட்டை சிங்கள பௌத்தர்களுக்கே உரியதாக்க வேண்டும். என்ற கேந்திர நோக்கை (Strategic obiective) அடைவதையே குறியாகக் கொண்டு பௌத்த சிங்கள பேரினவாதக் குடியேற்றச் சித்தாந்தம் செயற்பட்டதை அவதானிக்கலாம்.

மேற் போந்த உள் நோக்கங்களை நிறைவேற்ற ''ஒரு நாட்டின் தலைமைப் பீடத்திற்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு அந்த நாட்டில் உள்ள மக்களை அவர்களினதும், நாட்டினதும் மேம்பாடு கருதி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு சென்று அந்த நாட்டு அரசால் குடியேற்றலாம்'' என்ற சர்வதேச குடியேற்ற விதி முறை சிங்கள அரசால் எடுத்துக் கூறப்பட்டமை சர்வதேச நிதி உதவிகளை சிங்களக் குடியேற்றங்களுக்கு ஈட்டிக் கொடுத்தது என்றார்கள் தமிழீழ ஆய்வாளர்கள்.

வட தமிழீழத்தையும், தென் தமிழீழத்தையும் இணைக்கும் இதய பூமியாய்த் திகழும் மணலாற்றைச் சிங்களவர் வசப்படுத்துவதன் மூலம் தமிழர் பாரம்பரிய தாயகத்தை வடக்குத் தெற்காக துண்டுபடுத்தி விடலாம் என்பது சிறிலங்கா அரச இயந்திரத்தின் திட்டமாக இருந்தது.

1965-1968 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடனடி அபிவிருத்தித் திட்டமாக ''மகாவலி- L வலயம்'' என்ற பொருண்மிய திட்டப் பெயருடன் 1988 ஏப்ரல் 15 ஆம் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் மணலாறு ''வெலி ஓயா'' என்ற சிங்கள நாமகரணம் சூட்டப்பட்டு சிறிலங்காவின் 26 ஆவது மாவட்டமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் செய்சட்டத்தின் கீழ் அப்போதைய காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரான

காமினி திசாநாயக்கா அவர்கள் 1988-03-28 திகதியிட்டு அதில் கையொப்பமிட்டிருந்தார். ஈழத் தமிழர்களின் பாரம்பரிய பூமியான மணலாற்றில் தமிழர்கள் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வந்தனர். இப் பிரதேசத்தை பல்லாயிரம் தமிழ் விவசாயிகள் வளப் படுத்தியிருந்தனர். 1965 இல் வவுனியா நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின் வட எல்லையைச் சார்ந்த பகுதிகளில் தமிழ் வர்த்தகர்கள் ஒவ்வொன்றும் நூறு ஏக்கருக்கும் மேலான பரப்பளவுடைய 15இற்கும் மேற்பட்ட மத்திய தரப் பண்ணைகளை அமைத்திருந்தனர். கென்ற் பாம், டொலர் போம், ரேடியோக்கமம், ஆனந்தா றேடிங்கோ, ஜெபஜோதி அன்கோ, றெயில்வே குறூப், ராஜரட்டினம், அம்பலவாணர், காகோ போட்கோ, அரிய குண்டான் , செல்லத்துரை, சிலோன் தியேட்டர், நடராஜா, போரல் குறூப் முதலானவை அப் பண்ணைகள். இவை 99 ஆண்டு காலக் குத்தகைக்குத் தமிழ் வணிகர்களால் பெறப்பட்டிருந்தன. மேற்படி ''டொலர்'' மற்றும் ''கென்ற்'' பண்ணைகள் டாக்டர் ராஜசுந்தரத்தைச் செயலாளராகவும் பொறியியலாளர் டேவிட்டைத் தலைவராகவும் கொண்டியங்கிய ''காந்தியம்'' அமைப்பால் நிறுவப்பட்டன என அறிய முடிகிறது.

1977 ஆகஸ்ட், 1981 இனக் கலவரங்களின் போது இடம் பெயர்ந்து வன்னிப் பகுதிக்கு வந்த மலையகத் தமிழர்களுக்கு சுய முயற்சியில் உற்சாகமூட்டி மறு வாழ்வு அளித்து ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற சிறப்பை வெளிக்காட்டியதும் மேற்படி ''காந்தியம்'' அமைப்பு தான்.

1970 களின் பிற்பகுதியிலும் 1980 களின் முற்பகுதியிலும் மணலாற்றின் வளப்படுத்தப்பட்ட பொருண்மிய





மையங்களில் அடாத்தாக சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1983 -1989 காலப் பகுதியில் இப் பிரதேசத்தில் 8, 364 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டதாக அறியக் கிடக்கிறது.

1984 இல் சிறிலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக லலித்அத்துலத்முதலி பதவியேற்றதும் மணலாற்றை சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கை இஸ்ரேலிய ''மொசாட்'' உளவுப்பிரிவின் ''நிபுணத்துவ'' ஆலோசனையுடன் தீவிரம் கண்டது. மணலாற்றை ''வெலி ஓயா'' என்ற தனிப்பிரிவாக மாற்றி முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் ஆட்சியினின்றும் விடுவித்து கடல் எல்லை இல்லாத அனுராதபுரம் மாவட்டத்துடன் காலப்போக்கில் இணைக்கும் மிகப் பயங்கரத் திட்டம் லலித்துடையதே ஆகும். வடமேற்கே நெடுங்கேணி, தென்மேற்கே பதவியா, வடகிழக்கே கொக்கிளாய், தென்கிழக்கே தென்ன மரவாடியும் அடங்கியதாக ''வெலி ஓயா'' சிங்களப் பெயரிடப்பட்ட பிராந்தியம் மணலாற்றில் திட்டமிடப்பட்டது.

சிங்கள குடியேற்றத்தைப் பிரதான கூறாகக் கொண்ட ''வெலி ஓயா'' திட்டத்தின் பிரகாரம் சிங்கள விவசாயிகளும் மீனவர்களும் அங்கு குடியமர்த்தப்பட்டனர். கொக்கிளாய் - நாயாறு பகுதிகளில் பருவ கால மீன் பிடிக்கு முன்பு வந்து சென்ற சிங்கள மீனவர்களும் மரம் வெட்ட அல்லது பழம் பொறுக்க வந்து சென்றவர்களும் நிரந்தரமாக் குடியமர்த்தப்பட்டனர். கடுங்குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்ட சிங்களச் சிறைக்கைதிகளும் (1988-1989இல் 3,000பேர்) இங்கு குடியேற்றப்பட்டனர்.

சிங்களப் படைத்துறையும் காடையர்களும் தமிழர் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்ட நிலையில், 1984 டிசம்பர் 24 இல் ஒலி பெருக்கி அறிவிப்பு மூலம் சுமார் நாற்பத்திரெண்டு கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் 24 மணி நேரத்தினுள் விரட்டியடிக்கப்பட்டனர். இதில் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆதர் வோரத் முக்கிய பங்கு ஆற்றி கிறிஸ்துப் பிறப்பு மாட்டுத் தொழுவத்தில் யேசுநாதர் அவ்தரித்த நாளில் மணலாற்றுத் தமிழர் ''குந்த ஒரு குடி நிலந்தானும் இன்றி'' ஏதிலிகளான (அகதிகள்) அவலம் அன்று அரங்கேறியது. தமிழர் பிரதேசத்தில் சிங்களதேசம் மேற் கொண்ட மண் பறிப்பை விரைவாக சிங்களக்காடையர்களின் வெறித்தனத்துக்குப் பலியான அப்பாவித் தமிழர்கள் ஏராளம்; இவ்வகையில் ''ஒதியமலைப்படுகொலை'' குறிப்பிடத்தக்கதாகும்.

1988 மார்ச் 28 திகதியிட்டு வெளியான வர்த்தமானிப் பிரகடனத்தையடுத்து திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடி, கொட்டாக்கேணி, அமாரிவயல், புல்மோட்டை ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 7,590 குடும்பங்கள் உள்ளடங்கலாக 13,208 தமிழ் குடும்பங்கள் சட்ட பூர்வமாக மணலாற்றிலிருந்து வெளியேற்றப்பட்டு தமிழர்களின் மத்தியதரப் பண்ணைகளும் பறிக்கப்பட்டதுடன் 42 தமிழ் கிராமங்கள் முற்றாகச் சிறிலங்கா அரசின் வசமாகின. நெடுங்கேணியைக் கூட இவ்வாறு சட்டபூர்வமாக வசப்படுத்த எடுத்த முயற்சி தீவிரமடைந்த போரால் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது. தமிழ் கிராமங்கள், சிங்கள கிராமங்கள் ஆன போது சிங்களப் பெயர்கள் பல சூட்டப்பட்டன. மண்கிண்டிமலை , தண்ணிமுறிப்பு குறுத்த மலை போன்ற பாரம்பரிய தமிழ்க்கிராமங்களை ஜானகபுர, பராக்கிரமபுர எனப் பெயரிடப்பட்டதை இவ்விடத்தில் நினைவூட்டலாம்.

நிறுவனப்படுத்தியதாக 1984 இல் ஆரம்பமா 1988 இல் முழு வடிவம் எடுத்த ''வெலி ஓயா'' திட்டத்தின் பின்னணியில் மிக ஆழமான, இரகசியமான இன்னொரு காரணமும் கூறப்பட்டது. தமிழீழம் உருவாக்கப்பட்டால் கூட

## துரை-மேகநாதன்

தென்தமிழீழத்தை வட தமிழீழத்துடன் இணையாது வைத்திருக்க ''வெலி ஓயா'' உதவும் என்பதே அந்த இரகசியம்

சிங்கள அரசியல் வாதிகளின் இது தொடர்பான கண்ணோட்டத்தைப் பாராளுமன்ற விவாதத்தில் அப்போது ''லக்ஷமன் ஜெயக்கொடி'' (முன்னாள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சர்) ''....வடக்கு மாகாணத்துடன் இணைந்த வெலிஓயாவில் சிங்கள மக்களின் முக்கிய தேவைகளை விரைவில் தீர்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் வெலி ஓயாவிலிருந்து வெளியேறுவதைத் தடுக்கவும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுமைய தமிழ்ப் பிரதேசங்கள் எனக் கூறப்படுவ அர்த்தமற்றதாக்கவும் முடியும்.....'' என்று உரைத்திருப்பத மூலம் சிங்கள மேலாதிக்கத் தன்மையைக் கண்டுணரலாம்.

மணலாற்றைச் சிங்கள மயப்படுத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தின் ''நால்வர் அணி'' முக்கிய பங்காற்றியதென விமர்சகர்கள் தெரிவிப்பர். ஐக்கியதேசியக் கட்சியைத் சர்ர்ந்த அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா, சிறில் மத்யூ மற்றும் மகாவலி அபிவிருத்தி சபைத் தலைவர் பண்டிதரத்ன ஆகியோரே அந் நால்வர் அணியாகும். இவர்களுடன் ஜே.ஆரின் புத்திரரான ரவி ஜெயவர்த்தனாவும், மகாவலி அபிவிருத்தி சபையைச் சேர்ந்த மாலிங்க ஹேர்மன் குணரட்ணவும் மணலாற்றை வெலிஓயாவாக மாற்றியதில் கணிசமான பங்காற்றியதை மறந்துவிட முடியாது. பிள்ளையவரின் For a soverign state'' என்ற ஆங்கில நூலை ஒரு தரம் வாசித்துப் பாருங்கள்.

இவ்வாறு சிறிலங்கா அரசாங்கத்தின் சதிகள் நிறைந்த திட்டங்களையும், நிலப்பறிப்பையும் தமிழரின் ஏக போராட்ட சக்தி தெளிவாக அறிந்ததுடன் ,வெளிப்படையாகவும் பரப்புரை செய்தது.


*(தொடர்ச்சி 19ம் பக்கம்.....)*

# கிழக்கில்:— படையினர் புலிகள் புரிந்துணர்வு

படைத்துறை, உள்துறை, ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்குமிடையில் பேச்சுக்கள் தொடர்பறுந்து ஒரு விரிசல் நிலை ஏற்பட்டுள்ள நிலையிலும் கிழக்குமா காணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளுக்கும், படைத்தரப்பினருக்கு மிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துகையிலான சந்திப்புக்கள் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதி படைத்துறை அமைச்சினைப் பொறுப்பேற்றதையடுத்து சிறிலங்காப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர்மூண்டு விடும் என்ற ஒருபதற்றமான சூழ்நிலைநிலவிய போதும் படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் சந்திப்புக்கள் நடைபெறுவதற்கு சந்திரிகா மறைமுகமாகவோ அல்லது நேரிடையாகவோ தடையாக இருப்பார் என நோக்கப்பட்ட நிலையிலும் கூட அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இரு சந்திப்புக்கள் நடைபெற்றுள்ளன.

இதன் முதலாவது சந்திப்பு கடந்த நவம்பர் மாதம் 15ம் திகதி அக்கரைப்பற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பதில் தலைவர் ஒகஸ்டா தலைமையில் நடை



பெற்றது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வாவா, அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன், அம்பாறை மாவட்ட நிருவாகசபைப் பொறுப்பாளர் தேவதீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட அதிரடிப்படை சார்பில் பொலிஸ் அத்தியட்சகர் உபுல்செனிவரெத்தின, உதவிப் பொலிஸ்அத்தியட்சகர் லியனாராட்சி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருக்கோவில் வைத்தியசாலை அதிரடிப்படை முகாம், காஞ்சிரங்குடா முகாம் ஆகிய வற்றினை அகற்றுவது தொடர்பாக விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருந்தனர். தற்போது பெய்யும் மழை ஓய்ந்து வெள்ளம் வடிந்ததும் எதிர்வரும் ஜனவரி மாதம் முகாம்களை இடம் மாற்றுவதாக படைத்தரப்பு விடுதலைப்புலிகளிடம் தெரிவித்திருந்தனர்.

இதன் நல்லெண்ணமுயற்சியாக நவம்பர் 25ம் திகதி சாகாமம் வீதி மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டது.

13வருடங்களுக்குப் பின் இவ் வீதி திறந்து விட்டு போக்குவரத்தை இலகு படுத்தவும் படைத்தரப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நல்லுறவை வலுவூட்டுவனவாக அமைந்தன.

இதேவேளை நவம்பர் 15ம் திகதி நடைபெற்ற இருதரப்பு பிரதி நிதிகளுக்குமிடையிலான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் டிசம்பர் 15ம் திகதி அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இரு தரப்புப் பிரதி நிதிகளுக்குமிடையிலான சந்திப்பு இடம் பெற்றது. விடுதலைப் புலிகள் தரப்பில் மட் அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலான குழுவினரும், விசேட அதிரடிப் படைத்தரப்பில் அம்பாறை மாவட்ட விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனிவிரெத்தின தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

இருதரப்பினருக்குமிடையில் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலான ஒரு களமாக அமைந்திருந்தது.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் ஈழத்தமிழினத்தால் மிக உணர்வு பூர்வமாக மாவீரர் தின நிகழ்வுகள் அண்மையில் அனுஷ்ரிக்கப்பட்ட போது வடக்கிலும் வவுனியா, திருகோணமலை, மாவட்டங்களிலும் சிறிலங்கா படையினர் மாவீரர் நாள் நிகழ்வுகளை சீர்குலைத்து பல்வேறு அசௌகரியங்களை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி பொதுமக்களுக்கும் படைத்தரப்பினருக்குமிடையில் ஒரு முறுகல் நிலையை உருவாக்கிய போதும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் மாவீரர் தின நிகழ்வுகள் இனிதே நடந்தேறின. இடையூறுகளை ஏற்படுத்தாது படைதரப்பினர் ஒத்துழைப்பு வழங்கியமைக்கு விடுதலைப் புலிகள் பாராட்டுத் தெரிவித்ததுடன் 13 வருடகாலமாக மூடப்பட்டிருந்த சாகாமம் வீதியை மீள பொதுமக்கள் போக்குவரத்துக்கு திறந்து விட்டமைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இவை தவிர மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இருதரப்பினரும் இணக்கப்பாடுகளுடன் புரிந்துணர்வுடன் செயற்படுவது குறித்தும் தீர்மானித்தனர். அத்துடன் திருக்கோவில் வைத்தியசாலை கட்டடத்தில் இருக்கும் படைமுகாமையும் காஞ்சிரங்குடா படை முகாமையும் வேறு இடத்துக்கு மாற்றுவது தொடர்பாக மீள விடுதலைப்புலிகள் படையினர் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

விரைவில் இதனை நிவர்த்தி செய்வதாக படைத் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.



இருதரப்பினருக்குமிடையில் இச் சந்திப்புக்கள் புரிந்துணர்வின் அடிப்படையில் நடந்தது என்றே கூறலாம்.

ஈழப்போராட்ட காலத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சிறிலங்காப் படையினரால் உயிரிழந்த தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை சொல்லிலடங்காதவை.

அதிலும் 86ம்ஆண்டு காலப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் கொடூரம் மிகக் கொடியது. அப்பாவித் தமிழ் இளைஞர்களை உயிருடன் பிடித்து சித்திரவதைப்படுத்தி டயர் போட்டு எரித்த அதே படையணியைச் சேர்ந்த அதிரடிப்படையினர் தற்போது சமாதானத்தின் தேவை அறிந்து தமிழ் மக்களுடனும் விடுதலைப்புலிகளுடனும் இன ஐக்கியத்தை ஏற்படுத்த முனைவது எதிர்காலத்தில் இரு தரப்பினருக்குமிடையில் வேண்டத்தகாத மோதல் முறுகல் நிலைகளைத் தவிர்க்கப் பேருதவியாக அமையும்.

இவை ஒருபுறமிருக்க மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் தவிர்ந்த வடக்குக் கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் படைத்தரப்பினரின் செயற்பாடுகள் புரிந்துணர்வுடன்படிக்கைக்கு அமைவாகக் காணவில்லை. மாறாக ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளிலும் பொதுமக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் மட் அம்பாறை மாவட்டங்களில் அதிரடிப்படைத் தரப்பினர் விடுதலைப் புலிகளுடன் நட்புறவினைப் பேணுவது போன்று ஏனைய மாவட்டங்களிலும் பேண முயற்சித்தால் வலுவான ஒரு சமாதானத்தை நோக்கிய பாதையைச் செப்பனிடுவதுடன் புரிந்துணர்வையும் கட்டி எழுப்ப முடியும்.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஜனாதிபதியால் படைத்துறை, உள்துறை, ஊடகத்துறை ஆகிய அமைச்சுப் பொறுப்புக்களைத் தன்வசப்படுத்தியதையடுத்து தேக்க நிலையடைந்துள்ளது.

அனுசரணை வழங்கிய நோர்வே சமரசப் பணியிலிருந்து விலகி விட்டது. சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதானால் படைத்துறை

**வேணிதன்**

உள்ளிட்ட மூன்று அமைச்சுப் பொறுப்புக்களும் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். பேச்சை ஆரம்பிக்க வேண்டியது பிரதமரே எனவும் பேசிப் பேசி இறுதியில் இரு தலைவர்களுக்குமிடையில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

புரிந்துணர்வுடன்படிக்கையின் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதில் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுத்தலைவர் ஒரு தலைப் பட்சமாகச் செயற்படுகிறார் என்ற ஜனாதிபதியின் குற்றச்சாட்டு. இவ்வாறு பல்வேறு சிக்கல்களிலும் உருக்குலைந்து போயுள்ள உடன்படிக்கை ஊசலாடும் நிலையில் கிழக்கில் படையினர் புலிகள் சந்திப்புக்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருத இடமுண்டு.

## சொன்னாலும் குற்றம்



**கிழக்கு மாகாணத்தில் இனிக்கிற மாவட்டம் ஒன்றின் நகர்ப்புறத்தில் இருக்கும் ஆண்களுக்கான எதிர்ப் பெயருடன் இயங்கும் பகலவன் சங்கத்தினர் அன்னிய நாடுகளிலிருந்து அள்ளி இறைக்கிற பணத்தைவைச்சு சாந்தி, சமாதானம் ,சமத்துவம், அடக்குமுறை உதவி, பதவி எண்டுகூத்தும் கும்மாளமும் காட்சியும், ஆட்சியும், கூட்டமும் ஆட்டமும் எண்டு பகல் வித்தை காட்டி பாடுவதாக கூறும் பம்மாத்து பேர் வளிகள் போன வாரம் ஒரு கூத்தைக் காட்ட வெளிக்கிட்ட முதல் நாளே அசிப்பில்லாமல் அந்தக் கூத்து அரங்கேறாமல் நிறுத்திப் போட்டாங்களாம்.**

**இப்படியான கூத்துகள் ஆடுவதற்கு முன் அங்குள்ள பெண்கள் அமைப்புடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று அவங்களையும் இணைந்து செய்யுமாறு ஆலோசனை கூறப்பட்டதாம்.**

**இந்த ஆலோசனையைக் கேட்ட அந்தச் சங்கத்தின் தலைவி அப்படியொரு அமைப்பு இருக்கிற சங்கத்தைத் தமக்குத் தெரியாது என முழுப் பூசனிக்காயை சோத்துக்குள் புதைத்தாவாம்.**

**சர்வதேச நாடுகளிலிருக்கிற அமைப்புக்கள் மட்டும் தான் இந்த மனிசிக்குத் தெரியும். ஊருக்க இருக்கிற உருப்படியான அமைப்பைப் பற்றி தெரியாம ''சமத்துவம் ''கதைக்க வெளிக்கிட்டதுப்பற்றி ஆச்சரியமாக இருக்கிறது எண்டு யுத்தத்தால பாதிக்கப்பட்ட பெண்கள் கதைப்பதிலும் உண்மையுண்டு அல்லவா?**

"நான் பாடசாலைகளுக்கு உரமுள்ள அல்வாங்குகளை அனுப்பினேன். ஆனால் பாடசாலையில் இருந்து திருப்பி அனுப்பப் பட்டவைகள் குண்டுசிகளே" எனும் கவிப்பேரரசு வைரமுத்துவினுடைய வரிகள் இன்று பாடசாலைக் கல்வியின் தரத்தை மிகத் தெட்டத் தெளிவாக விளக்கி நிற்கின்றது இன்றையப் பாடசாலைகளில் தலையாய கடமை சமூகம் தம்மிடம் ஒப்படைக்கும் பிள்ளைகளைச் சமூகத்திற்குப் பொருத்தப்பாடு உடையோராயும் அறிவு, திறன், மனப்பாங்கு உள்ளவராயும் ஒரு சிறந்த சமூக சிற்பியினையும் வடிவமைத்து சமூகத்தின் கைகளில் ஒப்படைக்க வேண்டும். ஆனால் இந்த நிலமை இன்று "ஏட்டுச் சுரைக்காயாய் உள்ளது" இதற்கான காரணம் யார்? ஆசியர்களும் அதனோடு தொடர்புடைய

# கல்விக்கு ஆசிரியர்கள் காப்பரண் அமைப்பார்களா?

கல்வி .சார் ஊழியர்களுமே ஆகும். ஏனெனில் ஒருவனை சிறந்த விஞ்ஞானியாகவும், கணித மேதையா கவும் வைத்தியனாகவும் ஆக்கு பவனும் ஆசியரியன். அதே ஒருவனை சமூக விரோதியாகவும் நெறிபிறழ்தன்மை கொண்ட பண்பாடற்றவனாகவும் ஆக்குபவனும் அவ் ஆசானே ஆகும் .

இன்றையப் பாடசாலையில் கல்வியில் ஆசியர்களின் பங்கு அளப் பெரிய ஒன்றாகும். அதாவது "தீயானது ஆக்கத்திற்கும் பயன் படக் கூடியது அது அழிவுக்கும் பயன்படக் கூடியது. ஆனால் அது பற்றும் இடத்தை பொறுத்தது. அதே போன்றே எம் தமிழீழ சமூக ஆசிரியர்களும் மாணவர்களுடைய ஆக்கம் அழிவுக்குக் களம் அமைக்கும் வகையில் வழிகாட்டக் கூடாது.

இன்றைய ஐ.நா சபை சட்ட விதியின் பிரகாரம் 'அனைவரும் கல்வி உரிமை பெற உரித்துடையவர் எனக் கூறுகின்றது. 1990ம் ஆண்டு ஐ.நா. சபையின் மனித உரிமை சாதனத்தின் கல்வி மனித சமூகத்தின் அடிப்படைத் தேவையாக சர்வதேச அளவில் உறுதி செய்தற் பொருட்டு தாய்லாந்து நாட்டிலுள்ள ஜோமனியன் மாநாட்டு நிகழ்வில் உலக நாடுகளில் எல்லோருக்கும் கல்வி



வழங்குதல் தொடர்பாகச் சத்தியப் பிரமாண த்தினையும் ஏற்படுத்தியது. அத்தோடு 1997ம், ஆண்டு இலங்கையில் புதிய கல்விச் சீர் திருத்தத்தின் பிரிவு 3.1.1.பிரகாரம் 5வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கல்வியினை கட்டாயம் ஆக்குதல் பாராளு மன்றத்தில் அங்கீகரிக்கப் பட்டு 1998ம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் "பிறப்புச் சான்றிதழ் பத்திரம் இல்லாத பிள்ளைகள் கூட அப் பகுதி கிராம சேவை அதிகாரியினால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதத்தின் மூலம் பாடசாலையில் இணைந்து கொள்ளலாம். என்றும் கூறப்பட்டுள்ளது. அத்தோடு பாடசாலை மாணவர்களுக்காக இலவசக்கல்வி இலவசப் பாடப் புத்தகம், இலவச சீருடை, புலமைப் பரிசில் என இலங்கையில் உள்ள மாணவர்களையும் தனக்கு உரித்தான அத்தியாவசியமான கல்வியினைப் பெற வேண்டும் என்பதற்காக அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட சட்டங்களாகும். இதனுடைய பயன் மனித வாழ்வின் முழுமையான வளர்சியினை ஏற்படுத்த முடியும். இதனூடு மனித குலத்தை வறுமை, அறியாமையை விலக்கி வைத்தல் கட்டுப்படுதிதல், யுத்தம் போன்ற கொடு செயல்களிலிருந்து விலக்க முடியும். சுய தேவையைத் தானே நிறைவு செய்யும் தன்மை பெற முடியும் எனும் நோக்கோடும் எமது இலங்கை நாட்டினை கல்வி அறிவிலும்

**இ.வரதராஜன்**

தொழில்நுட்ப வளர்சியிலும் வேறு நாடுகளுடன் ஒப்பிடவும் முடியும். எனும் நோக்கிலே இப் பாடசாலைக்கான சலுகைகள் செய்யப்பட்டு வந்தன. இன்னும் செய்யப்பட்டு வருகின்றன.

ஆனால் இந் நடவடிக்கை மட்டும் பாடசாலைக் கல்வியில் மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பது சந்தேகமே. ஏனெனில் இவ்வாறு அரசாங்கமோ அல்லது வேறு அமைப் புக்களோ சட்டம், சலுகைகளை வைத்தாலும் பாடசாலையில் இச் சட்டத்தினை அமுல் படுத்துபவர்கள் பாடசாலை ஆசியர்களும் அதிபர்களுமே. ஆகவே இவர்களது நடவடிக்கை இதயசுத்தியோடும், சமூக நோக்கோடும், கடமை உணர்வோடும், பாடசாலை கற்றல் கற்பித்தலினைச் செய்யும் போது தான் அவ் அரசாங்கம் வகுத்த சட்டம் செயல் வடிவம் பெறும்.

ஆனால் இன்றைய நிலையில் எம் வட கிழக்கில் உள்ள ஆசிரியர்களில் எத்தனை வீதமானோர் கடமை உணர்வோடும் சமூக நோக்கோடும் சிறப்பான கல்வி மான்களினை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் தமது கற்றல், கற்பித்தல் செயற் பாடுகளினைச் செய்கின்றார்கள் எனப் பார்த்தால் கணிசமான தொகையினரே இதனை முழு மனதுடன் செய்கின்றார்கள் செய்து கொண்டும் இருக்கிறார்கள்.

இன்றைய சில

(தொரும்....)

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

கந்தர்:- ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து பாதுகாப்பு அமைச்சை நடைமுறைப்படுத்தும் படி உங்கட றவு ஹக்கீம் ஐயா அய்டியா சொல்லி இருக்காரே மச்சான்.

கலந்தர்:- அவரிட ஐடியாவப்பாத்தா அம்பதுக்கு அம்பது அதாவது அரைவாசிய ஜனாதிபதியும் அரைவாசிய பிரதமரும் எடுக்கச் சொல்லி இருக்காரு போல......

கந்தர்:- அப்படியெண்டா தரப்படய அம்மாக்கும் ஆகாயப்படய ஐயாவுக்கும் புறிச்சிக் குடுக்கச் சொல்லுறாரு போல....

கலந்தர்:- பங்கு போடுறத்தில எங்கட அமைச்சர் றவு ஹக்கீம் சுப்பர் தான்.....

கந்தர்:- அப்ப இப்படிக் கீழுக்கு அம்மா மேலுக்கு ஐயா, கீழுக்கு தரப்பட, மேலுக்கு ஆகாயப்பட

கலந்தர்:- சரியான தீர்வுதான். நடமுறப்படுத்தினாச் சரிதான்.....

கந்தர்:- ஐயா மேலால குண்டு போடாட்டியும், அம்மா கீழால சுடுவாவே மச்சான்...

# தமிழ்மொழி தந்த அருந் செல்வங்கள்

ஒரு மொழியின் சிறப்பு அம்மொழியில் அடங்கியுள்ள எண்ணற்ற இலக்கிய இலக்கண நூல்களிலே தங்கியுள்ளது. நம்முன்னோர் நமக்காகத் தேடித்திரட்டி வைத்த எண்ணற்ற கருவூலங்கள் எல்லாம் நம்கண் முன் கிடைக்கவில்லை. நாம் கண்டது கையளவு -காணாதது கடலளவாகும். கறையானும் கடற்கோன்களும் அழித்தவை ஒரு பகுதி - எதிரிகள் எரித்தவை ஒரு பகுதி போக மிஞ்சியவை இன்று நமக்குக் கிடைத்தி ருக்கின்றன. கிடைத்தவையே இத்தனை சீரும் சிறப்பும் வாய்ந்தவை என்றால் கிடைக்காதவற்றில் பொறிக்கப்பட்ட அரும் பொருட்கள் தான் எத்தனை எத்தனையோ? யாரறிவார் நாமறியோம் பராபரனே. இன்று நமக்குக் கிடைத்திருக்கும் நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வங்கள் சங்க மருவிய நூல்களாகிய பத்துப்பாட்டு , எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு நூல்களாகும். - அத்துடன் சிந்தாமணி - சிலப்பதிகாரம்- மணிமேகலை -வளையாபதி குண்டலகேசி ஆகிய பெருங்காப்பியங்களும் பன்னிரு திருமுறைகளும் - பதினான்கு சித்தாந்த நூல்களும் -பதினான்கு பண்டார நூல்கள் தொல்காப்பியம் என்பன -சங்ககால. நூல்கள் இவற்றில் சங்கமருவிய காலத்தவை

**"முருகு பொரு நாறு பன்னிரெண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய**
**கோல நெடு நல்வாடை கோல் குறிஞ்சி**
**பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து"**

இவை பத்துப் பாட்டென்றும் மேல் கணக்கு நூல்கள் எனவும் கூறப்படுகிறது. இவற்றின் பெயர்களை யும் - இவற்றை ஆக்கிய புலவர்க ளையும் நாம் நினைவில் வைப்பது நமது தலையாயக் கடமையாகும்.

தினைமொழி- கண்ணன் சேந்தனார்
தினைமாலை நாற்பது - கணிமேதையா
முப்பால் கடுகம - நல்லாதனா
ஆசாரக் கோவை -பெருவாயில் முள்ளியர்
பழமொழி -பாண்டி நாட்டைச் சேர்ந்த முன்னுறை அரையனா
சிறு பஞ்ச மூலம் -காரியாசன்
இன்னிலை- பொய்கையா
முதுமொழிக் காஞ்சி -மதுரைக்கடலூர் கிழார்
ஏலாதி - கணி மேதா வியார்
கைக்நிலை- தெரியவில்லை
திருக்குறள் -நெடுமாறன் திருவள்ளுவா
ஆரைக்கேவை -தெரியாது
பல்லவர் கால நூல்கள்
பனனிரு திருமுறை -திருஞானசம்பந்தர் தேவாரம் அப்பர் தேவாரம் - சுந்தரர் தேவாரம் - திருவாசகம்
நாலாயிர திவ்விய பிரபந்தம் -குண்டல கேசி -வளையாதிபதி-நீலகேசி, பாரத வெண்பா
சோழர்கால நூல்கள்

**பூ.ம. செல்லத்துரை**

பன்னிரு திருமுறைகள் -திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருமந்திரம திருவேலாயுத்யுடையார் முதல் பன்னிருவர் பாடல்கள் பெரியபுராணம் -சிந்தாமணி - கந்தபுராணம் கம்பராமாயணம் - நம்பி திரு விளையாடல் தக்கயாகப்பரணி -மூவர் உலா - குலத்தூங்கன கோவை அம்பிகாவதி கோவை நன்னூல் யஸ்பருங்கலக் காரிகை -யாழ்பருங்கல விருத்தி -வீரசோழியம - நேமிநாதம் நளவெண்பா நம்பியகப்பொருள் -மாறன் அலங்காரம்தாண்டி அலங்காரம்- தஞ்சைவாணன் கோவை திருவுந்தியார் - திருக்கரிற்றுப்பாடியார் - சிவஞானபோதம்- சிவஞான சித்திரியார் இருபா -இருபது உண்மை விளக்கம் - சிவப்பிரகாசம் திருவருள

| நூல்களின்பெயர் | புலவர்கள்பெயர் |
|---|---|
| 01.திருமுருகாற்றுப்படை (317அடிகளைக் கொண்டது.) | முதலாம்நக்கீரர் |
| 02.பொருநர் ஆற்றுப்படை (248அடிகள்) | முடத்தாமக் கண்ணியார் |
| 03. சிறுபாண் ஆற்றுப்படை (269அடிகள்) | நத்தத்தனார் |
| 04. பெரும்பாணாற்றுப்படை (500அடிகள்) | உருத்திரக்கண்ணார் |
| 05. முல்லைப்பாட்டு (103அடிகள்) | நம்பூதனார் |
| 06. மதுரைக்காஞ்சி (782அடிகள்) | மாங்குடிமருதன் |
| 07. நெடுநெல்வாடை (188அடிகள்) | நக்கீரர் |
| 08. குறிஞ்சிப் பாட்டு (261அடிகள்) | கபிலர் |
| 09. பட்டினப்பாலை (311அடிகள்) | உருத்திரக்கண்ணார் |
| 10.மலைபடுகடாம் (583அடிகள்) | பெருங்கவுசிகனார் |

எட்டுத் தொகை நூல்கள:-

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறு நூறு, ஒத்தபதித்துப் பத்தோங்கு பரிபாடல்,**
**கற்றறிந்தோர் ஏத்தும் கரியோடகம் புற மென்று**
**இத்திறத்த எட்டுத் தொகை.**

| | |
|---|---|
| 01. நாற்றிணை (400) 9அடி முதல் 12 அடிவரை | 176புலவர்களால் பாடப்பட்டது பன்னாட்டுப்பாண்டியன் மாறன் வழுதி என்பவரால் தொகுக்கப்பட்டது. |
| 02. குறந்தொகை 402அகவல் பாக்கள் 4அடிமுதல் 8அடிவரை | பாடிய புலவர்கள் 205 தொகுத்தவர் பூரிக்கோ என்னும் பாண்டியன் வழுதியாகும் |
| 03. ஐங்குறு நூறு | பாடிய புலவர்கள் 5. தொகுத்தவர் கடலூர் கிழார் |
| 04. பதித்துப் பத்து | பாடியபுலவர்கள் 10 தொகுத்தர் தெரியவில்லை. |
| 05. பரிபாடல் (22)பாடல்கள் | 13புலவர்களால் பாடப்பட்டது |
| 06. கலித்தொகை (150) பாடல்கள் | 5புலவர்கள். தொகுத்தவர் நல்வந்து வாணர் |
| 07. அகநாநூறு (400) 13அடிமுதல் 37அடிவரை | 145புலவர்கள். தொகுத்தவர் உருத்திரசன் |
| 08. புறநாநூறு (400) | 100 புலவர்கள். தொகுத்தவர் தெரியாது. |

## பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்

**"நாலடி நான்மணி நானாற்பதைந்திணை முப்**
**பால் கடுகங்கோவை பழமொழி – மாமுலம்**
**இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**
**கைத்திலைய வாங்கீழ் கணக்கு."**

| | |
|---|---|
| நாலடி 400 | பாடியவர் தெரியவில்லை. |
| நான்மணிக் கடிகை | விளம்பி நாகனார் |
| இனியவை நாற்பது | பூதன் சேந்தனார் |
| இன்னா நாற்பது | கபிலர் |
| கார் நாற்பது | மதுரைக் கண்ணன் சாத்தனார் |
| களவழி நாற்பது | பொய்கை யார் |
| ஐந்திணை ஐம்பது | மாறன் பொறையனார் |
| ஐந்திணை எழுபது | மூவாதியார் |

(தொடரும்......)

இந்தியாவும் ஈழத்தமிழரும்

# புலிகளை கைது செய்து, கொழும்புக்கு அழைத்து பெருமை தேட நினைத்த அத்துலத் முதலி

துரோகங்களின் அத்தியாயங்கள் - 38

- நிராஜ் டேவிட் -

**அத்துலத் முதலியின் உத்தரவு:**

ஸ்ரீலங்காக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 விடுதலைப் புலிப் போராளிகளையும், உடனடியாகவே பிரத்தியேக விமானத்தின் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கும்படி, பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்னவிற்கு கொழும்பில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



அப்பொழுது ஸ்ரீலங்காவின் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியே இந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

“எமது மக்களின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் நிலைநாட்டவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம், அந்தச் சுதந்திரமும் கௌரவமும் நிலை நாட்டப்படாதவரை எமது போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கும்.”

*- விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.*

அப்பொழுது இந்திய- இலங்கை ஒப்பந்த த்திற்கு எதிராக தென் பகுதியில் ஜே.வி.பி.யினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த பாரிய பிரசாரத்தை முறியடிப்பதற்கு ஏதுவாக, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள அத்துலத் முதலி எண்ணியிருந்தார். கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கொழும்புக்குக் கொண்டு வந்து, தொலைக் காட்சி முன்பு அவர்களைத் தோன்ற வைத்து மலிவான ஒரு பிரசாரத்தைத் தேடிக்கொள்ளும் திட்டத்திலேயே லலித் அத்துலத் முதலி இவ்வாறான ஒரு உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

அக்காலத்தில் லலித் அத்துலத் முதலிக்கு சிங்கள மக்கள் மத்தியில் நல்ல மதிப்பு இருந்தது. அதுவும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வடமாராட்சியில் மேற்கொண்ட வெற்றிகரமான இராணுவ நடவடிக்கை யைத் தொடர்ந்து, லலித் அத்துலத்மு தலி சிங்கள மக்களின் ஒரு கதாநாயகனாகவே வலம்வந்தார்.

இந்தியப்படைகளின் வருகையைத் தொடர்ந்தே, லலித் அத்துலத் முதலியின் மவுசு குறைய ஆரம்பித்திருந்தது. ஜே.வி.பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், லலித், ஜே.ஆர். போன்றவர்களைக் கையாலாகாதவர்கள் என்று விமர்சித்து பிரசாரம் செய்தும் வந்ததால், விடுதலைப் புலி முக்கியஸ் தர்கள் ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமது அந்தஸ்தை சிங்கள மக்கள் முன்பு உயர்திக்கொள்ள அவர் தீர்மானித்திருந்தார்.

அதேவேளை, இந்தியாவையும், புலிகளையும் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக் கொள்வதும் ஜே.ஆர். இன் திட்டமாக இருந்தது. அதனால் இந்தப் பிரச்சினையை லலித் அத்துலத் முதலியின் போக்கிலேயே விட்டுவிடும் முடிவிற்கே ஜே.ஆரும் வந்திருந்தார்.

கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களை உடனடியாகக் கொழும்புக்கு அனுப்பிவைக்கும்படி கடுமையான உத்தரவொன்றை லலித் அத்துலத் முதலி, பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்னவிற்கு அனுப்பிவைத்திருந்தார்.

**புலிகள் அதிர்ச்சி:**

கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்லும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரது திட்டம் வெளியானதைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் தலைமை அதிர்ச்சி அடைந்தது. மிகுந்த கோபமும் அடைந்தது.

காங்கேசன்துறை மற்றும் பலாலியில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினருக்குப் பொறுப்பாக இருந்த இந்தியப் படை உயர் அதிகாரியான ஜெனரல் ரொட்ரிகஸ் அவர்களைச் சந்தித்த விடுதலைப் புலித் தலைவர்கள், ஸ்ரீலங்கா படையினால் கைது செய்யப்பட்டுள்ள தமது உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு இந்தியப் படைகளே பொறுப்பு என்று தெரிவித்தார்கள். ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் இந்த அடாவடித்தனத்திற்கு எதிராக தமது கடுமையான கண்டனத்தையும் தெரிவித்தார்கள்.

அப்பொழுது இந்தியாவின் இராஜதந்திரிகள் புலிகளுக்கு எதிராக சதி வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும், இந்தியப் படையின் சில அதிகாரிகள் புலிகள் மீது ஓரளவு அனுதாபம் கொண்டவர்களாகவே காணப்பட்டார்கள். பல அதிகாரிகள் புலி உறுப்பினர்களுடன் மிகவும் நெருக்கமான நட்பைக் கொண்டிருந்தார்கள். சில அதிகாரிகள் விடுதலைப் புலித் தலைவர்களினது திருமணங்களில் கலந்து கொள்ளும் அளவிற்குப் புலிகளுடன் நட்புப் பாராட்டி வந்தார்கள். ஜெனரல் ரொட்ரிக்கஸ்ூம், அப்படியான அதிகாரிகளில் ஒருவர். புலிகள் மீது ஓரளவு அன்பும், அனுதாபமும் கொண்டவர்.

கைது செய்யப்பட்டு, ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தடுத்துவைக்கப் பட்டிருந்த விடுதலைப் புலி முக்கியஸ்தர் களை மீட்டு வருவேன் என்று கூறிப் புறப்பட்டார்.

ஸ்ரீலங்கா இராணுவ முகாமிற்குப் பொறுப்பாக இருந்த பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்னவைச் சந்தித்த இந்தியப் படை அதிகாரி, கைது செய்யப்பட்ட புலிகளை இந்தியப் படையிடம் கையளிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஏற்கன வே அவர் களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்ப ட்டிருப்ப தைச் சுட்டி க் காட்டினார்.

அதற்குப் பதிலளித்த பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்ன, ‘ஏற்கனவே புரிந்திருந்த குற்றச் செயல்களுக்கே பொது மன்னிப்பு வழங்கப்பட்டது என்றும், புதிதாக இவர்கள் புரிந்துள்ள ஆயுதக் கடத்தல் குற்றத்திற்கு அந்தப் பொது மன்னிப்பு செல்லுபடியாகாது என்றும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலி முக்கியஸ்தர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதால் ஏற்படப்போகும் விளைவுகள் பற்றி எடுத்துரைத்த ரொட்ரிகஸ், இதனை எப்படியாவது தடுக்குமாறு ஸ்ரீலங்கா படை அதிகாரியைக் கேட்டுக்கொண்டார்.



அதற்கு பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்ன, ‘தான் ஒரு இராணுவ அதிகாரி என்றும் தனக்கு இடப்படும் கட்டளைகளுக்குக் கீழ்படிவதே தனது கடமை என்றும் தெரிவித்து, அவருக்குக் கொழும்பில் இருந்து கிடைக்கப்பட்டிருந்த கடுமையான உத்தரவு பற்றியும் தெரிவித்தார்.

**இறுதி உத்தரவு:**

இந்த இரண்டு அதிகாரிகளிடையேயும் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றதாக, புலிகள்-இந்திய யுத்தம் பற்றி பின்நாட்களில் ஆய்வுகள் மேற்கொண்ட சுஜீஸ்வர சேனாதீர என்ற சிங்கள எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் படை அதிகாரி ரொட்ரிகஸ் இற்கும் ஸ்ரீலங்காப் படை அதிகாரி பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்னவிற்கும் இடையில் மிகவும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் பரிமாறப்பட்டன.

ஒரு சந்தர்ப்பத்தில் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இந்தியப் படை அதிகாரி இவ்வாறு தெரிவித்திருந்தார்: ‘நான் விடுதலைப் புலி உறுப்பினர்களை ஏற்றிக்கொண்டு உங்களது விமானம் செல்வதற்கு அனுமதிக்க மாட்டேன். இந்தியப்படையின் கவச வாகனங்களை விமான ஓடு தளத்தில் நிறுத்திவைப்பேன்’ என்று எச்சரித்தார்.

அதற்குப் பதிலளித்த பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்ன, ‘அப்படி நீங்கள் நடந்துகொண்டால், அந்தக் கவசவாகனங்கள் மீது தாக்குதல் நடத்தும்படி நான் எனது படைவீரர்களுக்கு உத்தரவிட வேண்டி இருக்கும் என்று தெரிவித்திருந்தார்.

இறுதியில், தனது குரலைத் தாழ்த்திய இந்திய அதிகாரி ரொட்ரிகஸ், ஒரு வேண்டுகோளை வினயமாக விடுத்தார். புலி உறுப்பினர்களை விமானத்தில் ஏற்றி அனுப்புவதை 12 மணி நேரம் தாமதிக்கும்படியும், புதுடில்லியில் இருக்கும் இந்தியத் தூதர் தீட்ஷித் மறுநாள் கொழும்பு வந்ததும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டுவிடலாம் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பிரிகேடியர் ஜயந்த ஜெயரட்ன கொழும்பை மீண்டும் தொடர்பு கொண்டு, நிலமையை விளக்கினார்.

கொழும்பில் இருந்து உறுதியான ஒரு பதில் வந்தது.

‘‘ இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் கைதிகளை விமானத்தில் ஏற்றி அனுப்புவதற்கு உங்களால் முடியாவிட்டால், உங்களது பொறுப்புக்களை உங்களுக்கு அடுத்ததாக உள்ள அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டு, கைது செய்யப்பட்ட நிலையில் கொழும்புக்கு வந்து சேருங்கள்’’ என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் ஒரு இரத்த ஆறு ஓடுவதற்கு அந்த உத்தரவு காரணமாக இருந்தது.

*(துரோகம் தொடரும்.....)*

# அரசியல் நோக்கங்களுக்காக தமிழ் முஸ்லிம் உறவு சிதைந்து விடக் கூடாது

சமாதானப் பேச்சுக்களை ஒத்தி வைத்து விட்டு போர் நிறுத்தத்தைச் சாட்டாக வைத்து காலத்தைக் கடத்தி விடுதலைப்புலிகளின் பலத்தைக் குறைப்பதற்கான ஒரு திட்டமாகவே இன்று சிறிலங்காவின் அரசியல் போக்கு அமைவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தேசிய அரசு எனவும், பாதுகாப்பு அமைச்சைப் பங்கிடுவது எனவும் அடிக்கடி சந்திப்புக்களை நடாத்தி ஜனாதிபதியும், பிரதமரும் இன்னும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வராமல் காலத்தைக் கடத்துவது தமிழ் மக்களுக்கு எந்த ஒரு தீர்வையும் வழங்கக் கூடாது என்பதில் மட்டும் இருவரும் ஒற்றுமையாகச் செயற்படுவது போல் தெரிகிறது.

நாட்டின் சமாதானம் என்பதைவிட தமது கட்சி அரசியல் முக்கியம் என்பதில் இருவருமே உறுதியாக உள்ளனர். ரணிலின் ஐக்கிய முன்னணி அரசானது ஒரு தேர்தல் இடம் பெற்றாலும் அதற்கு முகம் கொடுத்து தமது பலத்தை நிரூபிக்க முடியும் என்ற எண்ணத்துடன் தற்போது அறிக்கைகளைவிடத் தொடங்கியுள்ளனர்.

> **மீண்டும் ஒரு போர் இம்மண்ணில் ஏற்படக்கூடாது அதிலும் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் போர் மூழக் கூடாது கடந்தகால தவறுகளை மறந்து மீண்டும் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக நண்பர்களாக உறவினர்களாக செயல்பட வேண்டும்**

சந்திரிக்கா அம்மையார் ஜே.வி.பி.யுடன் இணைந்து தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற நிலையில் சந்திப்புக்களை ஜே.வி.பி.யுடன் நடாத்திய போதும் அவர்களும் பங்கு கேட்கும் பிரச்சினை நிமித்தமாக முடிவின்றி சந்திப்புக்கள் மட்டும் கடந்த

**- பாத்திரன் -**

மாதம் தொடர்ந்தன.

சிறிலங்கா இனவாத புத்தபிக்குகளும் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு தீர்வையும் வழங்கக் கூடாது என்பதில் கரிசனையாக இருக்கின்றனர்.

இவர்களை விட தென்னிலங்கையில் உள்ள இனவாதக் கட்சிகளான சிஹல உறுமய ஜே.பி.வி.என்பன தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க விடாமல் எந்தெந்த விதத்தில் தடுக்க முடியுமோ அந்தந்த விதத்தில் தடுப்பதற்கான இனவாத பிரசாரங்களைத் தென்பகுதியில் முன்னெடுத்துச் செயற்படுகின்றன.

முஸ்லிம் அரசியல் வாதிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் தெளிவில்லாத ஒரு நிலையில் தான் செயல்ப்படுவதாக நம்பப்படுகின்றது. ஏனெனில் நேற்று ஒன்றும், இன்றும் ஒன்றும், நாளை ஒன்றுமாக அறிக்கைகளும், பேச்சுக்களும் அமைகின்றன.




ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை கையேற்றமை சரியெனக் கூறிவிட்டுபின்பு மறுதலித்து சிலமுஸ்லிம் அரசியல்வாதிகள் கூறி இருந்தமையை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அமைச்சர் றவூப்ஹக்கீம் இலங்கையில் ஒன்று இந்தியாவில் ஒன்று, காத்தான்குடியில் ஒன்று கல்முனைக் குடியில் ஒன்று என்று கதைப்பது புலனாகிறது.

குறிப்பாக இந்தியாவிற்குச் சென்ற வேளை றவூப்ஹக்கீம் உசார் மாத்திரைகளை விழுங்கிவிட்டு கதைப்பது போன்று முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை உருவாகும் என தெரிவித்த கூற்றானது தமிழ் முஸ்லிம் மக்களை மீண்டும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் ஒரு செயல் என எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில் முஸ்லிம் இளைஞர்கள் சிறிலங்காப்படைகளுக்கு எதிராக



ஆயுதம் தூக்குவார்கள் என்பது கனவிலும் நடக்காத ஒன்று. தமிழ் மக்களை எச்சரிக்கும் ஒரு நோக்கில் தான் அமைச்சர் றவூப்ஹக்கீம் இந்தியாவில் வைத்து தெருச்சண்டியர்கள் கூறுவது போன்று கூறினார்.

உண்மையில் அவ்வாறான ஒரு நிலை வந்தால் வடக்கு கிழக்கில் பாரதூரமான விளைவை முஸ்லீம் மக்கள் எதிர் நோக்க வேண்டி வரும் என்ற யதார்த்த நிலையை வடக்குக் கிழக்கிற்கு அப்பால் வாழும் அமைச்சர் றவூப்ஹக்கீம் போன்றவர்கள் உணராமல் இருப்பது புதிய விடயம் இல்லை.

மீண்டும் ஒரு போர் இம்மண்ணில் ஏற்படக்கூடாது. அதிலும் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் போர் மூழக் கூடாது. கடந்தகால தவறுகளை மறந்து மீண்டும் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக நண்பர்களாக உறவினர்களாக செயல்ப்பட வேண்டும் என்ற நிலையில் விடுதலைப்புலிகள் இன்று அவதானமாகச் செயல்ப்படுவதுடன் முஸ்லிம்களின் காணிகளை வயல் செய்கைக்காக வழங்கி ஒற்றுமை பலப்படுத்திவரும் இவ்வேளையில் அமைச்சர் றவூப்ஹக்கீம் போன்றவர்களின் வாய்வீச்சு வான் வீச்சாக தமிழ் மக்களின் மனங்களில் பதிகின்றது. எனவே இவ்வாறான இனத்துவேஷ அறிக்கைகளை அமைச்சர் றவூப்ஹக்கீம் இனியாவது விடாமல் இருப்பதே தமிழ் முஸ்லிம் உறவு மேலும் அதிகரிக்கும் என்பதில் எச் சந்தேகமும் இல்லை.

இன்று சமாதானப் பேச்சுவார்த்தை ஓரம் கட்டப்பட்டு போரா, தேர்தலா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மீண்டும் ஒரு தேர்தல் நடந்தால் ஆட்சிப் பலத்தை நிர்ணயிக்கக் கூடியவர்களாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பே வழங்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அவ்வாறான நிலை வரும் மட்டும் போர் நிறுத்தத்தை தொடர்ந்தும் சிறிலங்கா படைகள் கடைப்பிடிக்குமா? என்பது சந்திரிக்கா அம்மையாரின் கைகளில் தான் உள்ளது.

இன்று சிறிலங்காவின் அரசியல் போக்கானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளைவிட, சமாதானத்தை விட அடுத்த தேர்தலில் யார் ஆட்சியைப் பிடிப்பது என்பதில் தங்கியுள்ளது.

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## மீண்டும் ஒரு யுத்த தேவதை அவதாரம் வேண்டாம்.

**ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு!**

பிரதமருக்கும் உங்களுக்கு மிடையில் இருந்துவரும் அதிகாரப் போட்டி முற்றுப் பெறாது நீங்கள் பகிர்ந்து கொடுக்கமாட்டீர்கள் என்பது இப் போது தமிழினம் உணர்ந்து விட்டது.

சிங்கள நாடாளுமன்றத்தில் உங்கள் இனத்தவர்கள் ஆட்சி செய்கிறார்கள். அமைச்சர்களும் உங்கள் இனத்தவர்கள். பிரதமரும் உங்கள் இனத்தவர்தான். சபாநாயகரும் உங்கள் இனத்தவர்தான். நீங்கள் போதிக்கும் பௌத்தமதமும். பௌத்த மேலான்மை வாதமும் தான் அவர்கள் கோட்பாடும்.

இதுவரை காலமும் தமிழினத்தின் உரிமையை உங்கள் தந்தை எஸ்.டபிள்யூ, ஆர்.டி. பண்டாரநாயக்கா, உங்கள் அன்னை சிறிமாவோ பண்டாரநாயக்கா, நீங்கள், உங்கள் சகோதரன் அனுராபண்டாரநாயக்கா எல்லோரும் வழங்க மறுத்தவர் பரம்பரைதான். பண்டாரநாயக்க பரம்பரை என்றாலே எமது இனம் எமதூதர்களாகக் கருதுகின்றது.

இப்படி ஒரு சூழலில் ஐக்கிய தேசியக்கட்சியினர் மட்டும் தங்கத் தாம்பாளத்தில் தன்னாட்சி அதிகார சபையைத் தரமுன் வரவில்லை. நீங்கள் நீலக்கட்சி. நாற்காலி சின்னம், அவர்கள் பச்சைக் கட்சி, யானைச் சின்னம் இப்படித்தான் தமிழினம் கருதும் போது ரணில் அரசு தமிழர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கப்போகிறார் என நீங்கள் போடுவது தப்புக்கணக்கு.

ஜே.ஆர், பிரேமதாஸா, விஜயதுங்கா, அத்துலத்முதலி, காமினிதிஸநாயக்கா, ரத்வத்தை, இப்படி ஐ.தே.கட்சியின் முக்கிய தலைவர்கள் தமிழினத்தை மூழ்கடிக்க எத்தனையோ சதித்திட்டங்களைத் தீட்டினார்கள். இதைத் தமிழினம் மறந்து விடவில்லை. இப்போதும் ரணில் ஐயா சர்வதேச வலைப் பின்னலில் தமிழர் பிரச்சினையைச் சிக்கவைத்து சிறிலங்கா அரசுக்குப் பாதுகாப்பு கவசம் போர்த்து நிற்கிறார். இதையும் தமிழினம் அறியாமல் இல்லை. இப்படி நிலைமை நம்பிக்கையீனத்தை தமிழினத்துக்கு ஏற்படுத்தி யிருக்கும் நிலையில் ஏதோ தமி ழீழத்தை தங்கத் தாம்பாளத்தில் வைத்து ரணில் தமிழர்களுக்குக் கொடுக்கப்போகிறார். என்ற கொடூர பிரசாரங்கள் தென்னிலங்கை எங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இவ்வாறான விசமப்பிரசாரங்களில் தாங்களும் ஈடுபட்டுக் கொண்டு தமிழினத்தின் தலைவிதியை மாற்றியமைக்க முனைவது நீங்கள் எமக்குச் செய்யும் வரலாற்றுத் துரோகமே.

பதினேழு வருட ஆட்சி நடத்திய ஐ.தே.கட்சியிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்ற சமாதானத் தேவதையாக வலம்வந்தீர். நம்பினார்கள் தமிழர்கள். நம்பிக்கையின் பரிசாக தேர்தலில் வெற்றி வாய்ப்பு கிடைத்தது. ஆனால் நீங்கள் ஜனாதிபதியானதும் செய்தது துரோகம். யுத்த தேவதையாக எமது தாயக மண்ணில் குண்டுமழை பொழிந்தீர்கள். குற்றுயிராய் தமிழினம் சரிந்தது.

இப்படி ஒரு அவலம் எமது இனத்திற்கு உங்களால் ஏற்படக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

*இங்ஙனம், அலைமகன்*

# பாரதி காட்டிய புதுமைப்பெண்ணை விழித் தெழவைத்த விடுதலைப்புலிகள்




சென்றவாரத் தொடர்ச்சி....

பெண் மட்டுமே ''கற்பு'' என்ற ஒன்றால் துரதிஷ்டவசமாக மாட்டிக் கொண்டு தவிக்கிறாள்.

கற்பு என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவான ஒன்று என்பதை இந்த மானிட ஜென்மம் மறந்து விட்டது என்னவோ, ஒரு ஆணும் பெண்ணும் கற்பு என்னும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டியது இல்லறத்தில் அவர்களுக்கு உரித்தான சமூகக் கடமையாகும். இதில் இருந்து ஆண் மட்டும் தனித்து விட முடியாது. இல்லறத்தானுக்குரிய கடமை களில் ஒன்று தன்னுடைய கற்பை அதாவது ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதாகும். ஒருவன் ஒருத்தியைக் கெடுத்து விட்டான் எனும் போது கெடுக்கப்பட்ட பெண்ணின் கற்பு பறி போய் விட்டது. என்று தான் பலருக்கும் எண்ணத் தோன்றும். ஆனால் அப் பெண்ணை அந்த நிலைக்கு ஆளாக்கிய வனின் கற்பு எங்கு போனது என்பதை எவரும் சிந்திப்பதில்லை. இது பெண்ணி னத்திற்கே கொடுக்கப்பட்ட மிகப் பெரிய மூடத்தனமான தண்டனையாகும்.

இல்லறத்தில் இணையும் தம்பதியி னருக்கு நீண்ட காலமாகக் குழந்தை இல்லாவிட்டால் அந்தப் பெண்ணை ''மலடி'' என அழைப்பார்கள். இதனை விஞ்ஞான ரீதியாகப் பார்க்கையில் ஆணிடம் அல்லது பெண்ணிடம் குழந்தை பெற தகுதியில்லாத நிலை காணப்படலாம். இதனை உணராத மனித வர்க்கம் பெண்ணுக்குக் கொடுக்கும் முத்திரை ''மலடி'' என்பதாகும். கால நீரோட்டத்தில் விதியின் சதியால் ஒரு பெண்ணின் கணவன் இறந்தால் அந்தப்



பெண்ணுக்கு சமூகம் கொடுக்கும் பட்டம் ''விதவை'' ஆனால் கணவனின் மனைவி இறந்தால் கணவனுக்கு என்ன பட்டம் கொடுப்பது என்று அச் சமூகம் சிந்திக்காது ''மலடி பெற்ற மகன் ஒருவன் முயற் கொம்பின் மீது ஏறி ஆகாயத்தில் இருக்கும் பூவைப் பறித்தான்'' என்று கூறுவது எவ்வளவு வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருக்கின்றதோ அவ்வளவு வேடிக்கையான தாகும்.

ஆணாதிக்கம் என பது பெண்களின் உரிமை களை மழுங்கடிப்பவையா கவே இருந்து வருகின்றன. சமூகத்தில் ஆண்களே தங்க ளுக்கு உரித்தான சாஸ்திர ங்களை அமைத்தார்கள். சமுதாயத்தை உருவாக்கி னார்கள். இதனால் பெண்கள் அடக்கப்படும் ஒரு ஜாதியா கவே இருந்து வந்துள்ளனர். 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பெண்கள் பற்றி மிகவும் இறுக்கமான சமூக அமைப்பே காணப் பட்டது. ''அடுப்பன் கரைப் பூனை போலவே பெண் கணிக்கப்பட்டாள்'' இந்தப் பெண்கள் மீதான சமுதாய இறுக்கத்தைத் தளர்த்தும் வகையிலே 19ஆம் நூற்றாண்டு இறுதிப் பகுதியில் பாரதநாடு ஈன்றெடுத்த பைந்தமிழ்ப் பாவலன் பாரதி அவர்கள் பெண் விடுதலைபற்றி முழங் கிய முழக்கம் இன்று உலகளாவிய ரீதியில் பெண் விடுதலைப் பேச்சுக்கு வித்திட்டது எனலாம். பாரதி ஒரு புதுமைப் பெண்ணைக் காண விளைகின்றான். இதன் மூலம் பெண் விடுதலையை அடையலாம் என்பதனை பெண் சமுதாயத்திற்குக்

அரசையூர் ஏ.கருணா

குறிப்பிட்டுள்ளார்.

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம். பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப் போந்து நிற்பது தாய் சிவ சக்தியாம,'' எனக் குறிப்பிடுவதோடு ''நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம'' எனப் புதுமைப் பெண்ணுக்குரிய குணங்களையும் குறிப்பிட்டுள்ளார். அன்று பாரதி காண விளைந்த புதுமைப் பெண்ணைத்தான் நாம் இன்றும் கண் முன்னே கண்டு கொண்டிருக்கின்றோம்.

தொடரும்...

# தக்காளிப்பழ ஜாம்



தேவையான பொருட்கள்!

தக்காளிப்பழம்-1/2 கிலோ. கி
சீனி- 1/4 கிலோ. கி
தண்ணீர்- 1/4 டம்ளர்
மசாலா எசென்ஸ்- 3 துளிகள்
வனிலா- 1 தே. க

செய்முறை:-

*. தக்காளிப் பழத்தைப் பாத்திரத்தில் போட்டு பாத்திரத்தை மூடும் வண்ணம் கொதி நீர் விட்டு அரை மணி நேரம் மூடி வைத்துக் கொள்க.

* பின்பு பழங்களை எடுத்து தோலை உரித்துக் கொண்ட பின்பு பழத்தைப் பிழந்து உள்ளிருக்கும் விதைகளுடனான சாற்றை ஒரு பாத்திரத்திலும் சதைப் பகுதியை பிறிதொரு பாத்திரத்திலும் பிரித்து வைத்துக் கொள்க.

*. தக்காளிப் பழத்தின் சதையை மிக்ஷியில் போட்டு அடித்து தாச்சியில் ஊற்றிக் கொண்ட பின் இதனுள் சீனியையும் சேர்த்துக் கொள்க.

*. பின்பு விதையுடன் உள்ள சாற்றை வடியில் விட்டு அதனுள் 1/4ல் டம்ளர் தண்ணீரை சிறிது சிறிதாக விட்டு அச்சாற்றை தக்காளிப் பழக் கலவையில் வடித்து விட்டுக்கொள்க.

*.. அதன் பின் தாச்சியை அடுப்பில் ஏற்றி காய்ச்சுதல் வேண்டும் முதலில் சீனி முழுவதும் கரைந்து பாகு பொங்கிக் கொதித்து ஓரளவாக தடிக்கத் தொடங்கியதும் பாகில் ஒரு துளியை எடுத்து ஒரு தட்டில் விட்டு சிறிது நேரத்தால் தட்டைச் சரித்துப் பார்க்கும் போது உடனடியாக பாகு வடிந்தோடாமல் மெதுவாக வழிந்தோடும் பதத்தை அடைந்ததும் அடுப்பில் இருந்து இறக்கி ஆற வைக்கவும்.

*. ஜாம் நன்றாக ஆறியதும் வனிலா, மசாலா எசென்ஸ் என்பன கலந்து ஈரமற்ற ஜாம் போத்தலில் அடைத்து வைத்து நீண்ட காலத்துக்குப் பரிமாறலாம்.

குறிப்பு:- தக்காளிப் பழச் சதையை மிக்ஷியில் போடாமல் கரண்டியாலும் நன்றாக மசித்துக் கொள்ளலாம். பாகு தடிக்கத் தொடங்கியதும் நெருப்பை நன்றாகக் குறைத்து விட வேண்டும்.

*ச. கல்ப்பனா*
*கொக்கட்டிச்சோலை*

# கன்னிப் பெண்ணே கவனம்

கன்னிப் பெண்ணே கவனம் தேவை!
இது கவிஞர் உலவும் நாடு!
உன்னைப் பூவென்று சொன்னாலும்
பொன் கேட்கத் தயங்க மாட்டர்!
கட்டிக் கரும்பே கனியே என்பார்
கார் கேட்க மறக்க மாட்டார்.
உன் விழியை மீனாக்குவார்!
இதழைத் தேனாக்குவார்......
இப்படி இவர்கள்
உவமை கூறிக் கூறியே
உயர்ந்து விட்டார்கள்
மயக்கு மொழிகளால் மனதைக்
கெடுக்கும் மாயக்காரர்கள்!
கவிதை கூறியே
காதலிக்கும்
கடத்தல் காரர்கள்!
இவர்கள் வலையில் விழாதே!

உன் காதைச் செவிடாக்கி
உன் கண்களைக் காவலாக்கி
இதயத்திற்குள் தாள் போடு
உள்ளத்தில் ரோஜாவானாலும்
வெளியில் முள்ளாகவே இரு!
அப்பொழுதுதான் உன் பெண்மை
காக்கப்படும்!



சு.விஜயலக்சுமி
விஷ்ணு ஆலய வீதி
கிரான்.

# மருத்துவக் குறிப்பு

## பெரும்பாடு சரியாக

பெண்களுக்கு ஏற்படும் உடல் நலக் கோளாறுகளில் இரத்தப் பெருக்கு அல்லது பெரும் பாடு என்பது ஒரு முக்கிய கோளாறு. மாத விடாய்க் காலங்களில் மிகவும் தொந்தரவாய் இருக்கும் இதற்கு அரச மரத்து இலை, நாவல் இலை மாமரத்து இலை, அத்தி இலை இவைகளைச் சம பங்கு எடுத்து சுத்தஞ் செய்து கசாயம் வைத்துக் குடிக்கவும் கஷாயம் நாள் தோறும் காலையிலும் இரவி லும் நூறு மில்லிய ன் குடித்து வரலாம். பத்துத் தினங்களில் சரியாகி விடும்.



## சிறு நாக்கு வளர்ச்சியைத் தடுக்க

வாயில் சிறு நாக்கு வளர்ந் து தொங்கினால் உராய்ந்து இருமல் ஏற்படும். இலேசான குத்தலும் ஏற்படும். மிளகையும் உப்பையும் பொடி செய்து அந்த சிறு நாக்கின் மேல் வைத்து அழுத்தி விட வேண் டும். மீண்டும் அதை அப்படியே துப்பி விட வேண்டும். விழுங்கி விடக் கூடாது. இதை இரண்டு மூன்று நாட்கள் காலை நேரத்தில் செய்து வந்தால் அதன் வளர்ச்சி குன்றி பழைய நிலையை அடைந்து விடும்.

## பூச்சிகள் தொல்லையா?

வயிற்றில் பூச்சிகள் ஏற்பட்டு தொல்லை கொடுக்கும். அதாவது நாம் சாப்பிடும் உணவையெல்லாம் அது சாப்பிட்டு கெடுத்து விடும். நம் உடம்பில் சத்து ஏறாது. அதனால் மாதம் ஒரு முறையோ அல்லது வாரம் ஒரு முறையோ ஐந்து மில்லி விளக்கெண்ணையுடன் ஐந்து மில்லி வேப்பெண்ணையும் கலந்து உள்ளங்கையில் நக்கிச் சாப்பிடவும். சற்றுக் குமட்டலாம் என்ன செய்வது! இதைச் சாப்பிட்டு ஒரு மணிக்குப் பிறகே சிற்றுண்டி சாப்பிட வேண்டும். அதன் பிறகு மலத்தோடு பூச்சிகள் வெளியே வந்து விழுந்து விடும்.

# செம்பருத்திப்பூத் தைலம்

முடி உதிராமல் இருக்க நாம் வீட்டிலேயே தயாரிக்கக் கூடிய ஒரு தைலமாகும். இப்படி எல்லாம் நல்ல மருத்துவ முறை இருக்க நீங்கள் ஏன் கடைச் சரக்குகளுக்குப் போக வேண்டும். உங்கள் முடி உதிராமல் நன்கு நீளமாக வேண்டும் என்பது பற்றி அதை தயாரிப்பவன் ஏன் கவலைப்படுகிறான். குறைந்த செலவு, அதிகலாபம் என்பது அவன் குறிக்கோள். ஆனால் நல்ல சரக்கை அந்தத் தயாரிப்பில் நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

தேங்காய் எண்ணையை அடுப்பில் ஏற்றி நன்கு கொதி வந்ததும் செம்பருத்திப் பூக்களை நிறைய கொண்டு வந்து போடவும். அவை படபட வென்ற சத்தத்துடன் நன்கு பொரிந்து கருகிப்போகும். உடனே எண்ணைநிறமும் மாறிவிடும்.

பிறகு அதை அடுப்பிலிருந்து இறக்கி வடிகட்டி ஆறவைத்து போத்தலில் அடைத்து இறுக்கமாக மூடிவைக்கவும். அதை தலைக்குத் தடவி வந்தால் கூந்தல் நன்கு நீளமாகவும்



அடர்த்தியாகவும், கருமையாகவும் வளர்ந்து வரும்.

வெந்தயத்தை ஊற வைத்து அதைத் தலையில் தடவி ஊறவைத்து குளித்து வந்தாலும் முடி உதிர்வது நின்று விடும். அதற்காகவே சிலர் தலைக்குத் தடவிக் கொள்வதற்கென வைத்திருக்கும் எண்ணையில் கொஞ்சம் வெந்தயத்தைப் போட்டு வைத்து விடுவார்கள். அதுவே நல்லது அந்த வெந்தயம் ஊறிய எண்ணை நல்ல பயனை அளிக்கவல்லது.

# திரை பிம்பங்கள்

# பாடகி வரிசையில் பட்டொளி வீசிப் பறக்கும் ஹரிணி

நுழைந்தவுடன் நம்மை வரவேற்ற ஹரிணியின் தந்தை ஸ்ரீதரன் பள்ளி நாட்கள் முதல் இந்நாள் வரை வாங்கிய பரிசுகளையும் கோப்பைகளையும் பெருமையுடன் நம்மிடம் காண்பிக்கிறார். 'நாங்களே நினைக்கலை. இந்த அளவிற்கு ஹரிணி முன்னுக்கு வருவாங்கன்னு. எல்லாம் கடவுளின் செயல்' என்று உள்ளம் பூரிப்பதை காணும்பொழுது வள்ளுவரின் 'மகன் தந்தைக்காற்றும் உதவி' என்ற குறள் ஞாபகத்திற்கு வருகிறது.

தமிழ் சினிமாவை பல ஆண்டுகளாக ஆக்ரமித்துக் கொண்டி



ருக்கும் மலையாள, ஹிந்தி பாடகிகளுக் கிடையே ஹரிணியின் பேரும் புகழும் பட்டொளி வீசிப் பறப்பது தமிழ் சினிமா பல தலைமுறைகளாக கண்டிராத ஒன்று. இப்படி சத்தமில்லாமல் தமிழுக்கு பெருமை சேர்த்திருக்கும் ஹரிணியுடன் ஒரு சந்திப்பு. அது எப்படி பாடும் பாடல் அனைத்தும் ஹிட்டாகிறது?

சிரிப்பை முதல் வார்த்தையாய் உதிர்த்து விட்டு, கேட்சியான ட்யூனும், நல்ல பாடல் வரிகளும்தான் பாட்டு ஹிட்டாவதற்கு காரணம். 'இந்தப் பாட்டை ஹரிணி பாடினால் நல்லாயிருக்கும்'னு நினைக்கிற மியூசிக் டைரக்டர்ஸ்க்கு நான் நன்றி சொல்லணும் என்கிறார் ஹரிணி.

இளையராஜா தான் நினைச்சதை அப்படியே கொண்டு வரணம்னு எதிர்பார்ப்பார். ஆனா ஏ.ஆர். ரஹ்மான் நம்ம கருத்துக்களுக்கும் இடம் கொடுப்பார். இவங்க மாதிரிதான் இப்பவர்ற புது மியூசிக் டைரக்டர்ஸும். அந்த காலத்துல இரண்டு அல்லது மூன்று பேர்தான் இசைய மைப்பாளராக இருப்பாங்க. ஆனா இப்போ நிறைய பேர் நல்ல திறமைகளோட இதே இசைத்துறைக்குள்ளே நுழைந்து அசத்தறாங்க என்று வியக்கிறார்.

ஸ்டேஜில் பாடும் பொழுது எந்தவொரு குறிப்பும் இல்லாமல் எப்படி பாட முடிகிறது?

ஞாபக சக்திதான் காரணம் என்கிறார். சாதாரணமாக நான் இதுவரை பாடிய அனைத்து பாடல்களும் எனக்கு மனப்பாடம். அதனால் ஸ்டேஜில் பாடும்பொழுது எந்தவொரு குறிப்பும் வைத்துக் கொள்ளவில்லை. ஏன் கர்நாடக சங்கீதத்தைக்கூட எழுதி வைத்தெல் லாம் நான் பழகவில்லை. பேசும்பொழுது தெளிவான தமிழ் குரலில் இனிமை, நடிகைகளுக்கு பின்னணி குரல் கொடுக்க இது போதாதா? வாய்ப்புகள் வந்தது. ஆனா எனக்கு இதில் இஷ்டமேயில்லை. டப்பிங் கொடுக்கனும்னா சில சமயங்களில் கத்த வேண்டியிருக்கும். இதெல்லாம் குரலை பாதிக்குமோ என்று பாதுகாப்பான ஒரு பதிலை கூறுகிறார். இவருக்கு பாலசந்தரிடம் இருந்து நடிக்கவும் வாய்ப்பு வந்ததாம். 'இசையோடு வாழ்வேன் இசையாவேன்' என்று பாடலுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடிப்பை உதறி தள்ளியிருக்கிறார் ஹரிணி.

இந்த வருட தேசிய விருது பற்றி பேச்சு திரும்பியது. சங்கர் மகாதேவன் ரொம்ப நல்ல பாடகர். அவர் திறமைக்கேற்ற சான்றாக தான் இந்த விருது அவருக்கு கிடைத்[துள்]ளது என்றவர் அடு[த்து] ஒரு குண்டை [தூக்கி] போட்டார்.

பவதாரிணிக்கு தேசிய விருது வழங்கியது சரியான்னு எனக்கு தெரியலை. இந்த வருட தேசிய விருதில் கூட நிறைய பிரச்சினைகள் எழுந்தது ன்னு சொல்றாங்க. ஓகே, இதுக்கு மேல நான் தேசிய விருது பற்றி எதுவும் சொல்றதுக்கு விரும்ப லை. (பவதாரிணி மீது என்ன கோபமோ?) குரலின் இனிமைக்கு காரணம்? நான் ஐஸ்கிரீம், காரம் இதெல்லாம் எப்பொழுதுமே தவிர்த்து விடுவேன். அப்படியும் சாப்பிடனும்னு ஆசை வந்தா ரெக்கார்டிங் இல்லாத சமயமா பார்த்து என் ஆசையை தீர்த்துக்குவேன்டா என்றவர், ஐரோப்பா நாடுகளுக்கு போகும்பொழுது நான் வெஜிடேரியன் கிறதனால ரொம்பவும் கஷ்டப்படுவேன். அந்த சமயத்துல எல்லாம் ப்ரெட்தான் என் முழு நேர உணவு.

சென்னை பல்கலைக் கழகத்தில் எம்.சி.ஏ. படிக்கிறார். ஐயோ, ஏன் தான் எம்.சி.ஏ. படிக்க ஆரம்பிச்சேன்னு இருக்கு. பாடங்கள் படிக்க டைமே கிடைக்கறதில்லை. தொடர்ந்து எம்.சி.ஏ. படிப்பேனான்னு எனக்கே தெரியல என்று பாவமாய் கூறுகிறார். (பார்த்துக்குங்க ஹரிணி, ஸ்கூல்ல நூத்துக்கணக்கான



கப் வாங்கின மாதிரி இதுலேயும் கப் வாங்கிட போறீங்க!).

அடுத்த சிறந்த பாடகி யார் என்றால், அது ஹரிணிதான் என்று சித்ராவிடம் பாராட்டு பத்திரம் வாங்கியிருக்கிறார் ஹரிணி. எனக்கு சித்ராவை ரொம்ப ரொம்ப பிடிக்கும். அவங்க பெரிய பாடகியாக இருந்தாலும் ரொம்ப கனிவாக இருப்பாங்க. அவங்களோட இந்த பாராட்டால எனக்கு அவங்க மேலுள்ள மரியாதை அதிகமாயிருக்கும்னுதான் சொல்லணும்.

பாராட்டுகளிலேயே பெரிய பாராட்டுன்னு சொன்னா 'மனம் விரும்புதே' பாட்டுக்கு தமிழக அரசு விருது வாங்கியதுதான். அந்த விருதி[...]ன் பொழுது எனக்கு வயது 17. சினிமாவுல எனக்கு வாய்ப்புகள் குறையும் பொழுது நிச்சயம் நான் சிறு வயது முதல் பயின்ற கர்நாடக சங்கீதத்தில் முழு மூச்சுடன் இறங்கி விடுவேன் என்றவர் தன் இத்தனை பெருமைகளுக்கும் தன் பெற்றோர் தான் காரணம் என்று உணர்ச்சி வசப்படுகிறார். அவங்க இல்லாட்டி இந்த ஹரிணி இல்லை. என் பேரண்ட்ஸ் தான் சின்ன வயதிலிருந்து ஊக்கம் கொடுத்து என்னை இந்த அளவிற்கு கொண்டு வந்திருக்காங்க. எனக்கு ரெக்கார்டிங் நைட்ல இருந்தாலும் கூடவே இருந்து இப்ப என்கிட்ட இருக்கிற பணம், பேர், புகழ் எல்லாவற்றையும் பாதுகாப்பது அவங்கதான்.

எம்.சி.ஏ. படிக்கும் மாணவி, இளைய தலைமுறை என்பதால் இண்டர்நெட் பற்றி கேட்டவுடன், அப்பப்பா என்ன ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு. பல விஷயங் களை தெரிந்து கொள்வதற்கு மட்டுமா எஸ்.டி.டி. போன் கால் எல்லாம் கூட இலவசமாகவே பேசலாமே. நினைத்தபடி ப்ரெண்ட்ஸோட சூட்டிங் செய்யலாம். ரசிகர்களிடமும் நேரடியா சூட்டிங்கின் மூலம் சுலபமா பேச முடியுது. அதனால் இண்டர்நெட் எல்லோருக்கும் எல்லா விஷயத்திலும் ரொம்ப உபயோகமா இருக்கு'.

ஒரு தமிழ் பெண் தமிழ் பாடகியாக வெற்றி வலம் வருவது குறித்து கேட்டால், நம்ம தமிழ் சினிமாவுல தமிழ் பாடகிகளின் எண்ணிக்கை மிக குறைவாக இருப்பதை நினைத்தால் கவலையாகத்தான் இருக்கு எவ்வளவோ நல்ல தமிழ் பாடகிகள் இருந்தும ஹிந்தியிலிருந்தெல்லாம் அழைத்து பாட வைப்பது ஒன்னுதான் புரியலை. நீங்க வேனா பாருங்க இந்த நிலைமை யெல்லாம் இன்னும் ஒரு வருஷத்தில மாறி தமிழிலிருந்து நிறைய பாடகிகள் இந்த துறையில் நுழைய போறாங்க என்றபடி பேட்டியை முடிக்கிறார் ஹரிணி.

---

## வாசகர் இதயம்

அன்பின் தமிழலையே
உனது படைப்புக்கள் அனைத்தும் தரம். அதில் என்னை மிகவும் கவர்ந்தது துரோகங்களின் அத்தியாயம் மாவீரர் வரலாறு, காத்திரன் பதில், சிறுகதை என்பவை மேலும் அனைத்து ஆக்கங்களும் தரத்திலும் தரம். உனது வளர்ச்சி கண்டு நான் பூரிப்படைகின்றேன். மேலும் மேலும் நீ வளர எனது வாழ்த்துக்கள்.

கா.பத்மாவதி களுவன்கேணிவீதி
பலாச்சோலை

என் மனம் புகுந்த ! தமிழ் அலையே
உன் வரவால் எனதுள்ளம் நிரம்பி விட்டது. காரணம் தமிழ் மக்களுக்காய் நீ படுவானில் இருந்து ஓசை எழுப்புகின்றாய் ஆனால் எழுவானில் உள்ளவர்களும் மகிழ்வடைய கடலலையைவிட தமிழலை தான் என நினைக்கையில் உன் சேவையை நினைத்து மெய் சிலிர்க்கின்றேன். உனது ஆக்கங்கள் ரொம்ப ரொம்ப பிரமாதம். கடலாழம் கண்டாலும் உனது ஆக்கங்களின் ஆழத்தை யாராலும் கண்டறிய முடியாது. வாழ்க! வளர்க உன் பணி!

சி.யோகேஸ்வரன்
பெரிய போரதீவு

"அலையே"
அலையே தமிழ் அலையே
பொங்கி எழும் தமிழ் அலையே
எமக்காய் எழுந்த தமிழ் அலையே
தமிழுக்கு உயிர் கொடுத்த அலையே
அறியட்டும் உன் வலிமையை நீ
அலையா தமிழினத்தின் உணர்வா
என்பதனை அறிய வைப்பாய் தன்
மானம் காத்த தமிழ் அலையே

கா. ஜெயா
மயிலம்பாவெளி

அன்புடன் தமிழ் அலைக்கு என் வந்தனங்கள்.
தமிழர் மனங்களில் தவழும் உன்னை எனக்கும் உன் மேல் ஒரு விருப்பு காத்திரன் கேள்வி பதில், காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு, அரிவையர் அரங்கம், சிறுவர் சிகரம் என்று பல கருத்துக்களை உள்ளடக்கி நீ வலம் வருகின்றாய். ஆனால் உன்னில் ஒரு குறை என்னவென்றால் நான் காத்திரன் கேள்வி பதிலில் கலந்து கொள்வதற்கு ஒரு கேள்வியை வடித்து அனுப்பினேன். இன்னும் பிரசுரிக்கவில்லை. இதே போன்ற குறைகளை நிவர்த்தி செய்யவும். நீ வாழ்க என்றும்

நா. வாமதேவன் கன்னன்குடா

தமிழ் அலைக்கு எனது வாழ்த்துக் கவிதை.

நெஞ்சமதில் நிறைந்திருக்கும் தமிழ் அலையே
எட்டுத் திக்கும் உன் புகழ் பரவ வேண்டுமென்று பூசிக்கின்றேன் தமிழே?
இனிய மொழியாம் தமிழை வர்ணிக்கின்ற தமிழலையே?
நீ மென் மேலும் ஆயிரம் தமிழ் முத்துக்களை கொண்டு வருவாயா?

தமிழ் மக்களின் நெஞ்சங்களின் இடம் பிடித்துக் கொண்ட தமிழ் அலையே?
மாவீரர் போராளிகளின் வரலாற்றை அறியாமல் இருந்த மக்களுக்கு
விளக்கமாக தென்றலில் கொண்டு வரும் தமிழ் அலையே?
இலை மறை காயாக இருந்த நம் போராட்ட வீரர்களின் மகிமையை உணர்த்துகின்ற தமிழ் அலையே?


உன் சேவைக்காலம் குறுகிய காலமானாலும் பெருமை பல கோடி தமிழ் அலையே
என் நெஞ்சத்தை விட்ட கலாத் தமிழ் அலையே?
கொக்கட்டிச்சோலை எனும் ஊரின் மகிமையை உணர்த்துகின்ற தமிழ் அலையே
சிறிய விதையாய் முளைத்தாய் பல கோடி நன்மை அழித்த தமிழ் அலையே.

தொடர்ந்து ஒளி வீச வேண்டுமென்று மனமாற வாழ்த்துகின்றேன். தமிழ் அலையே உன்னை வாழ்த்தி நிற்கும்.

காசுபதி. இந்துமதி
கிரான்குளம், மத்தி

# குதிரை விற்ற பணம்

தெனாலிராமனுக்கு எதிர் பாராமல் காய்ச்சல் ஏற்பட்டது. ஒரு வாரம் ஆயிற்று. மருந்து சாப்பிட்டும் குணமாகவில்லை. அவனுடைய மனைவி மிகவும் கவலைப்பட்டால் . புரோகிதரிடம் சென்று தன் கணவனின் நிலையைக் கூறி ஏதாவது சாந்தி செய்து குணம் அடையச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். தெனாலிராமனிடம் சூடு பட்டவர்களில் இந்தப் புரோகிதரும் ஒருவர். ஆகையால் வஞ்சம் தீர்த்துக் கொள்ள சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தார்.



''உன் கணவன் அந்தணர்களுக்கு சூடு போட்டது மகா பாவம். அந்தத் தோசம் காரணமாகவே அவனுக்குக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது. மருந்துகளால் அந்தக் காய்ச்சல் தீராது. தோச பரிகாரம் செய்ய வேண்டும் அதற்கு நூறு பவுன் செலவாகும்" என்றார் புரோகிதர்.

''எங்களிடம் இப்போது நூறு பவுன் இல்லை. ஆனால் ஒரு குதிரை இருக்கிறது. அவர் குணமானதும் அந்தக் குதிரையை விற்கச் செய்து உங்களுக்குச் சேர வேண்டியதைத் தருகிறேன். இப்போது நீங்கள் கருணை கூர்ந்து தோச பரிகாரம் செய்து என் கணவரைக் குணப்படுத்த வேண்டும்" என்று மண்டாடினாள்.

நீ ரொம்பவும் கேட்டுக் கொள்வதால். நான் பரிகாரம் செய்கிறேன். ஆனால் அந்தக் குதிரையை என்ன விலைக்கு விற்றாலும். அந்தத் தொகையை அப்படியே என்னிடம் தந்துவிட வேண்டும். சரியா? என்று புரோகிதர் பேராசையோடு கேட்டார். தெனாலிராமன் மனைவி அதற்குச் சம்மதித்தாள். புரோகிதர் தோச பரிகாரம் செய்தார்.

அதன் பலனோ அல்லது இயற்கையின் விளைவோ தென்னாலிராமன் காய்ச்சல் குணமாகி எழுந்து விட்டான். ஒரு வாரத்துக்குப் பிறகு புரோகிதர் வந்து ''குதிரையை விற்று விட்டாயா? என்ன விலைக்கு விற்றாய்? எனக்குச் சேரவேண்டியதைக் கொடு" என்று கேட்டார். ''இன்னும் விற்கவில்லை! தருகிறேன்!" என்று சமாதானம் சொன்னான் தெனாலிராமன். தான் நோயால் படுத்திருந்த போது மனைவி செய்த முட்டாள் தனத்திற்கு வருத்தப்பட்டு யோசிக்கலானான் தெனாலிராமன்.

தினமும் புரோகிதர் வந்து நச்சரிக்கலானார். புரோகிதரின் தொந்தரவு பொறுக்காமல் குதிரையை விற்கப் புறப்பட்டான் தெனாலிராமன். கூடவே வீட்டிலிருந்த ஒரு பூனையையும் கொண்டு சென்றான். குதிரையோ கொழு கொழு என்று இருந்தது. அது அராபியக் குதிரை நூறு பவுனுக்கு மேல் விலை போகும். அந்தத் தொகை பூராவும் தனக்கே சேரும் என்ற எண்ணம் புரோகிதருடைய பேராசையைத் தூண்டியது.

**ந.டிலாணி**

''அவசரப்பட்டு விற்று விடாதே! பூனையையும் எதற்குக் கொண்டு வருகிறாய்?" ''என்றார் புரோகிதர்" உமக்குக் குதிரை விற்ற பணம் கிடைக்கும் பூனையைப் பற்றி உமக்கு ஏன் கவலை ? என்றான் தெனாலிராமன். சந்தையில் குதிரையை விலை கூறினான். என்ன விலை என்று கேட்டனர். என்னுடைய பூனையின் விலை இரு நூறு பவுன் குதிரையின் விலை ஒரு காசு இரண்டையும் சேர்த்தே விற்பேன் என்றான்.


தெனாலிராமனுடைய பேரம் விசித்திரமாயிருந்தது. பூனைக்கு இரு நூறு பவுன் கொடுக்க முடியுமா? என்று கேட்டு விட்டுப் பலர் போய் விட்டனர். சிலர் இந்தப் பேரம் புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர்.

புரோகிதர் உள்ளூர மகிழ்ச்சியோடு இருந்தார். துணிந்து ஒருவன் வந்து இரு நூறு பவுனும் ஒரு காசும் தெனாலிராமனிடம் கொடுத்து பூனையையும் குதிரையையும் வாங்கிக் கொண்டு சென்றான். தெனாலிராமன் இரு நூறு பவுனை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டு ஒரு காசை எடுத்து புரோகிதரிடம் ''இதோ குதிரை விற்ற காசு"என்று சொல்லிக் கொடுத்தான் புரோகிதர் அதிர்ச்சி அடைந்தார். தெனாலிராமனின் தந்திரத்தை அறிந்து எல்லோரும் புகழ்ந்தனர். புரோகிதரோ ஏமாற்றத்தோடு வீட்டுக்குச் சென்றார்.

## நான்

நான் கோப்பாவெளி எனும் கிராமத்தில் பிறந்தேன். எனது அப்பாவின் பெயர் குருநிதன் எனது அம்மாவின் பெயர் ஜெயராணி. எனது குடும்பத்தில் நான் மட்டும் தான் அப்பா 1999ல் சிங்களக் காடையர்களால் சுட்டுக் கொள்ளப்பட்டார். நான் தற்போது. நேசரி படிக்கிறேன் நானும் அம்மாவும் கடும் சோகமான நிலையில் வாழ்கிறோம்.

இப்படிக்கு
கு.நிக்சன்



பா.ஷாருஜன்
தரம்-08K
மட்-மண்டூர்
ஆர்.கே.எம்.வித்தியாலயம்
மண்டூர்-02ம் பிரிவு

## அன்னை

அன்பு எனும் பாசத்தால் அரவணைத்து
என்னை வாழ வைத்த அன்னையே!
நீ கோடி காலம் வாழ வேண்டும்
இந்த மாநிலத்திலே!
கருணையும் நேசமும் நிறைந்த பாசக் கடலே
உனக்கு ஆயிரம் கோடி வணக்கங்கள்.
இறைவனின் சன்னிதானத்தில் இருந்து
இறையருள் வழங்கும் பசுவே!
அகிலத்தில் உன்னைப் போல் நிகர்
யாரும் இல்லையம்மா.

ப. புவேந்திரன்
கரையாக்கன்தீவு



# சிறுவர் சிகரம்

## பொது அறிவு

1) மரத்தினால் ஆன கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை எத்தனையாம் நூற்றாண்டு உருவாக்கி அனுப்பப்பட்டது?
18ம் நூற்றாண்டு

02. காகிதத்தில் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை எத்தனையாம் ஆண்டில் எங்கு உருவாக்கப்பட்டது?
1843இல் இங்கிலாந்தில்

03. விண்வெளிக்குச் சென்ற முதல் இளவயது வீரர் யார்? எத்தனையாம் ஆண்டு சென்றார்?
திஸ்டிட்டேவ் என்ற ரஷ்ய வீரர் 1961ம் ஆண்டு (25வது வயதில்)

04. பல் டாக்டர்கள் அதிகமுள்ள நாடு எது?
அமெரிக்காவில்

05. எந்த நாட்டு மாணவர்கள் ஒரு ஆண்டில் அதிக நாட்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர்.
சீனா நாட்டு மாணவர்கள் (252 நாட்கள்)

06. விண்வெளியில் ஆறுமுறை பயணித்த பெருமை எந்த நாட்டவருக்கு உண்டு?
கேப்டன் ஜான் வாட்ஸ் எங் என்ற அமெரிக்கருக்கு

07. உலகிலேயே அதிகமாக புகைப்படம் எடுக்கப்பட்ட மலை, அதிகமாக வரையப்பட்டமலை, அதிகமாக ஏறபட்ட மலை எது?
ஜப்பானில் உள்ள /ப்யூஸி மலை

08. 13நாட்டுஎல்லைகளைக் கொண்ட ஒரே ஒரு நாடு எது?
சீனா

**வி.யசோதரன்**
**தரம் 11s**
**மட்/ மகாஜனக்கல்லூரி.**

## வாழ்வியல் பற்றிய வைர வரிகள்

*. வாழ்க்கைச் சுமைகள் இல்லை என்றால் வாழ்க்கைச் சுகங்களும் இல்லை.
*. நமது நம்பிக்கை யானையின் தும்பிக்கைக்குச் சமமானது.
*. வாழ்க்கை என்பது ஒரு தேர் அதை நம்பிக்கையோடும், நிதானத்தோடும், பொறுமையோடும் இழுத்துச் செல்லாவிடின் அது தடம் புரண்டு விடும்.
*. இழப்புக்கள் என்பது தவிர்க்க முடியாதவை. அவற்றுக்காக ஏங்காதே.
*. வாழ்க்கை புயலாக மாறும் போது நீயும் புயலாக மாறிக் கொள்.
*. அடுத்த வீட்டு ஏழைக்காக இரக்கப்படு. இறைவன் உன்னை ஆசீர்வதிப்பான்.
*. அடுத்தவனுடைய சுதந்திரங்களைச் சுரண்டுவதில் நீ சுகம் காணாதே.
*. வாழ்க்கை என்பதுமுன்னேறிச் செல்தலே தவிர பின்னேறிச் செல்லுதலல்ல.
*. விடியல் என்பது வேறொருவரினதும் கைகளில் இல்லை.அது அவரவர் கைகளிலேயே தங்கியிருக்கிறது.

**வெல்லபுரியான் , எருவில்**

## பொன் மொழிகள்

01. மன உறுதி இல்லாதவனின் உள்ளம் ஒரு குளம்பிய கடலுக்கு ஒப்பானது.

02. நன்மை செய்பவர் நன்மையையே அனுபவிப்பார் ஆனால் தீமை செய்பவர் தீமையையே அனுபவிப்பார்.

03. தோல்வி என்பது ஒருவரின் வெற்றிக்கு முதற்படியாக அமைந்துள்ளது.

04. முயற்சிப்பவன் முன்னேறுகிறான். முன்னேறியவன் பிறரை முன்னேற்றுவான்.

05. உன்னுடைய மனம் ஒரு கோயில் போன்றது அதை எப்பொழுதும் சுத்தமாக வைத்திரு.

06. படித்தவன் சிந்திக்கிறான். சிந்திப்பவன் முன்னேறுகிறான்.

07. சோம்பலும் செருக்கும் எல்லாக் குணங்களுக்கும் தாய்.

08. நடந்தவை எல்லாம் நடந்தவையாகவே இருக்க வேண்டும். நடப்பவை எல்லாம் நல்லவையாக இருக்க வேண்டும்.

ஜெ. நிரோஜினி
தாழங்குடா

## அறிந்து கொள்ளுங்கள்

01. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு எது?
1948.02.04

02. இலங்கை குடியரசாக்கப்பட்ட ஆண்டு எது?
1972.05.22

03. இலங்கை U.N.O வில் அங்கத்துவம் பெற்ற ஆண்டு எது?
1955.12.14

04. பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றிய ஆண்டு எது?
1815

05. ஒல்லாந்தர் இலங்கை வந்த ஆண்டு எது?
1602

06. இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தம் இடம் பெற்ற ஆண்டு எது?
1987.07.29

07. இல[illegible] வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்[illegible]
[illegible]

08. உயர்[illegible] மன்றம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்[illegible] எது?
1801

09. [illegible]ங்கை தொலைக்காட்சி சேவை [illegible]பிக்கப்பட்ட ஆண்டு எது?
1978

10. கரையோரப் பிரதேசத்தை பிரித்தானியர் கைப்பற்றிய ஆண்டு எது?
1796

ப.நிசாந்தினி
தரம் 11
மட்/ அரசடித்தீவு
வி.ம.வி.

## விடுகதைகளும் விடைகளும்

01. உச்சியிலே கீரிடம் உடம்பெல்லாம் கண் அது என்ன?

02. மேலிருந்தும் வருவான், கீழிருந்தும் வருவான் அவன் யார்?

03. நமக்குரியதை நம்மை விட மற்றவர்கள் தான் அதிகம் பயன்படுத்துவர் அது என்ன?

04. இடிஇடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன?

05. விதையில்லாச் செடி, மழையிலே பிறந்து வெயிலில் காயுது அது என்ன?

06. உயிரில்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன?

**விடைகள்**

01. அன்னாசிப் பழம்
02. தண்ணீர்
03. நமது பெயர்
04. பட்டாசு
05. காளான்
06. தராசு

க.ஆட்டீர்
தரம் 12
பதுளை வீதி, செங்கலடி.




# சட்டத்துறை பற்றிய வினாக்களும் விடைகளும்

**01. இலங்கையில் சட்ட உதவி வழங்கும் நிறுவனங்கள் எவை? உதாரணம் தருக?**

1. அரச அனுசரணை நிறுவனங்கள்
உதாரணம்- இலங்கை அரச மனித உரிமைகள் ஆணைக்குழு.
இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
2. சட்டத்தரணி சங்கத்தின் அனுசரணை நிறுவனங்கள் உதாரணம்- சட்டத்தரணிகள் சங்க மனித உரிமைகள் சங்கம்.
3. வேறு நிறுவனங்கள்
உதாரணம்:- அரச சார்பற்ற நிறுவனங்கள் (Red Cross, CARE) இலங்கை சட்டக்கல்லூரி சட்டஉதவி நிலையம்
4. தனியாரால் நடாத்தப்படும் சட்ட உதவி நிறுவனங்கள்

**02. எவ்வாறு சட்ட உயர் தொழில் சட்ட உதவியில் ஈடுபடலாம்?**

1. சட்ட உதவி வழங்குவதால் தமக்குக் கிடைக்கும் குறைந்த கட்டணங்களைப் பெரிதுபடுத்தக் கூடாது.
2. சட்டத்தரணி ஒவ்வொருவரும் மாதத்தில் ஆகக் குறைந்தது ஒரு வழக்கிலாவது கட்டணமோ அல்லது சன்மானமோ பெறாமல் தோன்றுவதன் மூலம்.
3. சட்டத்தரணிகள் அபரிமிதமான கட்டணங்களை அறவிடாமல் விடல்
4. கட்டணங்களைக் கணிக்கும் போது தமது சொந்த அக்கறைகளை விடுத்து தாம் ஒரு உயர் தொழில் புரிபவர் என்னும் கடமையை மனதில் கொள்ள வேண்டும்.

**03. ‘‘பொது அக்கறை’’ வழக்குகள் என்றால் என்ன?**
ஒருவர் நேரடியாய் ஒரு விடயத்தில் பாதிக்கப்படாத போதிலும் வேறு ஒரு சட்டத்தை அணுக வசதி இல்லாத நபர் அல்லது ஒரு வகுப்பினரின் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டஅக்கறை மீதுஒரு பயமுறுத்தல் எழும் போதும் எந்த பிரஜையும் அல்லது நிறுவனம் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நிவாரணம் கோரி வழங்கிடல்
இது பொதுவாக சுற்றுப் புறச் சூழல் மாசுபடல் தொடர்பானதாக இருக்கலாம்.

**04. ஆசிய கண்ணடத்தில் எந்த நாடு பொது அக்கறை வழக்குகள் தொடர்பில் பிரதான பங்கை வகிக்கிறது? நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சில முடிவுகளை தருக?**

இந்தியா
இந்தியாவில் முதன் முதலில் Khatoon vs State of Bihar வழக்கில் Kabila Hingorini என்பவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தால் வழக்கிடப்படாத மறியலில் இருந்த 18கைதிகள் ஒரே தடவையில் நீதி மன்றத்தால் விடுக்கப்பட்டனர்.
Shabars vs State of Maharastra வழக்கில் ஒரு பத்திரிகையாளர் உயர் நீதிமன்றத்துக்கு எழுதிய கடிதம் மூலம் பெண் கைதிகள் கொடுமைப்படுத்தலுக்கு எதிராய் ஒரு வழக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை Epistolary Jurisdiction என்பர் இலங்கையில் கடந்த வருடம் வைத்தியர்களின் வேலை நிறுத்தத்திற்கு எதிராய் சட்டத்தரணி ஒருவரால் பொது அக்கறை மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஏற்கப்பட்டது.

**05. எந்த வழிகளில் சட்டத்தரணிகள் மக்களுக்கு சட்ட அறிவு, விழிப்புணர்வை ஊட்டலாம்?**

1. பத்திரிகைகள், ஆக்கங்கள்
2. படிப்பறிவு இல்லாத மக்களுக்கு கருத்தரங்கு
3. கூட்டங்களை நடாத்தலாம்
4. கண்காட்சிகளை நடாத்தல் பாடசாலைகளில் சட்ட அறிவு புகட்டப்பட்ட சட்டத்தரணிகள், காவல் துறையினர், நீதிபதிகள் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல்

**06. இலங்கையில் கண்டிப்பான வலுவேறாக்கம் காணப்படவில்லை என்பதற்கான சில உதாரணங்களைத் தருக?**

1. நிறைவேற்றுத் துறையைச் சேர்ந்த ஜனாதிபதியும் (அவசரகால சட்டம்) நீதித்துறையைச் சேர்ந்த பிரதம நீதியரசர் (உயர் நீதிமன்ற விதிகள்) அமைச்சர்களும் (துணை நிலை சட்டங்கள்) பாராளுமன்றத்தின் சட்டமாக்கும் தொழிலை மேற்கொள்கின்றன.
2. ஜனாதிபதி குற்றவாளிகளை மன்னித்தல் மூலம் நீதித்துறையில் தலையிடுதல்
3. பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் தொடர்பி-ல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பாராளுமன்றம் விசாரித்து தண்டனை வழங்குவதன் மூலம் நீதித்துறையில் தலையிடல்.

**07. 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பில் காணப்படும் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் நீக்கப்பட்ட அனைத்து பிரசைகளுக்கும் இருக்க வேண்டிய முக்கிய அடிப்படை உரிமை யாது?**

வாழ்வதற்கான உரிமை (Right to LIFE)

**08. சோல்பரி, 197[illegible] ஆண்டு அரசியலமைப்பில் [illegible]டை உரிமைகளுடன் [illegible]டையன என எவ் உறுப்புரைகள் கரு[illegible]டன?**

சோல்பரி- 29ஆம் உறுப்புரை
1972- 18ஆம் உறுப்புரை

**09. அடிப்படை உரிமை தொடர்பில் எவ்விதமான மட்டுப்பாடுகளும் அற்றுக் காணப்படும் உறுப்புரை எது?**
உறுப்புரை 11 -சித்திரவதைக்கு எதிரான அடிப்படை உரிமை.
உறுப்புரை 10- மதம், மனசாட்சி பின்பற்றும் சுதந்திரம் (எனினும் நடைமுறையில் மத சுதந்திரம் மீறப்படலாம்)

**10. இலங்கையில் சட்ட மூலங்களில் பிரதானமானவை எவை?**
சட்டவாக்கம்
உயர்தர நீதிமன்ற முடிவுகள் வழக்காறு

**11. உலகில் காணப்படும் இரு பெரும் சட்ட மூலங்கள் எவை?**
பொதுச் சட்டமுறைமை
குடியியல் சட்டமுறைமை

**12. இலங்கையின் சட்ட முறைமையில் செல்வாக்கு செலுத்திய சட்டங்கள் எவை?**
இந்துச் தேசவழமை சட்டம்
கண்டியச் சட்டம்
முஸ்லிம் சட்டம்
முக்குவர் சட்டம்
உரோம டச்சு சட்டம்
ஆங்கிலச் சட்டம்

**13. இலங்கையில் முறையே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிக் காலம் எவை?**
போர்த்துக்கேயர்-1505
ஒல்லாந்தர்-1656
பிரித்தானியர் - 1796

**14. இலங்கையில் பிரித்தானியர் காலத்தில் இருந்து இன்று வரை பொதுச்சட்டமாகக் கருதப்படுவது யாது?**
உரோம டச்சுச் சட்டம்

**15. இலங்கையில் உயர் நீதிமன்றங்களின் தீர்ப்பை பின்பற்றல் எந்தச் சட்டத்தில் இருந்து அறிமுகமாகியது?**
ஆங்கிலச் சட்டம்.

**16. முன் தீர்ப்பு வழி நிற்றல் என்றால் என்ன?**
ஒரு மித்த இயல்புடைய வழக்குகளில் உயர்ந்த சட்டப் பதவணியில் உள்ள நீதிமன்றம் அழித்த தீர்ப்பானது கீழ் நிலை நீதிமன்றங்களால் பின்னேபின்பற்றப்படல்.

**17. தீர்ப்பு வழி நிற்றலில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?**
ஒத்த நிகழ்வுகள்
தீர்ப்பு சட்ட அறிக்கையில் இடம்பெறல்
நீதிமன்றப் பதவணி

**18. தீர்ப்பு வழி நிற்றலில் முக்கியமாக எதனைப் பின்பற்றி பின்னே வரும் வழக்கு தீர்மானிக்கப்படும்?**
தீர்ப்பு நியாயம் (Ratio decendi)

**19. தீர்ப்பு வழி நிற்றல் பின்பற்றத் தேவைப்படாத சந்தர்ப்பங்கள் எவை?**
1. தீர்க்கப்பட்ட முன் சட்டம்
2. தீர்ப்பிடைக்கூற்று
3. அறியாமை காரணமாய் எழும் விதி
4. வழக்கை வேறுபடுத்திக் காட்டல்
5. கவனிக்கப்பட முடியாத முன் தீர்ப்பு
6. மாறிவரும் சட்ட நிலமை

**20. இலங்கையில் காணப்படும் அதிகார பூர்வமான சட்ட அறிக்கைகள் எவை?**
ராமநாதன் சட்ட அறிக்கை
புதிய சட்ட அறிக்கை (NLR) 18961978
இலங்கை சட்ட அறிக்கை (SLR) 79 இன்றுவரை

**21. இலங்கையில் சட்ட மூலங்களில் பிற்காலத்தில் எழுந்த போதும் இன்று முன்னுரிமை வழங்கப்படும் சட்டமூலம் எது?**
சட்டவாக்கம்

**22. சட்டவாக்கம் என்பதனால் கருதப்படும சட்டங்கள் எவை?**
பாராளுமன்றத்தால் இயற்றப்படும் இயற்றுச்சட்டம் ஜனாதிபதி, அமைச்சர், மாகாணசபை, உள்ளூராட்சி சபை ஆகியவற்றினால் இயற்றப்படும் துணை நிலைச் சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் உயர் நீதிமன்றத்தின் விதிகள்.

**23. சட்டவாக்கத்தின் தோற்றுவாய்கள் எவை?**
1973ம் ஆண்டு இயற்றப்பட்ட நீதி நிருவாகச் சட்டத்திற்கும் 1978ம் ஆண்டு இயற்றப்பட்ட நீதித்துறைச் சட்டத்திற்கும் பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களே சட்டவாக்கத்தின் மூலங்கள் ஆகும்.

**24. இலங்கையில் எந்த ஒரு சட்டத்திலும் ஒரு விடயம் புகுத்தப்படாமல் ஒரு வெற்றிடம் காணப்படும்போது குறை நிரப்பி சட்டமாக பயன்படுத்தப்படும் சட்டம் எது?**
உரோம டச்சு சட்டம்

**25. இலங்கையில் காணப்படும் நியதிச் சட்டங்களில் ஆங்கிலச் சட்ட ஆதிக்கம் கூடுதலாகக் காணப்படும் சட்டத்துறைகள் எவை?**
குற்றவியல் சட்டம்
குற்றவியல் நடவடிக்கை முறை கோவை
சான்று கட்டளைச் சட்டம்
நிருவாகச் சட்டம்
பங்குடமை சட்டம்

**26. இலங்கையில் காணப்படும் நியதிச் சட்டங்களில் உரோம டச்சுச் சட்ட ஆதிக்கம் கூடுதலாக காணப்படும் சட்டத்துறைகள் எவை?**
தீங்கியல் சட்டம்
ஒப்பந்தச் சட்டம்
குடும்பச் சட்டம்
ஆதனச் சட்டம்

**27. இலங்கையில் காணப்படும் விசேட அல்லது தனியார் சட்டங்கள் எவை?**
தேச வழமைச் சட்டம்
கண்டியச் சட்டம்
முஸ்லிம் சட்டம்

**28. சட்டம் ஒன்று நிறைவேற்றப்படும் போது பின்பற்றப்படும் படிமுறைகள் எவை?**
1. வர்த்தகமானியில் வெளியிடல்
2. 1ம் வாசிப்பு
3. 2ம் வாசிப்பு
4. குழுநிலை
5. அறிக்கை நிலை
6. 3ம் வாசிப்பு
7. சபாநாயகரின் சான்றிதழ்

**29. சட்டமாக்கும் போது எந்தப் படிமுறையில் சட்டத்தின் பொதுக் கோட்பாடுகள் பற்றி கலந்தாலோசிக்கப்படும்?**
2ம் வாசிப்பு

- சிறுகதை -

# திருப்பம்

திருமதி.சுரேஸ்குமார் சகாயநாயகி



படுக்கையில் இருந்து எழும்பக் கூட மனமின்றி ஆழ்ந்த தூக்கத்திலிருந்த தர்சனை தேநீர் கோப்பையுடன் வந்த அத்தை ''என்ன தர்சன், இன்னுமா எழும்பவில்லை'' என்று எழுப்பி விட்டாள்.

அந்தளவில் அவன் எழுந்து காலைக் கடனை முடித்து விட்டு அவசர அவசரமாக சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போனான் தர்சன்.

தர்சனுக்கு சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாருமே இல்லை. தன் அத்தை கமலம் மட்டும் தான். கமலத்தின் கணவரும் மாரடைப்பால் கண்ணை மூடி விட்டார். எல்லாப் பொறுப்பையும் தர்சன் தான் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலை.

அத்தைக்கு ஒரே மகள். அவள் தான் தாரணி. பிறந்ததிலிருந்து தர்சனுக்கு என்றே முடிச்சுப் போட்டு விட்டார்கள். சிறு வயது முதலே தாரணி நல்ல அழகானவள்.

தர்சனோ தன் படிப்பைத் தொடரக் கூட முடியாது ஐந்தாம் தரத்துடன் நிறுத்தி விட்டு கராச் ஒன்றில் வேலை செய்து அதில் கிடைக்கும் சம்பளத்தில் தான் தாரணியை நன்றாகப் படிப்பித்தான். அத்துடன் குடும்பத்தையும் கஸ்ரப்பட்டுக் காப்பாற்றி வந்தான்.

இப்படியே நாட்களும் நகர்ந்து காலச்சக்கரமும் சுழன்று கொண்டு இருந்தது.தாரணியும் பெரியவளாய் வளர்ந்து விட்டாள். ஒரு நாள் வழமை போல் பாடசாலை போக புறப்பட்டவள், ''அம்மா..இன்றைக்கு ஸ்கூல் பீஸ் கட்ட வேண்டும். காசி தராவிட்டால் சத்தியமா நான் ஸ்கூல் போகவே மாட்டேன்!'' என்று அடம்பிடித்து அழுதாள். இதைக் கண்ட தர்சன் ''தாரணிம்மா நீ அழாமல் ஸ்கூலுக்குப் போ. நான் காசி கொண்டு வருகிறேன்!'' என்றதும் சரியென தலையசைத்து விட்டு சிட்டுப் போல் போவதையே பார்த்துக் கொண்டு நின்றவனை அத்தையின் குரல் சுயநிலைக்குக் கொண்டு வந்தது. ''என்னப்பா........ மழையும் இருட்டிக் கொண்டு வருது. நேரத்துக்கு வேலைக்கு போய் சேரலாமே!'' என்றாள்.

''சரி அத்தை'' என்று கூறியபடி சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போனான்.

வேலை செய்தால் தான் தர்சனுக்குச் சம்பளம். அன்று வேலையைப் பாதியில் முடித்து விட்டு முதலாளியிடம் சம்பளக் காசை வாங்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக ஸ்கூல் பீஸ் கட்டுவதற்காகத் தாரணியின் பாடசாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அங்கே சென்றவன் தாரணியைத் தேடினான். எதிரில் வந்த அதிபர் ''தர்சன்!'' என்று என்று குரல் கொடுத்ததும் என்ன என்பது போல் திரும்பினான். ''தம்பி தர்சன் உன்னிடம் ஒரு விடயம் கூற வேண்டும்...'' என்று பேச்சைத் தொடங்கினார்.

''தாரணி'' உண்மையில் நல்ல பிள்ளை. படிப்பிலும் நல்ல கெட்டிக்காரி. ஆனால் இப்போ அவள் காதல் வலையில் விழுந்து விட்டாள். படிப்பிலும் நாட்டம் குறைவு. நீ எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்து அவர்கள் குடும்பத்தைப் பார்க்கிறாய்.....!''இவ்வாறு பேசிக்கொண்டு போனவரை இடைமறித்து,''தாரணியின் ஸ்கூல் பீஸ் கட்ட வேணும் சேர்....''என்று பேச்சைத் திசை மாற்றி விட்டு, அதிபரின் காரியாலயம் நோக்கிச் சென்று பணத்தைச் செலுத்தி விட்டு ஆழ்ந்த சிந்தனையோடு வீட்டை நோக்கிச் சென்றான்.

''என்னப்பா... சீக்கிரமே வந்திட்டா! முகமெல்லாம் ஒரு மாதிரியா வாடியிருக்கு! உடம்புக்கு ஏதும் சுகமில்லையா......''என்றாள் அத்தை. இல்ல அத்த ,லேசான தலையிடிதான் வேறு ஒன்றுமில்லை''என்று கூறிக் கொண்டுதன் அறையை நோக்கி நடந்தான். கமலம் விட்ட பாடே இல்லை. ''சொல்லப்பா என்ன நடந்தது?'' என்று கவலையுடன் கேட்டாள். இனியும் கூறாமல் இருப்பது சரியில்லை என்று எண்ணியவனாய் அதிபர் கூறிய யாவற்றையும் அத்தையிடம் கூறி முடித்தான்.

இதைக் கேட்டதும் ஒரு கணம் ஆடித்தான் போனாள் கமலம். இருந்த போதிலும் இதற்கு வெகு சீக்கிரமே முடிவு கட்டத்தான் வேணும் என்று நினைத்தவளாய் ''நான் கண் மூடுவதற்கிடையில் உனக்கும், தாரணிக்கும் சீக்கிரமே திருமணத்தை நடத்திடனும்'' என்று பேசிக்கொண்டிருக்கையில் பாடசாலை விட்டு வந்த தாரணி தனது பேச்சு நடைபெறுவதைக் கேட்டதும் அவளுக்கு திகீர் என்றது.

மதியச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு பின்னேர வகுப்பிற்குச் செல்வதற்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தவளிடம், ''தாரணி உன்ர மனசில என்னதான் எண்ணிக் கொண்டிருக்கிறாய்! இனிமேல் நானும் எவ்வளவு காலம் தான் இருக்கப் போறன்! கூடிய சீக்கிரமே உன்னையும் தர்சனையும் திருமணக் கோலத்தில் பார்க்கனும்.....''பேச்சை முடிக்கும் முன்னே தாரணி''என்னம்மா சொல்லுறீங்க! நான் நான்.... தர்சனைத் திருமணம் செய்வதா? இந்தக் கறுப்பனையா, படிப்பறிவே இல்லாதவன், கட்டையன் அவனைப் போல் கறுப்பா, கட்டையா யாராவதுபொறந்திருப்பாங்க கட்டிக்கிறதுதானே! கடைசிவரையும் இவனை நான் கட்டவே மாட்டேன்.!உயிராக காதலிக்கும் ரவியைத்தான் கலியாணம் கட்டுவேன். நாகரிகம் தெரியாத இவன் எல்லாம்........!'' என்று வாய்க்கு வந்தவாறு திட்டித் தீர்த்தாள் தாரணி.

விரும்பாத எதையும் வலுக் கட்டாயப்படுத்தி ஒருவர் மீது திணிக்கூடாது என்று எண்ணியவாறு தன்னைத் தானே திடப்படுத்திக் கொண்டு தர்ஷன் கூறினான். ''அவ விருப்பப்படியே ரவியையே திருமணம் செய்து கொடுத்திடுவோம் அத்தை'' அதே போல் திருமணமும் நடந்து முடிந்தது.

நாட்கள் நகர்ந்து மாதங்கள் உருண்டோடியன. வழமைபோல் தர்சனும் வேலைக்குப் போகத் தொடங்கினான். நடந்தவற்றை மறந்து மும்முரமாக வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான் தர்சன். அப்போது அங்கு வந்த தனது நண்பன் அசோக்,''என்ன மச்சான் எப்படியிருக்கா? என்னடா நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா?'' என்று கேட்டான். தர்சனோ வாய் திறக்காமலே உண்மையென்று தலையைசைத்தான் ''இனி என்ன செய்வதாக உத்தேசம்?''என்று கேட்க......'' அது தான்டா எனக்கும் தெரியல்ல. தாரணியை என்னால மறக்கவும் முடியல்ல. அதே நேரம் வேறு ஒரு பெண்ணை நினைக்கவும் முடியாமல் இருக்கு. எனக்கு சாகிறதா, வாழ்கிறதா என்று தெரியாமல் குழப்பமாக உள்ளது.'' என்றான் தர்சன்

''நீ என்னடா பைத்தியக் காரன் போல் பேசிக் கொண்டு உனது இந்த அற்ப சொற்ப காதலுக்காக எதிர் காலத்தைப் பாழாக்க நினைக்காதே! நல்ல வழியில் சென்று உனது பெயரை நாட்டிற்காவது நிலை நாட்டச் செய்யடா! '' என்று கூறியவனாய் தர்சனிடம் இருந்து விடை பெற்றான் அசோக்.

அன்று இரவெல்லாம் தர்சனின் கண்களைத் தூக்கம் தழுவ மறுத்தது. பலவாறு சிந்தித்தான். நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். ஒருத்திக்காக என்னை அழிப்பதை விட நம் நாட்டுக்காக, தாயக மீட்புக்காக இந்த உயிரை தியாகம் செய்தால் என்ன? ''சிந்தித்தவனாய்க் கண்ணயர்ந்தான்.

சேவல் கூவியது பொழுதும் புலர்ந்தது. வழமைக்கு மாறாக மனம் குதூகலித்தது. இறுதியாக தன் அத்தையின் முகத்தை ஒரு தடவை பார்த்துக் கொண்டான். வீட்டை விட்டு சைக்கிளை உருட்டிக் கொண்டு வெளியில் வந்து மீண்டும் திரும்பி ஒரு தடவை பார்த்து விட்டு சைக்கிளில் ஏறினான் அது கிண்ணறம் பாடியது.

---

சுரேஸ் நாவற்குடா செல்வதற்காக கல்முனையிலிருந்து பஸ்பிடித்து ஏறிக் கொள்கிறான்.

# தடுமாற்றம்

குட்டிக் கதை



அன்று அவன் வேலை முடிந்து வீடு செல்லும் நாள்.

இடையில் மருதமுனையில் வைத்து ஒரு அழகான இளம் பெண் அதே பஸ்ஸில் ஏறி, சுரேஸ் அமர்ந்திருந்த சீற்றில் அமர்ந்து கொள்கிறாள். அவன் அவளை உன்னிப்பாகப் பார்க்கிறான்.

அவ்வளவுதான் அவனையுமறியாமல் அழுகை பொத்துக் கொண்டு வருகிறது.

மூன்று வருடங்களுக்கு முன் இதே பெண்ணை சுடலையில் அடக்கம் செய்த போது அவன் அலறித்துடித்து சட்டென ஞாபகத்துக்கு வருகிறது.

இவள் எப்படி இங்கே?

அவனுக்குத் தலை சுற்றி வருகிறது.

பஸ் ஓடிக் கொண்டேயிருந்தது.

அவனுக்கு இறங்கும் இடம் மறந்து போயிற்று.

பக்கத்தில் வந்திருந்த அந்தப் பெண்ணும் இறங்கிப் போய் விட்டாள்.

பஸ் கண்டக்டர் சுரேசை அவதானித்தார்.

''தம்பி, நீங்க நாவற்குடாவுக்குத்தானே ரிக்கட் எடுத்தீங்க! பஸ் இப்போது மட்டக்களப்பை நெருங்கிவிட்டது. பக்கத்தில் இருந்து வந்த பெண்ணின் அழகில் மயங்கிவிட்டீர்கள் போலும்!'' என்று கிண்டலடித்தார்.

''நோ நோ! அந்தப் பெண் செத்துப்போன என் தங்கச்சி மாதிரியே இருந்தாள். அதுதான் என்னையே மறந்து போனேன். நல்லது நான் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன.'' என்றபடி மேலதிக தூரத்துக்குரிய பணத்தை எடுக்க பொக்கற்றினுள் கையை விட்டான். அங்கே அவன் பேர்ஸைக் காணவில்லை.

இதை சுரேசுக்குப் பின்னாலிருந்த ஒரு அன்பர் கவனித்துக் கொண்டுருந்தார். அவர் இல்லாது போயிருந்தால் சுரேஸ் வீட்டுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல சற்று சிரமப்படத்தான் வேண்டி வந்திருக்கும்.

கே. சுசி எருவில்.

## இது நமது கதை நாம் பட்ட துயரக்கதை

# ஆடித் தீ

-நாவல்-

5

-ஓ.கே. குணநாதன்-

மட்டக்களப்பு ஜெனரல் கொஸ்பிட்டலின் நாலாம் வாட்டின் 5ம் இலக்கக் கட்டிலிலே கிடந்தார் அப்பா.

இடது கையின் நரம்பினூடாக ஏற்றப்பட்டிருந்த 'சேலைன் சொட்டுச் சொட்டாக விழுந்து உடலினுள் புகுந்து கொண்டிருந்தது.

வாட்டின் குறுக்கும் நெடுக்கும் சமாதானப் புறாவாகப் பம்பரம் போலச் சுழன்று திரியும் டாக்டர்களும், நேர்ஸ்களும் அடிக்கொரு தடவை அப்பாவின் நாடித் துடிப்பைப் பார்த்த வண்ணமிருந்தனர்.

இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரன் மெதுவாக அப்பாவை உற்றுப்பாக்கின்றான். அங்கே வாடி வதங்கிய நிலையிலே உணர்வற்றுக் கிடந்தார். அவரின் அடி வயிறு மட்டும் புல்லாங்குழல் வித்துவானின் விரல்கள் தாளம் போடுவது போல மேலும் கீழும் அசைந்த வண்ணமிருக்கிறது.

சுவரிலே தொங்கிக் கொண்டிருந்த சுவர் மணிக்கூட்டின் அலாம் ஒரு மணி ஓசையை எழுப்பி ஓய்கிறது.

அவன் சுவரைத் திரும்பி நேரத்தைப் பார்க்கிறான். அது நள்ளிரவு 1.00 மணியைக் காட்டுகிறது. அப்பொழுது சொறிநாயின் நீண்ட ஓலம். அதைத் தொடர்ந்து ஆந்தையின் அலறல்.

ஆந்தையும் கத்தி.... நாயும் குரைத்தால்......... இயமன் வருகிறான். யாரோ சாகப்போகிறார்கள் என்று சொல்வார்களே!

அப்படியானால்..... யார் சாகப் போகிறார்கள்? ஒரு வேளை......... இல்லை ...... இல்லை........ அப்படியிருக்காது! அப்படி இருக்கக் கூடாது!

அவனையுமறியாமல் அவனுடைய மனம் ஆண்டவனை வேண்டிக் கொள்கிறது. இதயம் பயத்தினால் வேகமாக அடிக்கிறது.

அப்பொழுது திடிரென ஒரு பனங்காட்டு நரியின் ஊளைச்சத்தம் பயங்கரமாக எழுகிறது.

கட்டிலிலே நீட்டி நிமிர்ந்து கிடந்த அப்பாவை உற்று நோக்கினான். அப்பொழுது திடிரென மயக்கம் தெளிந்த அவர் கண்கள் இரண்டும் பிதுங்கி வெளிவர அவனைப் பார்த்து, சொன்னார் ''தம்பி மகேந்திரன், நான் பிழைக்க மாட்டன். நான் செத்தா உண்ட தங்கச்சியையும் அம்மாவையும் கவனமாகப் பார்த்துக் கொள்ளனும். அதுகளுடைய கண்கள் கலங்காமப் பார்த்துக் கொள்ளனும் இது உன்ட கடம. இந்தக் கடமையை ஒழுங்காச் செய்வாய் என்ற நம்பிக்கையோட செத்துப் போறன்.''

அவருடைய இரு கன்னங்களினூடாகவும் வடிந்த நீர் தலையணையை நனைத்துக் கொண்டிருந்தது.

''அப்பா, உங்களுக்கு ஒன்றுமே நடக்காது நீங்க பயப்படாம சும்மா இருங்க அப்பா''


அவருடைய கரங்களைப் பிடித்தவாறு மேலே பார்த்தான் சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருந்த ''சேலைன்'' நின்று போய் இருந்தது. அதனைக் கண்டதும் அவனுடைய...... நாடி நரம்பெல்லாம் விறைத்து அவனுடைய கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. கண்களை அகலத் திறந்து உற்றுப்பார்த்தான். சேலைன் நின்று போய்த்தான் இருந்தது.

''டாக்டர்''

கத்திக் கொண்டு டாக்டரை நேர்க்கி ஓடினான்.

அவனுடைய சத்தம் கேட்ட டாக்டர்களும், நேர்ஸ்மாரும் வேகமாகக் கட்டிலை நெருங்கி அப்பாவினுடைய உடலைப் பலமுறை சூடேற்றும் வண்ணம் தேய்த்தனர். இன்ஜெக்ஷன் போட்டனர். இயந்திர கதியில் செயற்பட்டனர்.

மகேந்திரன் கட்டில் அருகே மௌனமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தான். இறுதியில் போர்த்திருந்த வெள்ளை வெற்சீற்றை எடுத்து தலையை மூடி உடல் முழுவதையும் போர்த்து விட்டு குனிந்த தலை நிமிராமல் வெளியேறினார்கள்.




அப்பொழுதுதான் அவனுக்கு எல்லாமே புரிந்தது.

''அப்பா.... எங்களை விட்டிற்று போயிற்றீங்களா அப்பா''

ஓ வென்று ஒப்பாரி வைத்துக் கத்தினான். வைத்தியசாலையே அதிர்ந்தது.

வாசலிலே வாழைகள் கட்டி.... குருத்துலோலைகளினால் சோடித்து......... எங்கும் வெள்ளைக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

நேரம் பி.ப 4.00 மணியை நெருங்க நெருங்க சாவீட்டுக்கு வரும் சனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

சனங்களின் வருகையும் அதிகரிக்க அதிகரிக்க வாசலின் அருகே இருந்த பறைமேளக்காரன் சவப்பறை மேளத்தை ஓங்கி அடித்தான். குழல் ஊதுபவனும் ஒத்து ஊதினான்.

சவப்பறை ஒலியும் குழல் ஒலியும் கண்ணீர் விட்டுக் கதறுபவர்களின் அழுகை ஒலியும் ஒன்று சேர்ந்து வீடே துக்கத்தில் சோகமயமாகக் காட்சி அளிக்கின்றது.

தென்னம் புறாளைகளை நட்டு அதில் சாக்குப் படங்குகளை இழுத்துக் கட்டி பந்தல் போட்டிருந்தார்கள். அதிலேதான் மகேந்திரனின் அப்பாவின் சவம் வைக்கப்பட்டிருந்தது.

போடப்பட்டிருந்த பந்தலின் தூண் ஒன்றிலே சாய்ந்தவாறு தந்தையின் சவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் மகேந்திரன். பார்த்துக் கொண்டிருப்பதை தாயும் பார்த்திருக்க வேண்டும். அல்லது பிரியும் நேரம் நெருங்கியதோ என்னவோ!

''தம்பி! இஞ்ச வா. இஞ்ச வந்து அப்பாவை ஒரு தரம் பாரு. அதுவும் இன்னும் கொஞ்ச நேரம் மட்டும் தான் பார்க்கலாம். இனி அப்பாவைப் பார்க்கவே இயலாது. கடைசித் தடவையாகப் பார்.........''

தாய் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள். அந்த ஒப்பாரியுடன் சேர்ந்து தங்கையும் ''ஓ'' என்று அழுதாள்.

அந்தக் காட்சி அங்கு வந்திருந்த அனைவரினதும் மனங்களை உருக்கியது. எல்லோருடைய கண்களும் அவர்களையே மறந்து கண்ணீரைப் பூத்தது.

இதைப் பார்த்த அவனுக்கும் துக்கம் நெஞ்சை நிறைத்தது. அழுகை வர மறுத்தது. அடைக்காத்து வைத்த கண்ணீர் கடைக்கண்ணால் கசிந்தது.

நேரம் 4.00 மணியானது. மௌனங்கள் இடைவெளிகளாகின. இறுதிக் கிரிகைகள் ஆரபமாகியது.

தேவராம் பாடி...... சூடம் கொழுத்தி முடிய........ இறுதி நிமிடம்........ இறுதி நிகழ்வு சவப் பெட்டியை மூடினார்கள்.

''ஓ! ஐயோ அப்பா!.......... என்ட கடவுளே........! என்னை விட்டிற்றுப் போறிங்களா.....!''

ஒப்பாரியின் ஓசைகள் வானைப் பிளந்தன.

மனைவி, மகள்...... உற்றார்........ உறவினர்கள் சவப்பெட்டியைத் தொடவிடாமல் பெட்டியின் மேலே அடித்துக் கதறினர். வலுக்கட்டாயமாகப் பிரித்தெடுக்கப்பட்ட சவப்பெட்டி வாழைத்தண்டும், குருத்தோலையும், வெள்ளை ரிசூவும் கொண்டு அலங்கரிக்கப்பட்ட பாடையினுள் வைக்கப்பட்டது.

நான்கு பேர் அந்தப் பாடையைத் தூக்கிக் கொண்டனர். பாடை கனத்ததோ என்னவோ........ அவர்களின் கால்களிலே ஒரு வேகம்.

மகேந்திரனின் அப்பா அமிர்தகழி சேமக்காலையை நோக்கி........ நிரந்த முகவரியை நோக்கி..... இறுதிப்பயணத்தை ஆரம்பித்து விட்டார்.

சவத்தின் முன்னே பறையும் குழலும் சோக ஒலியேழுப்பிச் மட்டக்களப்புப் பண்பாட்டின்படி நாவீதன், நெல்லுப் பொரிகளைத் தூவியபடி சென்று கொண்டிருந்தான்.

அதையடுத்து..... குடும்பப் பொறுப்பு உன்மேல் சுமத்தப்பட்டு விட்டது என்பது போல வாயை வெள்ளைச் சீலையால் மூடிக் கட்டியபடி கொள்ளிக்குடத்தை தலையிலே சுமந்த வண்ணம் பாடையின் முன்னே நகர்ந்து கொண்டிருந்தான் மகேந்திரன்.

அவன் நடைப்பிணமாக நடந்து கொண்டிருந்தான். மனம் ''ஓ'' வென்று அழுதது. அவனுடைய தலையிலே அழுத்திக் கொண்டிருக்கும் கொள்ளிக் குடத்தின் பாரத்தை விட......... அவன் மேலே ஏற்றப்பட்டிருக்கும் குடும்பப் பாரம் நெஞ்சிலே சுமையாக கனத்துக் கிடந்தது.

செய்ய வேண்டிய எல்லாக் கிரிகைகளும், கடமைகளும் நிறைவு பெற...... ஒரு வாழ்க்கையின் பயணத்தை வழியனுப்பி விட்டு வீட்டைநோக்கி வந்து கொண்டிருந்தான்.

வீட்டை நெருங்கியதும்..... மீண்டும் அங்கே அழுகை ஒலி....! ஒரே கூச்சல்......!

அவன் ஒன்றுமே புரியாமல் வேட்டியைத் தூக்கி மடித்துக் கட்டியபடி வீட்டை நெருங்குகிறான்.

''உங்க அப்பாவின் இழப்பை தாங்க முடியாமல், உங்க அம்மா செத்துப் பொயித்தாங்கா.....''

அவனை நோக்கி வந்த ஒரு பெரியவரின் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள் காதினிலே நாராசாரமாய் ஒலிக்கின்றன.

பட்டகாலிலே படும்..... கெட்ட குடியே கெடும். அதேபோல துன்பம் வந்தால் தொடர்ந்து வருமா?

முந்தியடித்துக் கொண்டு வீட்டினுள் நுளைந்தான். அங்கு அப்பாவைக் கிடத்திய அதே கட்டிலிலே அம்மாவும் மல்லாக்கப் படுத்துக் கொண்டு மௌனமாக நிரந்தரமாகக் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவளின் நிலையைக் கண்டதும் அவனுக்கு தூக்கி வாரிப் போட்டது. சில நிமிடங்கள் நிலை குலைந்து போனான்.

''அம்மா எங்களையெல்லாம் அநாதைகளாக்கி எல்லாப்பாரத்தையும் என்மேல சுமத்திப் போட்டு நிம்மதியாக பொயிடடிங்களேயம்மா பொயிட்டிங்களே''

ஓவென்று கத்தினான்- - - அழுதான் அவளின் உயிரற்ற உடலின் மேலே விழுந்து புரண்டு புரண்டு கதறினான். இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த நிவே... அவன் ஆறுதல் கூறி கட்டியணைக்க வேண்டிய நிலை. அவனைக் கட்டியணைத்து ''அண்ணா அழாதீங்கண்ணா அழாதீங்க ஆறுதல் கூற வேண்டிய நீங்களே இப்பிடியழுதா...நாம எப்படி அண்ணா வாழுறது... ஆறுதல் வார்த்தைகள் கூறினாள்.

அந்தக் காட்சி அங்கு நின்ற எல்லோர் கண்களிலும் கண்ணீரை மொட்டரும்பச் செய்தது.

''நிவே...!''

தங்கையை இறுக அணைத்துக் கொண்டான்.

அவனுடைய நெஞ்சத்தில் தன் தங்கைக்காக தன்னுயிரைக் கொடுத்தாவது அவளை வாழ வைக்க வேண்டும் என்ற வெறி உணர்வு மட்டும் நிறைந்து கிடந்தது.

(தொடர்ந்து வரும்)

# வங்கக் கடலில் மாவீரர் நினைவு கூரல்கள்

மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றதனை அனைவரும் அறிவோம். அது தொடர்பான விபரங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்புலிகள் மாவீரர்நாள் நிகழ்வினை உணர்வு பூர்வமாகவும், சிறப்பாகவும் நடத்தினர்.

மாவீரர் நாள் பொதுவாக அனைத்து மாவீரர்களையும் நினைவு கொள்வதற்கான புனிதமான நாள். இந்தக் கருத்தில் எதுவித மாற்றமும் எந்தக் காலத்திலும் இருக்காதென்பதை உறுதிபடக் கூறமுடியும். ஏன் இதைக் கூறவேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டதெனின் கடற்புலிகளிற்கென தனியாக மாவீரர் நாள் நிகழ்வுகள் ஏன் நடைபெற வேண்டும் என விளக்கமில்லாது கேள்வி ஒன்றை எழுப்பலாம். இப்படிப்பட்டவர்களிற்குப் பதிலளித்துச் செல்வது கட்டாயமானது தானே. மண்ணின் விடுதலைக்காக தமது உயிரைத் தந்தவர்கள் புனிதமானவர்கள்... அவர்களின் தியாகத்திற்கு முன் ஏனையவை மண்டியிடவே வேண்டும்.

ஒவ்வொரு மாவீரனின் கனவும் எமது மக்களின் விடுதலை பற்றியதே.... ஆனால் மாவீரர்களின் வீரச்சாவு வித்தியாசமானது, வியப்புக்குரியது.

கடற்புலிகளின் உருவாக்கமும், வளர்ச்சியும், இன்றைய போரியல் வெற்றியும்.... உற்று அவதானிக்கும் போது... அலையடித்து ஆர்ப்பரிக்கும் ஆழ்கடலில் ஒவ்வொரு கடற்புலி வீரனும் கடற்தாயின் அலையை மட்டுமே அரணாக வைத்து... போராடியதும்... உப்பு நீருடன் உதிரத்தைக் கலந்து



கடலன்னை மடியோடு கலந்துவிட்ட கடற்புலிகளுக்கு அந்தக் கடல் அன்னை மடியிலேயே ஒளியேற்றி வழிபடுவதே பொருத்தமானதாகும். இதனைக் காலம் கனியும் போது தமிழர் தாயகத்தின் அனைத்துப் பிரதேசக் கடலிலும் மாவீரர் நாளன்று ஒளியேற்றி கடலை சூரியனின் வருகையினால் பகலாவது போல வெளிச்சம் பரவ அதில் மாவீரர்களின் முகம் மலரக் காணவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாளன்று கடற்புலிகள் சிறப்பான வழிபாட்டைச் செய்தமை கடற்புலிகளின் தனித்துவத்தையும் எடுத்துக்காட்டியது.

தரையில் கடற்புலிகளின் விசேட படையணியினரின் அணிவகுப்புக்கள் நடைபெற்றன. தொடர்ந்து கடற்புலிகளின் போர்ப் படகுகள் கடலலையைக் கிழித்து மூடிவந்தன... தமிழரிற்கென்றொரு கடற்படை கடலிலே காவியம் படைத்து நிமிர்ந்து செல்வது வியத்தகு செயலாகும்.

தரையிலும், கடலிலும் நடைபெற்ற இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து கடலிலே அலங்கரிக்கப்பட்ட படகில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பிரதான சுடரை யேற்றினார். இது தமிழரிற்கென்றொரு கடற்படையினை தலைநிமிரச் செய்தவர்களை நினைத்து ஏற்றப்பட்ட சுடர். இதனூடாக எமது மண்ணின் விடுதலை அண்மித்து வருவதற்கு கடலிலே தமிழர் வலுவான சக்தியாக நடைபோட




வேண்டும். என்ற எண்ணம் வலுக்கின்றதைக் காணமுடிகின்றது.

ஸ்ரீலங்கா கடற்படையினரால் கரையோர மக்களும், கடற்தொழிலாளர்களும் பட்ட துன்பம் கொஞ்சமல்ல... அதிவேக டோறாக்களிலும், போர்க்கப்பல்கலும் வரும் கடற்படையினர் கரை யோர மக்களைத் தாக்கியதில் பலர் உயிரிழந்தார்கள், பலர் அவையங்களை இழந்தார்கள், சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மறுபுறம் கடற்தொழிலாளர்கள் தமது தொழிலை சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் செய்வதற்குக் கடற்படையினர் தடைகளைப் போட்டார்கள்.

கடலிலே கடற்தொழிலாளர்கள் பலர் உயிரிழந்தனர். தொழிலை சுதந்திரமாகச் செய்ய முடியாமல் கடற் தொழிலாளர்களின் உயிர்களைக் கடற்படையினர் பலி கொண்டனர். எமது கடலிலே நாம் தொழில் செய்ய முடியாதா, என கடற்தொழிலாளர்கள் ஏங்கி நின்ற போது கடற்புலிகள் தமதுயிரைக் கொடுத்து எங்கள் கடலிலே எவன் எம்மைத் தடுப்பதென கடலில் தமிழ்க் கடற்படை வீறு நடை போட்டது.

எமது தேசத்தின் விடுதலையினை மெய்யாக்கும் நம்பிக்கையினைக்

**கனகரவி**

கடலை மீட்டெடுப்பதன் மூலமாகவுமே தரமுடியும். தமிழர் தாயகப் பிரதேசத்தின் கடற்பரப்பு மீது அன்னியர்களிற்கு இருக்கும் மோகம் நாமறியாதவொன்றல்ல... சிங்கள தேசம் போரியல் ரீதியாகவும் கடலை நம்பியே தமிழர் தாயகத்தை சிதைக்க கங்கணம் கட்டி நிற்கின்றது. சில பிரதேசங்களில் கடற்தொழில் செய்வதற்கென்ற போர்வையில் தமிழர் தாயகத் திற்குள் திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்துள்ளனர். இது போன்ற வற்றிற்கும் ஸ்ரீலங்கா கடற்படை துணையாகவே இருக்கின்றது. இதனை திருமலை தொடக்கம் முல்லைத்தீவு வரையான கரையோரப் பிரதேசங்களில் காணலாம்.

இது தமிழர் தேசத்தின் வளங்களை ஆக்கிரமித்துக் குடிகொண்டு தமிழரைக் குடிபெயரைச் செய்வது என்ற கபட நோக்கில் செய்யப்பட்டது. இதற்கு பெரும் துணையாக ஸ்ரீலங்காவின் படைத்துறை இருக்கின்றது. கரையோரத்தில் கடற்படையினர் இதனை பெரும் சேவையாகச் செய்து வருகின்றனர். தமிழர் இதனை முறியடிக்க வேண்டுமெனின் தமிழ்கடற்படை வலுவாக்கப்பட வேண்டும். கடற்புலிகளின் `நிமிர்வு தமிழர்கென்றே தனிக் கடற்படையினை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறானதொரு கடற்படையைக் கட்டியெழுப்ப கடற்புலிகள் ஏராளமான தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதன் பயனாகவே நன்மை பெற்ற நாம் அவர்களை வழிபடுவதற்கு என்றென்றும் பின்நிற்கக் கூடாது. மாவீரர்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒவ்வொரு கதையிருப்பது போல கடற்புலிகளின் தியாகத்திலும் உள்ளது.

முல்லைத்தீவில் கடற்புலிகளின் சிறப்புப் படையணிகளும், தளபதிகளும், சிறப்புத்தளபதியும், மக்களும் கலந்து கொண்ட மாவீரர் நாள் நிகழ்வு... தமிழ் கடற்படையின் தேவை பற்றி தமிழர் மனங்களில் மேலும் வலுவூட்டியது. இந்த உணர்வு பூர்வமான நிகழ்வில் கடலையும் பிரதேச ரீதியான வேறுபாடில்லாமலே ஒவ்வொரு கடற்புலிவீரனும் பார்த்துள்ளான். எந்தவொரு கடற்புலிக்கும் தமிழீழக் கடல் பற்றி வேறுபட்ட பார்வை வராதது கண்டு அவர்களைச் சிங்கள தேசம் ஆச்சரியத்துடன் பார்க்கின்றது. பிரதேச ரீதியாக புலிகளிற்கிடையில் தடுப்பொன்றை போடுவதற்கு முற்பட்டவர்களெல்லாம் தோல்வியையே கண்டு வந்துள்ளனர்.

வியத்தகு மனவுறுதியுடன் கடலை காக்கப் புறப்பட்டவர்கள் மண்ணையும் அதன் மூலமாக மீட்டார்கள். சிந்தும் குருதியால் தேசத்தை விடுதலை நோக்கி நகர்த்திய மாவீரர்கள் கார்த்திகை 27அன்று உலகிற்குச் சொல்லும் செய்தி தமிழர் தொடர்ந்தும் வேதனையிலும், சோதனையிலும் வாழ முடியாது என்பதாகும்.

இந்தச் செய்தியோடு கடலைப்பற்றி பேச்செழும் போது அயல் நாட்டவரும். கடற்புலிகள் பற்றி பேசுகின்றனர். வல்லரசானவர்களும் பேசுகின்றனர். சிறிய தேசத்திலிருந்து அனைவரினதும் பார்வையைத் திரும்ப வைத்தவர்களில் கடற்புலிகளிற்கும் பங்குண்டு.

(தொடர்ச்சி 19ம் பக்கம் .........)

---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 30-12-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

**முகவரி**

**குறுக்கெழுத்துப்போட்டி-25**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -25

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | ■ |
| | ■ | 5 | | | 6 |
| 7 | 8 | | ■ | 9 | |
| 10 | | | 11 | ■ | |
| 12 | | ■ | 13 | 14 | |
| 15 | | 16 | | | ■ |
| ■ | 17 | | | | ■ |
| 18 | ■ | 19 | | | |

இடமிருந்து வலம்

01. பாம்பு
05. துன்பம்
07. அதிஸ்டம்
09. இது பிழைக்காத மன்னனின் ஆட்சியில் மாதம் மும்மாரி பொழியும் என்பர்.
10. கலைஞனின் கைவண்ணம் கல்லையும் மரத்தையும் இதுவாய் மாற்றுகிறது
12. சோறு சமைக்கும் போது இதைப் பார்ப்பது அவசியம். (இறுதி எழுத்தை இழந்து திரும்பி வருகிறது)
13. எத்தனை வயது சென்ற போதும் திருமணமாகாத பெண்ணை இப்படித்தான் அழைப்பர் (திரும்பியுள்ளது)
15. அறிவை விசாலமாக்க இவற்றை அதிகமாகப் படிக்க வேண்டும். (திரும்பியுள்ளது)
17. வேளை, சந்தர்ப்பம், சமயம் என பல பொருள்படும் சொல். (திரும்பியுள்ளது)
18. பாட்டு.
19. பொருட்கள் நீரினுள் அமிழ்ந்து நெருப்பினில் வேகுதல். (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்ளும் புத்திசாலித்தனம்.
02. சாப்பிட்டவுடன் சோம்பலைத் தரும் மாவிலான உணவுப் பொருள் (குழம்பியுள்ளது)
03. சிலருக்கு இது வரிசையாகவும், எடுப்பாகவும் அமைந்து அழகைத் தரும்.
04. ஜனாதிபதிக்குப் பிடித்த நிறம். (தலைகீழ்)
06. முருகனின் நாமம் ஒன்று பிரபலமான தென்னிந்திய நகைச்சுவை நடிகரின் பெயரும் கூட. (தலைகீழ்)
08. கேட்பதைக் கொடுக்கும் தரு.(மரம்)
11. கூத்துக்களின் போது பாத்திரங்களின் அறிமுகத்தின் முன் பாடப்படுவது (குழம்பியுள்ளது)
14. மகள் (குழம்பியுள்ளது)
16. எரிந்து முடிந்த இடத்தில் சாம்பல் மூடிக் கிடப்பது.

## குறுக்கெழுத்துப் போட்டி 23ற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01.சங்கர்
05.தேங்காய்
07.தக்கை
09.வாதம்
10.நார்
11.முரல்
12.குப்பை
13.(ம)டம்
16.குப்பம்
18.புடை
19.மாது

**மேலிருந்து கீழ்**

01.சந்தர்ப்பம்
02.கங்கை
03.கார்
04.நெய்தல்
06.தேவாரம்
08.நாக்கு
11.முடக்கு
14.மூப்பு
15.வித்து
17.படை

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

மா.கண்ணா
கோயில் வீதி
அம்பிளாந்துறை

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. திருமதி. சந்திராணி தங்கத்துரை சவளக்கடையூர் -07 கல்முனை.
02. பா.ஜீவஜோதி, தென்றல் வீதி தம்பிலுவில்-01.
03. வி.விதுர்மிகா, உமாமில் வீதி கொம்மாதுறை, செங்கலடி.
04. உதயகுமார் பிரமிகன் குறுமண்வெளி களுவாஞ்சிக்குடி.
05. வி.அருட்செல்வி, பாடசாலை வீதி தம்பலவத்தை, மண்டூர்.
06. திருமதி சாந்தி ஜீவன் சர்வோதய வீதி, பாண்டிருப்பு- 01 கல்முனை.
07. க.சுஜித்தன்,இல69 கதிர்காமர்வீதி அமிர்தகழி மட்டக்களப்பு.
08. எஸ்.கேமாநந்தினி, பாலையடிப் பிள்ளையார் கோயில் வீதி காரைதீவு.
09. க.கமால்தீன், புன்னைக்குடா வீதி ஏறாவூர் -03.
10. ரேணுகா தர்மலிங்கம் கோபாலபுரம்,நிலாவெளி, திருமலை.

# சந்நியாசி சதாம் நிஜ மனிதனா, நிழல் மனிதனா?

நீண்ட தாடி,பல மாதங்களாக நீர்.எண்ணெய் காணாது வறண்ட கேசம், அழுக்கடைந்த உடை, கவலை,ஒழுக்கம், வறுமை, துன்பங்களால் கீண்கள், நெற்றி சுருங்கியது போன்ற தேகம். இத்தகைய சந்நியாசிக் கோலத்தில் ஆதிவாசியைப் போல் ஒரு மனிதன்,எட்டடி ஆழமும் ஆறடி அகலமும் கொண்ட குழிக்குள் இருந்து பிடிக்கப்படுகிறான்.

இவன் வேறு யாரும் அல்ல. சதாம் ஹுசைன் தான். அவனே தான் அமெரிக்க வல்லரசை எதிர்த்து நின்றவன். வளம் மிக்க ஈராக் சாம்ராஜ்சியத்தைப் பரி பரித்த தானைத் தலைவன் சதாம் தான். நிஜமா? நிழலா எண்ணங்கள் உலகளாவிய ரீதியில் எழுப்பப்பட உடற்பரிசோதனை. இப்போது அமெரிக்கா பகிரங்கப்படுத்தியுள்ளது. அந்த சந்நியாசிக் கோலத்தில் பிடிபட்ட மனிதன் சதாம் தான் என்று உலகம் ஏற்றுக் கொள்கிறது. ஈராக் மக்களில் காற்றடிக்கும் போது சாயும் காற்றாடிகள் போல சதாமின் கைது குறித்து மகிழ்வு சதாமின் ஆதரவா ளர்கள் சோகம் மனது ஏற்க மறுப்பு அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

அரபு உலகை அமெரிக்கா ஏமாற்றுகிறதா அல்லது அமெரிக்கா ஏமாறுகிறதா என்பது புதிர் போட்டு நிற்கிறது.

மரபணுப் பரிசோதனையின் பின்னர் தான் இவை புலனாகிவிட்டது. இதற்கு விடை காண்பதற்கு முன் சதாம் கைது செய்யப்பட்ட பின்னர் ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றது. அமெரிக்க துருப்புக்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளன.

இதனை வழி நடத்தும் சூத்திரதாரி யார்? இவ்வாறு அமெரிக்கப் படைகளுக்கு எதிராக வலுவான தாக்குதலில் ஈடுபட்டு வரும் சக்தி சதாமை தன்னந்தனியாக கைவிட்டதா என்ற கேள்விகள் எழுப்பப்பட்டு மண்டையைக் குழப்பி நிற்க,

**“ஆடியடங்கும் வாழ்க்கையடா**
**ஆறடி நிலமே தஞ்சமடா”**

என்பது போல ஆறடி குழி தான் சதாமுக்கு தஞ்சமாக இருந்திருக்கிறது.

ஈராக் நாட்டின் தானைத் தளபதி ஆடம்பர வசதிகள் கொண்ட அரண்மனை மாமல்லபுரத்து மன்னனோ அல்லது தசரதச்சக்கரவர்த்தி ஆண்ட அயோத்தி மாநகர மாளிகையா கவிஞர்கள் கவி



வரிகளில் வர்ணிக்க மித மிஞ்சிய செல்வவனப்பு மிகு தங்க மாளிகை பள்ளியறை தொடக்கம் மலசலகூடம் வரை தங்கத்தால் இளைக்கப்பட்ட சொர்க்காபுரி.

இவ்வாறு இராஜ சுக போகங்களை அனுபவித்ததுடன் மட்டுமல்லாது உலக வல்லரசை எதிர்த்து சவால் விடுத்த சதாம் பாதாள உலகக் கோஷ்டியின் தலைவனைப் போல் பதுங்கிக் குழிக்குள் இருந்து கைது செய்யப் பட்டிருக்கிறார்.

இன்று உலகமும் ஊடகங்களும் சதாம் என்ற பெயரை உச்சரித்துக் கொண்டிருக்கிறது. சதாம் 1937ம் ஆண்டு ஏப்ரல் 28ம் திகதி பிறந்தார். 1957ம்ஆண்டு பாத்சோசலிசக் கட்சியில் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டார். இதன் பின்னர் கட்சி முரண்பாடுகள் காரணமாக 1958ம் ஆண்டு அவரது மைத்துனரைக் கொலை செய்தார். இதனால் ஆறு மாத காலம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

பின்னர் விடுதலை பெற்று சில மாதங்களின் பின் 7-9-1959 ஈராக் அதிபராகவிருந்த ஜெனரல் அப்துல் கரீம் காசிமை பக்தாத்தில் கொலை செய்ய முயற்சி மேற்கொண்டார். கொலை முயற்சித் தோல்வி காலில் காயம் ஏற்பட்டது, ஈராக்கில் தொடர்ந்து இருப் பது ஆபத்து என்பதை உண ர்ந்து சிரியாவு க்கு தப்பிச் சென்றார். பின்னர் அங்கிருந்து எகிப்தில் தஞ்சம் புகுந்தார். எனினும் அப்துல் கரீம் காசிமுக்கு சதாம் அடங்கி விடவில்லை. எகிப்திலிருந்து ஆட்சியை வீழ்த்த சதித்திட்டம் தீட்டப்பட்டது.

26 வயதில் இளமைத்துடிப்பு மிக்க இளைஞன் மிடுக்கான நடை, கம்பீரமான தோற்றம் கொண்ட சதாம் காசிமுக்கு எமனாகினார். 8-2-1963 அன்று திடீர் புரட்சியின் அதிபர் காசிமை கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றியது பாத்கட்சி -இதையடுத்து நாடு திரும்பினார் சதாம். இதே ஆண்டு நவம்பரில் பாத் கட்சியை ஆட்சியிலிருந்து அகற்றியது இராணுவம். இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக 17-7-1968ம் ஆண்டு இராணுவ அதிகாரிகள் சிலருடன் மறைமுகமாக செயற்பட்டு இராணுவ ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு ஈராக் ஆட்சியைக் கைப்பற்றிய சதாம் அதே ஆண்டு யூலை 30ம் திகதி உள் நாட்டு பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதே சமயம் புரட்சிகர கமாண்ட் கவுன்சிலிடம் ஆட்சியை ஒப்படைத்தார். அத்துடன் சதாமின் நெருங்கிய உறவினரான அகமது ஹாசன் அல்- பக்கர் தலைவராக இருந்தார்.

**பா.வே**

16-7-1979 அன்று ஈராக்கின் புதிய மறுமலர்ச்சிக் காலம். சதாம் ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

பதினொரு மாத கால ஆட்சி ஜாம்ஜாம் என நடந்தது. எனினும் அண்டை நாடான ஈரானுடன் 22-8-80தொடக்கப்பட்ட சண்டை 8 ஆண்டுகள் வரை நீடித்தது. பொருளாதார ரீதியாக நலிவுற்ற போதும் சதாம் விட்டுக் கொடுக்கவில்லை. பின்னர் 2-9-1990 குவைத் மீது ஈராக் படைகள் ஆக்கிரமிப்புச் செய்தன.ஈராக் படைவசம் குவைத் வீழ்ந்தது. அபயக்குரல் எழுப்பியது குவைத் அரசு. அரபுலக நாடுகளில் காலூன்ற வேண்டும். என்பதை குறியாகக் கொண்டிருந்த அமெரிக்கா தரணம் பார்த்து காய் நகர்த்தியது.

17-1-1991 அன்று அமெரிகக் கூட்டுப்படைகளின் தாக்குதலில் இருந்து குவைத் விடுவிக்கப்பட்டது. ஈராக் படைகள் பின் வாங்கியது. அன்று தொடக்கம் இற்ற வரைக்கும் குவைத்தில் அமெரிக்கா காலூன்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

குவைத்தை சதாமின் பிடியிலிருந்து மீட்டுக் கொடுத்ததை யடுத்து சதாம் அமெரிக்க உறவுகள் விரிசலடைந்தன. ஈராக் மீது பொருளாதாரத் தடையையும் விதித்த அமெரிக்கா ஈராக் பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பதாக குற்றம் சாட்டியது.

கடந்த 17-4-1991 ஐ.நா. தீர்மானம் 687 பிரிவின் கீழ் பேரழிவு ஆயுதங்கள் குறித்த தகவல்களை வழங்க வேண்டும் என ஈராக்கிற்கு வலியுறுத்தப்பட்டது.

எனினும் ஈராக் தொடர்ச்சியாக மறுத்து வந்ததையடுத்து 27-11-2002 அன்று ஐ.நா. அதிகாரிகள்



ஐ.நாவில் பேரழிவு ஆயுதங்களைத் தேடி வலை விரித்தனர். ஐ.நா. அதிகாரிகள் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பாக ஈராக்கில் மோப்பமிட்ட போதும் சதாம் பூரண தகவல்களை வழங்க மறுத்ததால் சில இரகசிய இடங்களில் ஆயுத சோதனைக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு அமெரிக்காவ்ால் தெரிவிக்கப் பட்டதையடுத்து அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் கடந்த 20-3-2003 அன்று ஈராக் மீது போர் தொடுத்தன.

ஐ.நா.சபையில் அங்கம் வகிக்கும் பல நாடுகள் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்திருக்கும் போரை நியாயப்படுத்த முடியாது. எதிர்ப்புத் தெரிவித்த போதும் எதிர்ப்புகளை மீறி அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்தது. சதாம் அரசு மிக சுலபமாக வீழ்ச்சி கண்டது. சதாம் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர். சதாமும் அவரதுஇரு புதல்வர்களும் தலை மறைவு வாழ்க்கை.

இருந்தும் 22-7-2003 அன்று சதாமின் இரு புதல்வர்களான ஹுசே, உதய் ஆகிய இருவரும் அமெரிக்கப் படைக ளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனையடுத்து சதாமை உயிருடன் பிடித்தே தீருவோம் என அமெரிக்க படைகள் சூழுரைத்த நிலையில் தேடுதல் தீவிரமடைந்தது.

இறுதியாக சதாமின் உறவினர் ஒருவரின் இரகசியத் தகவலையடுத்து கடந்த 13ம் திகதி சதாம் கைது செய்யப்பட்டார். தற்போது அமெரிக்க புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட் படுத்தப்பட்டிருக்கும் சதாம் இரகசிய ஆயுதங்கள் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விசாரணை முடிவில் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என அமெரிக்க அதிபர் புஷ் வலியுறுத்தி யுள்ளார்.இந்தக் கூற்றை அங்கீகரிக்க மறுக்கும் ஐ.நா. செயலாளர் தாயகம் கொபிஅனான் மரண தண்டனை நிறைவேற்றக் கூடாது எனத் தெரிவிததுள்ளார். இவ்வாறான ஒரு நிலையில் சத்தமின்றி யுத்தமின்றி சாதுவைபிடிப்பது போன்று கைது செய்யப்பட்ட சதாம் நிஜமனிதனா அல்லது நிழல் உருவமா என்ற சந்தேகம் வலுடைந்துள்ளது.

## சதாம் கைது தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு

அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் மீதான விசாரணையை எப்படி நடத்துவது? எங்கே நடத்துவது? என்பதை ஈராக்கியர்கள்தான் முடிவு செய்யவேண்டும் என்று ராஜ்ய சபையில் மத்தியஅமைச்சர் யஷ்வந்த் சின்ஹா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தின் ராஜ்யசபையில் கேள்வி நேரத்தின்போது ஒரு கேள்விக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா பதில் அளித்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் கைதுசெய்யப்பட்ட விஷயத்தை இந்தியா கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது. அவர் மீதான விசாரணையை எங்கே? , எப்படி நடத்துவது? என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. சதாம் மீதான விசாரணையை எங்கே எப்படி நடத்துவது? என்பது பற்றி ஈராக்கியர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

ஈராக்கிற்கு இந்திய ராணுவத்தை அனுப்பும்படி இந்தியாவை அமெரிக்கா நிர்ப்பந்தம் செய்யவில்லை. இதுபோன்ற விஷயத்திலோ அல்லது வேறு விஷயத்திலோ எந்த ஒரு நிர்ப்பந்தத்திற்கும் இந்தியா அடிபணியாது.

நியூயார்க்கில் நடைபெற்ற ஐ.நா.பொதுச்சபை கூட்டத்திற்கு பிரதமர் வாஜ்பாய் சென்றிருந்த போதுகூட வாஜ்பாயை அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் விருந்துக்கு அழைத்தார். ஆனால் அப்போதும்கூட ஈராக்கிற்கு இந்திய ராணுவத்தை அனுப்பவேண்டும் என்று வாஜ்பாயை புஷ் கோரவில்லை.

நாட்டு நலன்கருதித்தான் இந்தியா எந்த முடிவையும் எடுக்கும். மற்றபடி நிர்பந்தங்களுக்கு பணிந்து எந்த நடவடிக்கையும் எடுக்காது.

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

ஆயிரமாயிரம் வேங்கைகள் சேர்த்து
அணிநடை செய்தவன்டா -உயிர்
மாய்வதெம் மண்ணுக்காய் என வாழும்
மறவர் தலைவனடா
பேய்களுலாவிடு காடது வாக்கிய
பேரின வாதிகளின் -தலை
சாய எம் மண்ணினில் வீர பராக்ரம
சாகசம் செய்பவன்டா

எத்தனை கோடி துயர் வந்தபோதும்
இடிந்து விடாதவன்டா-தன்னை
மொய்த்த பகைதனை ஈயெனவோர்பெரு
மூச்சிற் கலைப்பவன்டா
இத்தரை மீதிற் கரந்தடி வித்தையில்
ஈடிணையற்றவன்டா -எங்கள்
சொத்தென தாயக ஈழமண் தன்னிற்
சுதந்திரம் கேட்பவன்டா

சேய்கள் பல்லாயிரம் சேர்ந்தனர் -சூழ்பெருந்
தீமையழியுமடா -அவர்

## பிரபாகரன் எழுச்சி

வாய்மையில் வீர வழிமுறையில் தமிழ்
மாண்பு சிறந்ததடா
ஆயுதங்கையில் அறவழி நெஞ்சிலென்(று)
ஆர்க்கும் புலிகளினால் -துயர்
போயின போயின என்று தமிழ் மகள்
துள்ளி நிமிர்வாளடா

(வேறு)

இதன் பிறகு நடந்ததெல்லாம் கவியிற்
சொல்ல
என் புலமை போதாது அறிவீர் ஈழச்
சுதந்திரமே நினைவானார் மக்களெல்லாம்
துணிவுற்றார் பலம் பெற்றார் நிமிரலானார்
விதந்துரைகள் பல சொல்லித் துணைக்
கண்டத்தார்
வீறு மிகு போர் முனைப்பை முழங்கடிக்க
நிதம் முயன்றார் தம் நலனைக் கருத்திற்
கொண்டார்
நிமிர்ந்த தமிழன் கூனான் என்றும் கண்டார்

எஸ்- கருணாநந்தராஜா
(யுகபாரதி)

## சிறை மீட்பு

கருங்குளவிகளின்
மாய வலைகளுக்குள்
சிறைப்பட்டுக் கிடக்கிறது
சிட்டுக்குருவிகளின் வாழ்வகம்!

சிட்டுக்கள் என்பதனால் தான்
நீட்டுக்கும் இந்தக் குளவிகளுக்கு
அட்டுழியமா?

'கடுகு சிறிதென்றாலும்
காரம் பெரிதென்பதை' அறியாத
கழுதைக் குளவிகளுக்கு
குருவிகளின்
'கற்பூர வாசனையெங்கே'
விளங்கப் போகிறது....?

ஆனாலும் என்ன...
அடாவடித்தனங்களும், அத்துமீறல்களும்
அபகரிக்கும் எண்ணங்களும்,
சுரண்டல்களும்
மோட்டுக் குளவிகளின் மொத்த
உருவமானதால்
ஒட்டு மொத்தமாய் இனி- அந்தக்
காட்டுமிராண்டிக் குளவிகள் விரித்த
மாய வலையினை அந்தக் குளவிகளுக்கே
மரண மாலையாக்குவதே
சிட்டுக் குருவிகளின்
சிறை மீட்பாகும்...!வாழ்வக மீட்பாகும்!!

கன்னிமுத்து~ வெல்லபதியான்'
எருவில்

## நேற்று, இன்று, நாளை

அதோ பார்
ஒரு ஆகாய விமானம்
பார்த்தாலே பரவசம்!
எத்தனை பெரிதாய்...
எத்தனை அழகாய்..
எத்தனை வேகமாய்...
பறக்குது பார்.

அன்று
சின்ன வயதிலே
வான் நோக்கி
கை காட்டி
ரசித்த ஞாபகம்!

இன்று முடியுமா?
விமான இரைச்சல்
கேட்டதுமே
பதுங்குழி ஞாபகம்
என் கூடவே
என்
சின்ன மகன்
பங்கருள் பதுங்குகிறான்.
வரப்போகும்
குண்டுச் சத்தத்திற்காய்
காதைப் பொத்தி....

நாளை
அவன் இளைஞனாகி..
பதுங்குவானா?
ஓ...
பதுங்குவான் பாய்வதற்காக!

ச.முருகானந்தன்

## குறை தீருமா?

தமிழ் எங்கள் உயிரான
மொழியல்லோ- ஈழத்
தமிழ் தாயின் துயரங்கள்
நமக்கில்லையோ
இனமானம் அனைவருக்கும்
பொதுவல்லவா -மனம்
இனம் காண முடியாமல்
அலைகின்றதோ!

உலகெங்கும் நீ வாழ்ந்து
பொருள் தேடலாம் -வானில்
உதிக்கின்ற கதிரோனை விலை
பேசலாம்
வெளி நாடும் ஓர் காலம்
நமை ஓட்டலாம் - நம்
விழி நீரைத் துடைப்பவள்
தாயகலாம்.

கரைதேடும் அலையாக பலர்
வாழ்கின்றார் -ஒரு
திசை காண முடியாமல்
மனம் வாடுவார்
உரை வீச்சு மன்னர்கள்
புலியாள்கின்றார் -இந்த
உலகெங்கும் தமிழ்த் தாயை
விலை பேசுவார்.

மனம் இன்னும் சுமை தாங்க
முடியாதம்மா-ஒரு
மறு வாழ்வு தோன்றுமா
தெரியாதம்மா
இனம் ஒன்று சேராத
நிலை மாறுமா -தமிழ்
ஈழத்தில் அழுவோர் தம்
குறை தீருமோ?

கல்லடி அருள்பாரதி

## சுகமான சோகங்கள்



குயிலாகப் பிறந்திருந்தால் - சோகத்தை....
கூவியே தீர்த்திருப்பேன்.
கோடை மழையாய்ப் பிறந்திருந்தால்- கண்ணீரை......
கொட்டியே தீர்த்திடுவேன்
நிலவாகப் பிறந்திருந்தால் - நினைவுகளை...
தேய்த்தே மறைத்திருப்பேன்
இதயத்துடன் பிறந்ததனால் சோகங்களை
சுமையாக்கி வாழ்கிறேன்.

கி.மேனகா பட்டிப்பளை

# தேடலும் பகிர்வும் 18

''இந்திய தேசிய இராணுவம்'' (INA)எனும் ஆயுதம் தாங்கிய புரட்சிகர விடுதலையமைப்பைத் தோற்றுவித்து, இந்திய சுதந்திரப் போராட்டத்தை நடத்திய நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் கருத்துக்கள் வீரம் செறிந்தன; விடுதலை உணர்வு மிக்கன.

நேத்தாஜி அமைத்த இந்திய சுதந்திர தற்காலிக அரசாங்கம் பர்மாவில் இருந்து சயாமுக்கு மாற்றப்பட்ட பிறகு பாரத மக்களுக்கு அவர் அளித்த செய்தியான ''சுதந்திரம் நிச்சயம்'' எனும் உரையிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகின்றோம். இதனைத் தமிழாக்கியவர் சுதந்திர இந்தியத் தற்காலிக அரசாங்கத்தில் சேவை செய்த கோ. இராமகிருஷ்ணன் அவர்கள்.

''எதிரிகளை விட நாம் தைரியசாலிகளாகவும், மனோதைரியத்தைக் கைவிடாதவர்களாகவும் தூரதிருஷ்டி உள்ளவர்களாகவும் இருந்தால் தான் சுதந்திரமடைவதற்குத் தகுதி உள்ளவர்கள் ஆவோம்.

''விடாப்பிடியாகப் போர் செய்யும் குணத்திலும், அக் குணத்தைக் கடைசி வரை காப்பாற்றும் தன்மை யிலும் ஆத்ம சக்தியிலும் நாம் எதிரிகளை மிஞ்சுபவர்களாயிருந்தால் தான் சுதந்திரமடைய நாம் தகுதி யானவர்களாவோம்.

''கடைசியில் வெற்றியேற்படும் என்ற நம்பிக்கையும் மனோதைரியத்தையும் இழந்து விடும் தேசம் வெற்றியடைய முடியாது. அதற்கு மாறாக தற்காலிக தடங்களைப் பொருட்படுத்தாமலும் , கடைசி வெற்றி நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தளர்ச்சி கொள்ளா மலும், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்லுவோமாயின் , நமக்கு க் கிடைக்க வேண்டிய வெற்றியை நம்மிடமிருந்து பறிப்பதற்கு இவ்வு லகிலுள்ள எந்த வல்லரசுக்கும் திறமை இருக்காது.

''நீதிக்காகவும், சத்தியத்திற்காகவும் நமது பிறப்புரிமை ஆகிய சுதந்திரத்திற்காகவும் நாம் போராடுவதாலும், அச் சுதந்திரத்திற் கான விலையைக் கொடுப்பதற்கு நாம் தயாராக இருப்பதாலும் தொடர்ந்து நாம் போராடின், சுதந்திரம் கிட்டுவது நிச்சயம்.

''நம்மிடையே இருப்பது ஒரே இலட்சியம். அவ் இலட்சியத்தைச் சாதிப்பதற்கு ஒரே ஒரு வழி தான் உள்ளது. ஆயுதந்தாங்கிப் போராடு வதே அவ்வழி. நமது சுதந்திரத்தைத் திரும்பப் பெறுவதற்கு இன்னும் சில வருடங்கள் நீடித்துப் போர் புரிய வேண்டியிருந்தால், அதைக் கண்டு யாரும் மலைக்கவோ, முனகவோ தேவையில்லை''.

''நாம் அடைந்த நட்டங்களை ஈடு செய்வதற்கு நமக்குப் பணமும் ஆட்களும் பொருட்களும் அதிகம் தேவைப்படுகின்றன. இவைகள் எல்லாவற்றைப் பார்க்கிலும் சிதறா உணர்ச்சியும் அசையா நம்பிக்கையும் நம்மிடையே நிலவ வேண்டியது அதி அவசியம்.''

கானா நாட்டின் முக்கிய கவிஞர்களுள் ஒருவரான ''ப்ராங் கொபீனா பார்க்ஸ்'' (FRANK KOBINA PARKES) எழுதிய ''யுக முடிவில்'' எனும் கவிதை இங்கு ஒலிக்கின்றது. இணுவில் கலை இலக்கிய வட்டம் செப்டம்பர் 2001 இல் வெளியிட்ட சோ. பத்மநாதனின் (சோ.ப) மொழி பெயர்ப்பிலான ''ஆபிரிக்கக் கவிதை '' எனும் நூலிலிருந்து நன்றியுடன் இக்கவிதை பெறப்படுகின்றது.

''இறுதி நாள்களில்
அசாதாரணக் காட்சிகள் பூமியில் தோன்றும்.
அக் காட்சிகள்
சந்திரனை இரத்த வண்ணமாக்கும்.
பகலை நள்ளிரவாக்கும்
ஆனால் இப்போ
வாள்கள் ஏர்முனைகளாக இன்னும் மாறா நிலையில்
இன்னும் ஈட்டிகள் ஈட்டிகளாகவே இருக்கையில்
என் குழந்தைகளே, இதைக் கேளுங்கள்
மாமர நிழலில் உலாவும் போதும்
தகிக்கும் வெயிலுக்கஞ்சி அம்மண மாய் ஓடும் போதும்
இதைப் புரிந்து கொள்ளுங்கள்
அம்பு அம்பாகவும்
ஈட்டி அரிவாள்களின் அதிசயம்
கட்புலனாகா திருக்கையிலும்
இதை நினைவில் வையுங்கள் பிள்ளைகளே
தற்செயலாக உங்கள் பிஞ்சுப் பாதங்கள் வழுக்கி
பழி தீர்க்கும்
பாதாள மர்மக் கிடங்கில் விழ நேர்ந்தால்
அங்கு நாய்கள் சொற்பொழிவாற்றும்
மனித நெற்றியைக் கொம்பு அலங்கரிக்கும்
செதிள் உடையணிந்த
நீரரமகளிரும்
தொண தொணக்கும் கடல் விலங்குகளும்
மனித இனத்தை மீறும்
அந்த அடி நிலையில்
உங்கள் பார்வை
உயிரற்ற சேறுதோய்ந்த
ஒரு கறுப்புக் கல் மீது பதிய நேர்ந்தால்
பிள்ளைகளே
அமைதியாகக் கடந்து செல்லுங்கள்
கேள்வி கேட்காதீர்கள்
ஏனெனில்
நீங்கள் ஆதி நாளுக்கு முகம் கொடுக்கிறீர்கள்
தொடக்கமும் முடிவும் ஒன்று தான்
முடிவில் அசாதாரணக் காட்சிகள் பூமியில் தோன்றும்
கற்கள் மனிதர்களாகும்
மனிதர்கள் கற்களாவர்
தூக்கணாங் குருவி கழுகு குஞ்சுகளைப் பொரிக்கும்.
மணல் நல்ல தானியமாகும்.
ஆகவே பிள்ளைகளே
தற் செயலாக
ஒரு முயல் கர்ச்சிக்கக் கண்டாலோ
குரங்கு சிவிகை ஊர்ந்து வந்தாலோ
அமைதியாக நோக்குங்கள்
விரைவாகத் தாண்டுங்கள்
விரைவாக!''

த.வசந்

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களது உள்ளத்துச் சிந்தனையி லிருந்து :-
''விடுதலை வரலாறு படைக்கப்படும் ஒரு புரட்சிகரமான சமூகப் புற நிலையில் தான் உன்னதமான விடுதலை இலக்கியம் பிறக்க முடியும்.'' 01-10-2001 திகதியிட்டு ''வெளிச்சம்'' பவள இதழுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலிருந்து நன்றியுடன் பெறப்படுகின்றது.




# களப்பலியில் முதற் புலி லெப்டினன்ட் சங்கர்/ சுரேஸ்

க.குலேந்திரன்

1982ம் ஆண்டின் கார்த்திகை 27ம் திகதி இரவு 10.30 மணியளவில் சந்தன மரங்கள் அடுக்கப்பட்டு விரல் விட்டு எண்ணக்கூடிய நண்பர்களுடன் தமிழகத்தின் தமிழினப் பற்றாளர்களில்– மிக முக்கிய மானவர்களில் ஒருவரான பழ– நெடு மாறன், வீர மணி (திராவிடர் களகத் தலைவர்) ஆகியோர்களின் அஞ்சலியோடு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான லெப் கேணல்அப்பையா அண்ணை அவர்களினால் லெப்டினன்ட் சங்கரின் சிதைக்குத் தீ மூட்டப்படுகின்றது.

தீயுடன் கலந்து போன அந்த வீரனின் நினைவுகள் எழுகின்றன. அன்றைய நிலையில் சங்கரின் வீரச்சாவு கூடப் பகிரங்கப் படுத்தக் கூட முடியாத நிலை இருந்தது.

1982ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை 25க்கும் குறைவாகவே இருந்தது. அந்தத் தொகையினர் தான் உலகிலுள்ள பிரமாண்டமான விடுதலை இயக்கங்களுக்கு நிகரான சாதனைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

அக்கால கட்டத்தில் தான் இயக்கம் என்ற குடும்பத்தில் முதல் இழப்பு நிகழ்ந்தது. அதுவரை புலிகள் இழப்பின் கொடுமையை அனுபவித்தவர்களல்லர். அதனால் அன்று ஏற்பட்ட முதல் தாக்கம் விடுதலைப் புலிகளின் நெஞ்சை விட்டு அகலாதிருந்தது.

அகன்ற தோள்கள் ,நிமிர்ந்த பார்வை விரைவான செயற்பாடு, குறைவான பேச்சு, தன்னடக்கம் தமிழீழ மக்களின் மனத்திரையில் ஒரு புலி வீரன் எத்தகைய தோற்றத்துடன் காட்சியளிக்கின்றானோ அதேபோலவே சங்கரும் இருந்தான்.

லெப்டினன் சங்கரின் சாதுரியம் தான் பொன்னாலையில் சில புலி வீரர்களைக் காப்பாற்றியது. என்பர். லெப் கேணல் அப்பையா அண்ணர் கிட்டத் தட்ட புலிகளின் 3/4 பங்கினர் பொன்னாலைத் தாக்குதலில் கலந்து கொண்டார்கள்.

காரை நகர் முகாமைச் சேர்ந்த கடற் படையினர் மீது தாக்குதல் நடாத்தி ஆயுதங்களைக் கையகப்படுத்துவதே புலி வீரர்களின் நோக்கம். அத் தாக்குதல் நிகழ்வதற்கு முன்னரே எதிர் பாராத விதமாக தவறு நிகழ்ந்தது. அதை அப்படித்தான் கூற வேண்டும்.

ஒரு வெற்றிகரமான கண்ணிவெடித் தாக்குதலுக்கு வேண்டிய வெடிப் பொருட்களின் அளவு எவ்வளவு, எப்படி வைத்தால் எதிரிக்கு கூடிய சேதத்தை ஏற்படுத்தலாம் என்பது எவருக்குமே தெரியாததாம் என்பார்.

அன்று அது வெடித்திருந்தால் வீரர்கள் எதிர் பார்த்தளவு எதிரிக்குச் சேதம் ஏற்பட்டிருக்காது. அதை விடப் பாலத்தில் இருந்து 100 யார் தூரத்தில் தீவு போன்ற அமைப்பிலுள்ள சிறிய பற்றைக்குள்ளேயே தாக்கு தலுக்காகக் காத்திருந்தார்கள் புலி வீரர்கள்.

அன்று புலிகளது கையில் இருந்தது ஒரே ஒரு துப்பாக்கி மட்டுமே! அது லெப்– சங்கரின் கையில் இருந்தது. ஏனைய ஆயுதங்களினால் வீரர்கள் எதிர்பார்த்த பயனை அடைந்திருக்க முடியாது. இந் நிலையில் எதிரி புலிகளது கண்ணிவெடியை அண்மிக்கும் முன்னரே தவறுதலாக அது வெடித்ததைப் புலிகளது வெற்றி என்று தான் சொல்ல வேண்டும்.

அத் தாக்குதல் திட்டப்படி கடற்படையினர் வந்ததும் லெப் –கேணல் அப்பையா அண்ணர் ஆழியை அழுத்தி கண்ணி வெடியை வெடிக்க வைப்பதாகத் திட்டமிடப் பட்டிருந்தது. கண்ணி வெடிச் சத்தத்தை அன்றைய நாட்களில் கேட்டிராத அனுபவம், அடுத்து என்ன நடக்குமோ! என்ற நிலை இவ்விரு காரணங்களாலும் எதிரிப் படையினர் திகைத்து, செயலற்று நின்றனர்.

தீவு போன்ற அமைப்பிலுள்ள அந்த இடத்திலிருந்து– சிறு கடலைக் கடந்து சென்றனர். வேங்கைகளை வேன் ஒன்றில் ஏற்றிய சங்கர் புயலாக விரைந்தான். அடுத்து என்ன செய்வதென்று எதிரி நினைப்பதற்குள் எதிரியின் கண்ணில் இருந்து வாகனம் மறைந்து விட்டது. வேகம் வந்தளவிற்கு உண்டோ, அதே அளவிற்க நிதானமும் உண்டு. எதிர் பாராத அந்த நிலையில் வேகத்துடன். அதே சமயம் பதற்றப் படாமலும் செயற்பட்டு இயக்கத்தையே காப்பாற்றியவன்.

02–07–1982 திகதியன்று நெல்லியடியில் ரோந்து வந்த சிறிலங்காப் பொலிசார் மீதான தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவனும் சங்கரேதான். அத் தாக்குதலில் பொலிஸ்காரர் தலையில் முதல் குண்டைப் பாய்ச்சியதும் சங்கரே தான்.

ஒரு அப்பாவி இளைஞனைப் போல் பொலிசாரின் அருகே சென்று கண்ணிமைக்கும் பொழுதில் அதைச் செய்தான். தொடர்ந்து தாக்குதல் நடந்தது. மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் பொது மக்களுக்குச் சேதம் வராமல் ஒரு தாக்குதலை எப்படி நடத்த முடியும் என்று கேட்பவர்களுக்கு அது புலிகளால் முடியும் என்று அன்றே செய்து காட்டியதும் சங்கரே தான்.

அதில் நான்கு சிறிலங்காப் பொலிசார் பலியானார்கள். தாக்குதலுக்குத் தலைமை தாங்கியது மட்டுமல்லாது மேலதிக படையினர் அவ்விடத்திற்கு விரையும் முன்னர் அத்தாக்குதலில் பங்கு பற்றிய வீரர்களை பத்திரமாகக் கொண்டு சேர்த்ததும் சங்கரே தான். அந்தக் காலத்தில் எந்த மூலை முடுக்கிலும் சிறிலங்காப் படையினர் வந்து போகத் தவறுவதில்லை.

15–12–1978 திகதி காலை திரு நெல் வேலியில் இருந்து (மக்கள் வங்கி) பணத்தைக் எடுத்துக் கொண்டு வங்கி முகாமையாளர் உட்பட பொலிஸ் உயர் அதிகாரிகளும் புத்தூர் மக்கள் வங்கியை நோக்கிச் செல்கின்றார்கள். . தேசியத் தலைவர் அவர்களின் திட்டப்படி வாகனத்தை மிக வேகமாக ஓட்டுவதில் பேர் போன இந்தச் சங்கர் ஒரு லொறியில் வந்து வேகமாகச் சென்று பொலிசாரின் வாகனத்தை முந்திச் சென்று அதன் வேகத்தைக் குறைக்க வேண்டும். தேசியத் தலைவர் அவர்களின் திட்டப்படி அப்படியே அனைத்தும் நடந்தது. பொலிசார் மீது தாக்குதலைத் தொடுத்து அவர்கள் கொண்டு சென்ற 68 இலெட்சம் ருபாவையும் கையகப்படுத்தினார்கள். இத் தாக்குதலில் லெப்– கேணல் புலேந்திரன், லெப்– சீலன், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

27–10–1982ம் திகதி இடம் பெற்ற சாவகச் சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கும் சங்கரே சாரதியாகச் சென்றான். அத்துடன் பொலிஸ் நிலைய விடுதியின் மீதான தாக்குதலுக்கும் இவனே பொறுப்பாக இருந்தான்.

பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது பொலிஸ் நிலைய விடுதி மீது சங்கரும், லெப் கேணல் சந்தோசம் மாஸ்ரரும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர். விடுதியின் உள்ளிருந்த அத்தனை படையினராலும் இவர்களின் தாக்குதலை முறியடிக்க முடியவில்லை. எதிரிகள் உள்ளேயே முடங்கி விட்டனர். இவர்களது தாக்குதல் மிக வெற்றிகரமாக நடை பெற்றது.

அத் தாக்குதலில் 019 றிப்பிட்டல் துப்பாக்கிகளும் ஒன்பது 303 துப்பாக்கிகளும்,இரண்டு S.M.G யோடு ஒரு குழல் துப்பாக்கி என மொத்தம் 033 ஆயுதங்களையும், பெரும் தொகையான தோட்டாக் களையும் கையகப் படுத்தினார்கள். மூன்று பொலிசார் சுட்டுக் கொள்ளப்பட்டனர்.

அக்கள மோதலில் புலி வீரர்களான லெப்டினன்ட் சீலன்,லெப் கேணல் புலேந்திரன் கப்டன் ரகு ,ஆகியோர் காயமடைந்தனர். காயமடைந்த வீரர்களை யும், ஆயுதங்களையும் பத்திரமாக ஏற்றிச் சென்று வேகமாக விரைந்தான் சங்கர்.

காய மடைந்தவர்கள் விரைவாகச் சிகிச்சைக்குட் படுத்தப்பட்டனர். அவர்களைத் தனது தோளில் சுமந்து சென்று படகில் ஏற்றினான். அப்போது யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். இந்தக் கடல் எல்லைக்கு அப்பால் சங்கரின் உயிர் பிரியும் என்று.

அக் கால கட்டத்தில் தான் இயக்கத்தின் தாக்குதல் பிரிவுத் தலைவனாகப் பொறுப்பேற்றான் . அப் பொறுப்பை ஏற்றதும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராகச் செயற்பட்டு வந்த முன் நாள் ஜனாதிபதி றணசிங்க பிறேமதாசாவின் நெருங்கிய நண்பரான புன்னாலைக் கட்டுவன் தம்பாப்பிள்ளை மீது தாக்குதல் நடாத்தினான்.

யாழ் மாவட்டத்தில் உள்ள முகாம்களில் பிரதானமானது பலாலி முகாம்! இராணுவத்தினர் அடிக்கடி பிரயாணம் செய்யும் பலாலிவீதியில் வைத்தே இத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. உடனே சிறிலங்கா இராணுவத்தினர் அவ்விடம் விரைந்தனர். வேகத்திற்கு இலக்கணமான சங்கரை இவர்களால் வெல்ல முடியவில்லை.

இக் கால வேளையில் புலிகளுக்கு உதவு பவர்கள் எனும் சந்தேகத்துடன் பல முக்கிய குரு நாதர்கள் c.i.d. யினரால் கைது செய்யப்பட்டார்கள்.

அத்தோடு புலிகளின் பல இடங்கள், தொடர்புகள் அனைத்தும் சிங்கள இராணுவத்தினர்க்குத் தெரிய வந்தது. இந் நிலையில் ஒரு முக்கியமானவரைக் கைது செய்வார்கள் அதனால் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தச் சென்றான் சங்கர். அவர் சாவகச் சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் விழுப்புண்ணடைந்த எமது போராளிகளைப் பராமரித்தனர். அவர்களுக்கான வைத்திய வசதிகளையும் செய்த ஏனையோர் கைதாகிய நிலையில் இவர்களையும் கைது செய்யலாம் என நினைத்ததாலேயே சங்கர் அங்கு சென்றான்.

21–11–1982 ம்திகதி புலிகளைப் போலவே எதிரியும் மிக வேகமாக இயங்கினான் சங்கர். அங்கு சென்ற சில நேரத்திற்குள்ளேயே இராணுவத்தினர் அங்கு வந்து விட்டனர். முற்றுகை ஆரம்பிக்கும் முன்னரே சங்கர் தப்பி ஓடினான். எதிரியின் சுடுகலன்கள் சங்கர் ஓடும் பக்கம் பார்த்துச் சடசடத்தன. எதிரியின் சுடு குழலில் இருந்து வெளி வந்த ரவை ஒன்று சங்கரின் வயிற்றைக் கிழித்துச் சென்றது.

இரத்தம் பெருக்கெடுத்தோடியது. ஆனாலும் சங்கர் ஓடிக் கொண்டே இருந்தான். தனது நண்பர்களைச் சந்தித்து அவனது சுடுகலனை ஒப்படைக்கும் வரை சங்கர் ஓடிக் கொண்டே இருந்தான்.

எந்த நிலையிலும் எதிரியிடம் எமது ஆயுதங்கள் சிக்கக் கூடாது என்ற மன வைராக்கியம் சங்கருக்கு இருந்த படியால் தான் சங்கரால் அப்படிச் செய்ய முடிந்தது.

21–11–1982ம் ஆண்டு சங்கர் அப்படிச் செய்து காட்டியதால் தான் எந்த நிலையிலும் ஆயுதங்கள் எதிரியிடம் சிக்கக் கூடாது என்ற புதியமரபொன்று உருவாக முடிந்தது. சொல்லிப் புரிய வைப்பதை விடச் செய்து காட்டிப் புரிய வைப்பதே மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சங்கர் செய்து காட்டிப் புரிய வைத்தான்.

விழுப்புண்ணடைந்த சங்கரை அன்று இரவோடு இரவாக தமிழ் நாடு மதுரை வேலூரில் இருந்த எமது தேசியத் தலைவர் அவர்களிடம் கொண்டு சென்றனர். தமிழகத்தில் சிகிச்சை பெற்று வரும் போது சங்கரை அன்று புலிகள் இழந்தனர். சங்கரது உயிர் பிரியும் கடைசி மணித்துளிவரை சங்கரது உயிரைக் காப்பாற்ற பெரும் முயற்சி எடுத்தார் தேசியத் தலைவர் அவர்கள். ஆனால் காலம் காத்திருக்க வில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் முதற் களப் பலியான சங்கர் தலைவர் மடியில் உயிர் விட்டான்.

மடியுமுன் சுய நினைவற்ற நிலையில் வலியினால் துடித்த போதெல்லாம் அம்மா என்றோ, அப்பா என்றோ புலம்பவில்லை ! ''தம்பி,தம்பி'' என்றே உச்சரித்தன சங்கரது உதடுகள். எங்கள் தேசியத் தலைவர் அவர்களை ஒவ்வொருவரும் தம்பி என்றே அழைப்பார்கள். அதனால் மரணத்தின் போதும் சங்கரின் நா தம்பி என்றே உச்சரித்தன. புலிகள் இயக்கத்தில் இப்படித்தான் அன்று உறவுகள் வளர்ந்தன.

அதனால் தான் இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் மொத்தம் 38 அமைப்புக்கள் தோன்றிய போதும் விடுதலைப் புலிகளைத் தனித்துவ மானவர்களாகத் தியாக உணர்வு நிறைந்தவர்களாக எமது மக்கள்இனம் கண்டார்கள்.

எமது தலைவர் மடியில்27–11–1982ம் திகதி மாலை –06.05 மணிக்கு மீளாத்துயில் கொண்ட சங்கரிடமிருந்து நாம் சிலவற்றை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும். சங்கரது இயக்க விசுவாசம் , துணிவு, வேகம் , நிதானம், அனைத்தும் எம்மிடம் நிலை கொள்ளட்டும். அதற்காகத்தான் சங்கர் எம்மைப் பிரிந்த நாளாக நவம்பர் 27ம் திகதியை மாவீரர் தினமாகக் கொண்டாடுகின்றோம். இந்த லெப் சங்கரின் சாம்பல் அவரது இல்லத்திற்கு வந்து சேர்ந்தது. வாழ்க சங்கர், வளர்க வீரம், வெல்க விடுதலைப் புலிகள்.




## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"

(297)வரலாற்றுப் புகழ் பெற்ற ''திம்பு பேச்சு வார்த்தை"இன் போது இந்திய இராசதந்திரி ஒருவரின் வகிபாகம் (பணி) பெரும் சந்தேகத்தை உண்டு பண்ணியது. நடுவு நிலமை நழுவிய அவ் இராசத்திரி யார்?.

றொமேஷ் பண்டாரி

(298)தமிழீழவிடுதலைப் போரட்டஆரம்ப காலத்தில் தமிழில் புதிய முயச்சியாக இராணுவ விஞ்ஞானத் தகவல்கள் நூல் வடிவில் தரப்பட்டிருந்தன. தமிழில் வெளியான அப் போரியல் நூல் எது?

''போர்க் குரல்"

(299)1987 அக்டோபர் 24ஆந் திகதியன்று இந்திய ஆக்கிரப்புப் படையினர் மேற் கொண்ட பீரங்கித் தாக்குதலில் வட தமிழீழக் கல்லூரி ஒன்றின் ஏதிலிகள் தங்ககத்தில் (அகதி முகாம் ) தஞ்சமடைந்திருந்த அப்பாவிப் பொது மக்கள் நாற்பது பேரளவில் கொல்லப் பட, 80 பேரளவில் காயமுற்றனர். ''அகதி முகாம் படுகொலை " நடை பெற்ற கல்லூரி எது?

யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி

(300)தமிழீழத் தாயகத்தில் இந்தியப் படையினர் புரிந்த அட்டூழியங்களை விபரித்துத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் 16-11-1987இல் பன்னாட்டுத்



(✍ து.கோமளமைந்தன)

தலைவர் ஒருவருக்குக் கடிதம் அனுப்பினார். அக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டது?

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு.

## காத்திரன் பதில்

☹ கே) காத்திரனே! அன்று புலி பிடிப்பதாய் கூறி ஆயுதம் ஏந்திய துரோகிகளில் சிலர் இன்று வலையிறவு வாவியில் மீன் பிடிப்பதற்காக தூண்டில் ஏந்தியுள்ளனர். நாளை இவர்கள் என்ன ஏந்துவார்கள்?

த. லவன்- கன்னன்குடா-2

☞ நாளை இவர்களின் கைகளில் விலங்குதான் ஏந்தப்படும்.

☹ கே) ஒருவன் என்னுடன் ''நண்பனாகவும்'' எதிரியாகவும் பழகுகின்றான் இப்படியானவனுக்கு எவ்வாறு ''சோட்நேம்'' சொல்லாலம் காத்திரனே?

தேவா கோபால்- வால்கட்டு
கொக்கட்டிச்சோலை

☞ ''பகைத்தோழன்''என அழைக்கலாம்.

☹ கே) கோபம் என்பது ஒருவருக்குத் தேவையா காத்திரனே?

ஜமுனா- தினகராஜ் மஸ்கேலியா

☞ கோபம் தேவையில்லை. விவேகம் தேவை.

☹ கே) சில மனிதர்கள் பாகு பாடு காட்டுவது போல் இயற்கையான காற்று, மழை, சூரியன், சந்திரன் என்பன பாகுபாடு காட்டினால் ஏழையின் கதை என்ன காத்திரனே?

க. சீவரெத்தினம்- வி.பீடம்
கி. பல்கலைக்கழகம் வந்தாறுமூலை

☞ இயற்கையான எதுவுமே பாகு பாடு நிச்சயம் காட்டாது செயற்கையாக அது மாறும் போது தான் பாகு பாடு காட்ட வேண்டி வரும். ஏனெனில் மனிதன் இவற்றுடன் கலப்பதால்.

☹ கே) மொட்டைக் கடிதம்(பிட்டிசம்) எழுதி ஒரு பெண்ணின் வாழ்க்கையைச் சீரழிக்கும் அரக்கர்களுக்கு என்ன தண்டணை வழங்கலாம் காத்திரனே?

பி.ஈஸ்வரி- அக்கரைப்பற்று

☞ வாழ்வைச் சீரழிக்கும் அரக்கர்களின் நாவை அறுக்க வேண்டும்.

☹ கே) புலிகளுக்கும் அரசுக்குமிடையில் சமாதான பேச்சு இடம்பெற்றால் அமைச்சர் ஹிஸ்புல்லாவின் பங்கு எப்படி அமையும் காத்திரனே?

வே.தங்கவடிவேல் விஞ்ஞானப் பகுதி
கி.ப. கழகம் வந்தாறுமூலை

☞ மீனுக்கு காவலாகவும் பூனைக்கு தோழனாகவும் அமையும்.

☹ கே) அன்பான காத்திரனே! இன்றைய கால கட்டத்தில் ஒரு பெண்ணைக் காதலிப்பது பணத்திற்காகவா? அழகிற்காகவா?

பி.சுதா- முனைக்காடு

☞ குணத்திற்காகவும் மனத்திற்காகவும் திருமணத்திற்காகவுமே காதலிக்க வேண்டும். காதல் தூய்மையானது காதலிப்பவர்கள்?

☹ கே) சமாதானம் எமது நாட்டிற்கு எப்போது வரும் காத்திரனே?

ஏ. யோகராணி- மாவேற்குடா

☞ தமிழ் மக்களின் சுதந்திரம், உரிமை தன்னாட்சி கிடைக்கும் போது

☹ கே) காத்திரனே! மனிதனாகப் பிறந்த அனைவரும் அன்பைத் தேடுகிறார்கள் ஆனால் இந்த அன்பு தொடர்ந்து நீடிப்பதில்லை ஏன்?

ஜெகநாதன்- அரசடித்தீவு

☞ 'அன்பு' நிலைக்கக் கூடியது இது மனிதர்களுக்கு மட்டும் விதி விலக்கு வம்பு மனிதர்களிடம் இருப்பதால் தான் அன்பு நிலைப்பதில்லை.

☹ கே) ஜனாதிபதியும், பிரதமரும் சந்திக்கிரார்கள், கதைக்கிறார்கள். ஆனால் ஒரு நிலையான திட்டத்தை இது வரை வகுக்க முடியாமல் இருப்பதற்கு என்ன காரணம் காத்திரனே?

த. மனோகரன்- கிளிநெச்சி

☞ சிறிலங்கா நிலை இல்லாததால்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**
எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்

# இரு சிங்களத் தலைமைகளுக்கிடையில் .....

2ம் பக்கத் தொடர்ச்சி.......

இதற்குக் காரணம் என்ன?

1883ம் ஆண்டில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் இராசதானியும், இரண்டு சிங்கள இராசதானிகளும் ஓர் அந்நிய ஆட்சியின் கீழ் ஒன்றாகக் கொண்டு வரப்பட்டன. அதுவரை காலமும் தமிழரின் அரசும், சிங்களத்தின் இருவேறு அரசுகளும் தனித்தனியே இயங்கி வந்தன. ஆகவே வரலாற்று ரீதியாக ஒரு தனித்துவமான மொழியையும், பண்பாட்டையும் கொண்டு தன்னுடைய தேசத்தை தானே ஆண்டு வந்த தமிழினத்திற்கு எதிரான துவேசத்தைக் கிளப்ப வேண்டிய அவசியம் சிங்களப் பேரினவாதிகளான 'மகாவம்சத்தின்'' நூலாசிரியர்களுக்கு இருந்தது.

ஆகவே மகாவம்சம் என்ற நூல் அது சொல்வது பொய்யாகவோ, புரட்டாகவோ, புரளியாகவோ, புளுகாகவோ, எதுவாகவோ இருந்தாலும் அது ஓர் உண்மையைப் புலப்படுத்தி நிற்கின்றது.

அந்த உண்மை வலியைத் தரக்கூடிய, சுட்டெரிக்கக்கூடிய உண்மையாகும்.

ஆண்டாண்டு காலமாக தமிழினத்திற்கு எதிராகச் சிங்கள-பௌத்த பேரினவாதம் தொடர்ந்து செயல்பட்டே வந்திருக்கின்றது என்ற யதார்த்தத்தை எமக்கு மகாவம்சம் உணர்த்தியுள்ளது. மகாவம்சம் என்ற பண்டைக்கால சிங்களப் பேரினவாதத்தின் தற்காலத்து நீட்சி தான் சிறிலங்காவின் இன்றைய அரசியல் யாப்பு! வரலாற்று ரீதியாக இரத்தத்தோடு இரத்தமாக வேரூன்றிப் போயுள்ள சிங்களப் பேரினவாதத்தை அடையாளம் கண்டு அதனை வேரறுக்காமல் விட்டால் இங்கே நியாயமான தீர்வுகள் எதுவும் கிட்டப்போவதில்லை.

தமிழீழ மக்களுக்கு எதிராக இயற்றப்பட்டுள்ள சிறிலங்காவின் அரசியல் யாப்பு இன்று சிங்களத்தின் இரண்டு தலைமைகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் உதவியாகத்தான் இருக்கின்றது. தமிழர்களின் உரிமையைத் தருவதைத் தடுக்கக்கூடிய விதத்தில் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அது உதவி செய்கின்றது. அரசியல் யாப்பையே காரணம் காட்டி வெளிநாடுகளின் நல்லாதரவையும், பொருளாதார உதவியையும் பெற்று நல்ல பெயரையும் வாங்கிடுவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் இதே யாப்பு உதவி செய்கின்றது.

இந்த அரசியல் யாப்பு இருக்கின்றதே அது ஒரு வித்தியாசமான படைப்புத்தான்! அதனை எதிர்ப்பதாகக் கூறி ஒழிப்பதாகச் சபதம் செய்தவர்களையெல்லாம் அது தன்னுள் உள்வாங்கித் தாலாட்டுப்பாடிச் சுகமளித்துவிடும். ''ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பேன்'' என்று சபதமி[illegible] பதவிக்கு வந்த சந்திரிக்[illegible] அம்மையார் இன்றுவ[illegible] அரசியல் யாப்பு தனக்க[illegible] எதேச்சகரமான அதிகாரங்களை அனுபவித்துப் பிரயோகித்து வருகின்றார். ஜனாதிபதி சந்திரிக்காவின் நிறைவேற்று அதிகாரங்களைக் கண்டித்து வருகின்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ எப்போது 'தான் அடுத்த ஜனாதிபதியாக வரலாம்'' என்று எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றார். கடந்த ஐம்பதாண்டு கால அரசியல் வரலாறு இன்னுமொரு உண்மையையும் எமக்குச் சுட்டிக் காட்டி நிற்கின்றது. சிங்கள இனவாதத்தை வெளிப்படையாகக் காட்டி ஆட்சியைக் கைப்பற்றிய சிங்களத் தலைவர்கள் ஒரு வகை என்றால் 'தமிழர்களுக்குச் சம உரிமையைத் தந்து தமிழர்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்போம்'' என்று கூறி ஆட்சியைக் கைப்பற்றிய சிங்களத் தலைவர்கள் இன்னொரு வகை என்பதையும் வரலாறு சுட்டி நிற்கின்றது. இந்த இரண்டு வகையினராலும் தமிழினத்திற்கு இதுவரை எந்தவிதமான விமோசனமும் கிடைக்கவில்லை என்பதை நாம் அறிவோம்.

சிங்களத் தலைமைகளுக்கிடையே ஏற்பட்டுள்ள இந்த இழுபறி நிலையால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது எமது மக்களின் இயல்பு வாழ்க்கையேயாகும். இரண்டு தசாப்த காலமாகப் போருக்கு முகம் கொடுத்து வந்ததோடு மட்டுமல்லாது சிங்கள அரசினால் அமுலாக்கப்பட்ட உணவு, மருந்து, பொருளாதாரத் தடைகளினாலும் இன்னல்பட்டுத் தவித்தது இந்தத் தமிழினம். இன்று சமாதானப் பே[illegible] வார்த்தைகள் ஊடே [illegible]ட்டமாக எமது மக்கள் [illegible] வாழ்க்கை இயல்பு நி[illegible]லைக்குத் திரும்புவதை எதி[illegible]நோக்கிக் காத்து நிற்கின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கியிருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த ஆலோசனைகள் அமுலாக்கப்படும் நாளை எண்ணி தமிழினம் பொறுமை காத்து நிற்கின்றது.

இன்று சிங்களத்தில் அரங்கேறியிருக்கும் அரசியல்க் கபட நாடகம் சில திருப்பங்களைச் சந்திக்கலாம். சிங்கள சக்திகளுக்கிடையில் சமரசம் ஒன்றும் ஏற்படலாம். இல்லை - தேர்தல் ஒன்று நடைபெறலாம் அல்லது இரண்டுமில்லாது இழுபறிப்பட்டுக் கொண்டே போகலாம்! ஆனால் தமிழினம் இனியும் தாங்கி நிற்குமா? சிங்கள அரசியல் வாதிகளின் வழமையான கபட நாடகங்கள் ஊடே நல்லதொரு முடிவு வரக்கூடுமா?

-நன்றி தமிழ்நாதம்-

## வங்கக் கடலில்......

15ம் பக்கத் தொடர்ச்சி......

தொழில் நுட்ப ரீதியாக உலகில் ஏராளமான நாடுகள் கடற்படையை மிகப்பாரிய வளர்ச்சி யுடையதாக உருவாக்கி வைத்து ள்ளனர். கடற்படைக்கான தளபாட வசதிகளைத் தொழில் நுட்பத்துடன் ஸ்ரீலங்கா கடற்படையும் வேறு நாடுகளைப் போலவே பெருக்கி வைத்துள்ளது. இருந்தும் கடற்புலி களிடம் பாரிய தோல்விகளைச் சந்தித்தே வந்துள்ளது.

இதில் என்ன புதுமையெ ன்றால் கடற்புலிகளிடம் எந்தத் தொழில் நுட்பத்தினாலும் அளவிட முடியாத ஒன்று உள்ளது. அது வேறொன்றுமல்ல ''மன உறுதி'' இதொன்றை வைத்து வெற்றிகளைத் தமதாக்கி தமிழர் கடற்படை தமிழீழக் கடலலையினை மூசிக் கிழித்துச் செல்வது காலத்தின் தேவை. இதனை வளர்த்தெடுக்க தமதுயிரை விலையாகத் தந்தவர்களை எம் நெஞ்சிருத்தி வழிபட வேண்டியது தமிழினம். இந்த மண்ணுடன் கலந்து செய்ய வேண்டியது. காலம் கனியும் போது தமிழர் தாயகத்தின் அனைத்து கடற்பரப்பிலும் கடற்புலிக ளிற்கான சுடரேற்றப்பட வேண்டும்.

## மணலாறு; தமிழர்...

4ம் பக்கத் தொடர்ச்சி....

மணலாற்றின் போரியல் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, இந்திய இராணுவம் 1988 - 89களில் மேற்கொண்ட ''செக்மேற்'' 1,2,3 படை நடவடி க்கைகளும் சிறிலங்கா இராணுவம் பெருத்த எடுப்பில் முன்னெடுத்த ''மின்னல்'' படை நடவடி க்கைகளும் கடும் தோல்வியைத் தழுவியதை ஆய்ந்தறியலாம். 1993 ஜுலை 25ல் ''இதய பூமி-1'' படை நடவடிக்கை மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் மண் கிண்டி மலை (ஜனகபுர) படைத் தளத்தைத் தாக்கி அழித்ததுடன், ''ஜயசிக்குறூயி'' எதிர்ப்புச் சமர், ''ஓயாத அலைகள் - 3'' (1999 நவம்பரில்) மண்மீட்பு படை நடவடி க்கைகள் மூலம் மணலாற்றின் பெரும் பரப்பை விடுவித்து மீளத் தமிழர் வசமாக்கியுள்ளமை இங்கு குறிப்பிட வேண்டியதாயிற்று.

தமிழர் தாயகத்தின் இதய பூமியான மணலாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது தீர்க்க தரிசன சிந்தனையால் இன்று வரை போராட்ட சக்தியின் செயற்பாட்டுப் பிரதேசமாகவே அமை வதன் மூலம் தனிச்சிறப்பைத் தனதாக்குகிறது.

ஒட்டு மொத்தத்தில், மண லாறு தமிழர் தாயக மீள் உரு வாக்கத்திற்கு மிக இன்றியமை யாதது. வடக்கு -கிழக்கு மாகாண இணைப்பு தொடர்பான ஈழத் தமிழர்களின் அரசியல் நிலைப் பாட்டிற்கு மணலாறு விடுவிக்கப்பட்ட தாக அமைய வேண்டும் என்பதைப் போர் ஓய்வு சமாதானப் பேச்சு வார்த்தைக் காலத்திலும் உள்வாங்கி தேசப் பணியாற்றுவதே நீதியான நிறைவான அமைதிக்கு வழிவகு க்கும் எனலாம்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)

# அலையின் பார்வையில்




## போரில் பாதிப்புற்றோருக்கு இடைத்தங்கல் முகாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டு சிறுவர்களுக்கு சுயதொழில் பயிற்சி அளிக்கவுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நடவடிக்கையின் முதற் கட்டமாக இடைத்தங்கல் முகாம் பணியாளர்களுக்கு பயிற்சி நெறி அளிக்கப்பட்டது. மட்டக்களப்பு சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி நெறி ஆரம்பவைபவத்தின் போது சிறுவர் நலத்திட்ட முகாமையாளர் நாகேந்திரன், சமூக நல பயிற்சி உத்தியோகத்தர் எம்.சி.எம் டபிள்யூ. இப்றாகிம் ஆகியோர் குத்துவிளக்கேற்றுவதையும், அருகில் யுனிசெப் மட்டக்களப்பு மாவட்ட வதிவிடப் பிரதிநிதி ஜேம்ஸ் அன்றியா அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## மட்டக்களப்பில் கண்ணிவெடிகள் செயலிழப்பு




மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசமான வெல்லா வெளி, தம்பட்டை ஆகிய இடங்களில் கண்ணி வெடி அகற்றும் பணிக ள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மெக்நிறுவனத்தினர் மேற் கொண்ட மிதிவெடிகள் தேடுதல் நடவடிக்கையின் போது மீட்டெடுக்கப்பட்ட கண்ணி வெடி வெற்றுறைகளைப் படத்தில் காணலாம்.

புல்லுமலை, ஏறாவூர் ஆகிய இடங்களிலும் கண்ணி வெடி கள் மெக் நிறுவனத்தினரால் மீட்கப் பட்டு செயலிழக்கச் செய்யப் பட்டது. புல்லுமலையை அண்டிய பகுதியான கொஸ்கொல்ல என்னுமிடத்தில் பெல்ஜியம் நாட்டைச் சோந்த 40எம்.ரக மிதிவெடி யொன்றும் ஏறாவூர் 5ம் குறிச்சி வீரபத்திரன் கோயில் வீதியில் உள்ள காணியில். 80 எம்.ரக கண்ணி வெடி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு செயலிழக்கப்பட்டது.

## 2ம் லெப் விழிமேனன்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 26 - 05 - 1980 |  | 21 - 12 - 2000 |

**மாணிக்கவாசகம்-இராஜரூபன்**

(பழுகாமம்)

பொங்கும்உணர்வுகளுடன்
புயலாகப் புறப்பட்டாய்
எங்கள்தமிழீழமதில்
எத்தர்களைவிரட்டிநின்றாய்
தென்தமிழீழமதில்பகைவன்
தங்கியபாசறைபொசுகி
ஏந்தியஆயுதத்தில்அனல்பறக்க
ஏறுபோல்வீறுகொண்டுநடந்தாய்
போதும்உன்பணியென்றோ!
புரட்சியுடன்உறங்கினாய்,
உன்கனவுபலிக்கும்நாள்

குடும்பத்தினர் பழுகாமம்




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் உபதலைவர் ராகுல் டிராவிட் அபார துடுப்பாட்டத்தின் மூலம் 22வருட காலத்துக்கு பின் வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளார். 835 நிமிடங்கள் துடுப்பெடுத்தாடி 305 ஓட்டங்களைப் பெற்று இந்திய அணிக்கு பெருமை சேர்த்தார்.

## சாதனை வீரன் ராகுல்



## சதாமின் வாழ்வின் இரகசிய இருப்பிடங்கள்

தங்க வட்டிலியில் உணவருந்தி தங்கக் கட்டிலில் படுத்துறங்கிய சதாம் இறுதிக் கணத்தில் இப்படியுமொரு வாழ்வோ! அ மெரிக்க படைகளிடம் சரணடைய முன் வாழ்ந்த நடமாட்டம ற்ற வீடு சதாமின் படுக்கையறை. சதாமின் வாழ்வின் இரகசிய சமையல் அறை.



இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 21.12.2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.